தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வலர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

MLM SOFTWARE Company
- Binary MLM Plan
- Single Leg MLM Plan
- Autopool MLM Plan
- Unilevel MLM Plan
- Matrix MLM Plan
- Stairstep MLM Plan
- Party MLM Plan
- Board MLM Plan
- Generation MLM Plan

PRICE STARTING Rs.9999/-
+91 98537 19337

CHENNAI | Volume- 3 | Issue:182 | 17-01-2026 | சனிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

17.01.2026 தை 3
சனிக்கிழமை

சூரிய உதயம் 6.34

திதி:
இன்று முழுவதும் சதுர்த்தசி.

நட்சத்திரம்:
இன்று காலை 9.40 வரை மூலம் பின்பு பூராடம்.

யோகம் :
இன்று இரவு 10.51 வரை வ்யாகாதம் பின்பு ஹர்ஷனம்.

கரணம் :
இன்று பிற்பகல் 12.31 வரை பத்திரை பின்பு சகுனி.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.33 வரை அமிர்த யோகம் பின்பு சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று காலை 9.40 வரை கார்த்திகை பின்பு ரோகிணி.

நல்ல நேரம்
காலை 10.30 – 11.30.
மாலை 4.30 – 5.30.
இராகு காலம்
காலை 9.00 – 10.30.
எமகண்டம்
பிற்பகல் 1.30 – 3.00.

குளிகை
காலை 6.00 – 7.30

இன்று உழவர் திருநாள்

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# மும்பை உள்ளிட்ட பெரும்பாலான மாநகராட்சிகள் 'பாஜக - சிவ சேனா' வெற்றி

**மும்பை, ஜன.17:**

மகாராஷ்டிரா தலைநகர் மும்பை உள்ளிட்ட 29 மாநகராட்சிகளுக்கு நேற்று நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்பட்டு வருகின்றன. மும்பை உள்ளிட்ட பல மாநகராட்சிகளில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இன்னும் சில மாநகராட்சிகளில் வாக்கு எண்ணிக்கை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மாலை 6 மணி நிலவரப்படி, எந்தெந்த கட்சிகள் எந்தெந்த மாகராட்சிகளில் எத்தனை எத்தனை இடங்களில் வெற்றி பெற்றன என்ற விவரத்தை இப்போது பார்ப்போம்.



**மும்பை மாநகராட்சி:** மும்பை மாநகராட்சியை பாஜக - சிவ சேனா கூட்டணி கைப்பற்றுகிறது. மொத்தமுள்ள 227 வார்டுகளில், பாஜக 85 வார்டுகளிலும், சிவ சேனா 27 வார்டுகளிலும் வெற்றி பெற்றுள்ளது. இதன்மூலம் இக்கூட்டணி 112 வார்டுகளில் வெற்றி பெற்றுள்ளது. பெரும்பான்மைக்கு 114 வார்டுகளின் வெற்றி தேவை எனும் நிலையில், சற்று குறைவான எண்ணிக்கையில் இக்கூட்டணி வெற்றி பெற்றுள்ளது. அதேநேரத்தில், வேறு சில கட்சிகளின் ஆதரவுடன் இக்கூட்டணி மேயர் வேட்பாளரை தேர்வு செய்யும் என எதிர்பார்க்கலாம்.

26 ஆண்டுகளாக ஒருங்கிணைந்த சிவ சேனாவின் கட்டுப்பாட்டில் மும்பை மாநகராட்சி இருந்து வந்தது. ஏக்நாத் ஷிண்டேவால் ஏற்பட்ட பிளவை அடுத்து, உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவ சேனா வெற்றி வாய்ப்பை இழந்துள்ளது.

அதேநேரத்தில், உத்தவ் தாக்கரேவின் சிவ சேனா 72 வார்டுகளில் வெற்றி பெற்றுள்ளது. அதன் கூட்டணி கட்சியான மகாராஷ்டிரா நவ நிர்மாண் சேனா (எம்என்எஸ்) 10 வார்டுகளில் வெற்றி பெற்றுள்ளது. காங்கிரஸ் 21 வார்டுகளில் வெற்றி பெற்றுள்ளது. சரத் பவாரின் தேசியவாத காங்கிரஸ் ஒரு வார்டிலும், அஜித் பவாரின் தேசியவாத காங்கிரஸ் இரண்டு வார்டிலும் வெற்றி பெற்றுள்ளன.

**நவி மும்பை மாகராட்சி:** நவி மும்பையிலும் முடிவுகள் முழுமையாக வெளியாகி உள்ளன. இந்த மாநகராட்சியில் மொத்தமுள்ள 111 வார்டுகளில், பாஜக 66 வார்டுகளிலும், சிவ சேனா 42 வார்டுகளிலும் வெற்றி பெற்றுள்ளன.

இதன்மூலம், இக்கூட்டணி 108 வார்டுகளில் வெற்றி பெற்று ஏறக்குறைய மொத்தமாக மாநகராட்சியை தங்கள் வசப்படுத்தி உள்ளன. உத்தவ் தாக்கரேவின் சிவ சேனா 2 வார்டுகளிலும், எம்என்எஸ் ஒரு வார்டிடும் வெற்றி பெற்றள்ளன. காங்கிரஸ் உள்ளிட்ட பிற கட்சிகள் ஒரு வார்டில் கூட வெற்றி பெறவில்லை.

**நாசிக் மாகராட்சி:** மகாராஷ்டிராவின் மற்றொரு முக்கிய மாநகராட்சியான நாசிக்கிலும் பாஜக - சிவ சேனா கூட்டணியே வெற்றி பெற்றுள்ளது. மொத்தமுள்ள 112 வார்டுகளில், 107 வார்டுகளுக்கான முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதில், பாஜக 67 வார்டுகளையும், சிவ சேனா 24 வார்டுகளையும் பெற்றுள்ளன. சிவ சேனா (உத்தவ் தாக்கரே) 8 வார்டுகளிலும், அஜித் பவாரின் தேசியவாத காங்கிரசும், காங்கிரசும் தலா 3 வார்டுகளிலும் வெற்றி பெற்றுள்ளன. எம்என்எஸ் ஒரு வார்டில் வெற்றி பெற்றுள்ளது.

மகாராஷ்டிர ஆளும் கட்சியான பாஜகவும் சிவ சேனாவும் களத்தில் மிகவும் வலுவாக இருப்பதையே தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. உத்தவ் தாக்கரேவும் ராஜ் தாக்கரேவும் கூட்டணி அமைத்ததால் அது இந்த தேர்தலில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என பேசப்பட்டது.

எனினும், அந்த அணி வலுவாக இருப்பதாக சொல்லப்பட்ட மும்பையில் கூட மேயரை தேர்வு செய்யும் பலத்தைப் பெறவில்லை. காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் (சரத் பவார்) ஆகிய கட்சிகளும் செல்வாக்கை பெருமளவில் இழந்துள்ளதை இந்த தேர்தல் முடிவுகள் உணர்த்துகின்றன.

**பிரதமர் நரேந்திர மோடி, அமித் ஷா நன்றி**

மகாராஷ்டிர உள்ளாட்சித் தேர்தலில் ஆளும் பாஜக கூட்டணி பெரும்பான்மை இடங்களில் தொடர்ந்து முன்னிலை வகிக்கிறது. இதனால் பாஜக தலைமை மகிழ்ச்சியில் உள்ளது. இதையடுத்து, மகாராஷ்டிர மக்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி, அமைச்சர் அமித் ஷா, மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர பட்னவீஸ் உள்பட பாஜக தலைவர்கள் பலரும் நன்றி தெரிவித்துள்ளனர்.

## வரும் 19ம் தேதி தமிழக காங்கிரஸ் பொதுக்குழு கூட்டம்

**சென்னை, ஜன.17:**

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் செயற்குழு, பொதுக்குழு கூட்டம் வரும் 19ம் தேதி காலை 10 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை தலைமையில் தேனாம்பேட்டை காமராஜர் அரங்கில் பொதுக்குழு கூட்டம் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் நிலவும் பல்வேறு அரசியல் மாற்றங்களுக்கு மத்தியில் இந்தக் கூட்டம் நடைபெறுவதால், இது அரசியல் வட்டாரத்தில் பெரும் எதிர்பார்ப்பைஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக, காங்கிரஸ் கட்சியின் அடுத்தகட்ட நகர்வுகள் மற்றும் போராட்டங்கள் குறித்த அறிவிப்புகள் இந்தக் கூட்டத்திற்குப் பிறகு வெளியாகலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

## 'வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் அடுத்த 20 ஆண்டுகள் மிக முக்கியமானவை'

**ஜனாதிபதி திரவுபதி முர்மு**

**சண்டிகர், ஜன.17:**

பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் மாவட்டத்தில் உள்ள குருநானக் தேவ் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் ஜனாதிபதி திரவுபதி முர்மு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி கவுரவித்தார். இந்த விழாவில் ஜனாதிபதி திரவுபதி முர்மு பேசியதாவது;-

"பட்டப்படிப்பை முடித்த பிறகு, மாணவர்கள் அரசு மற்றும் தனியார் பணிகள், உயர்கல்வி, ஆராய்ச்சி, தொழில்முனைவு அல்லது கற்பித்தல் தொழில் உள்ளிட்ட பல்வேறு திசைகளில் பயணங்களை தொடங்குவார்கள்.

ஒவ்வொரு துறைக்கும் வெவ்வேறு தகுதிகள் மற்றும் திறன்கள் தேவைப்பட்டாலும், அனைத்து துறைகளிலும் முன்னேற்றத்திற்கு சில குணங்கள் அவசியம். அதில் முக்கியமாக



கற்றல் மீது இருக்கும் ஆர்வம், நேர்மை, மாற்றத்தை ஏற்கும் தைரியம், தோல்வியில் இருந்து கற்றுக்கொள்ளும் உறுதிப்பாடு, அறிவு மற்றும் திறன்களை தேசத்தின் நன்மைக்காக பயன்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

இந்த குணங்கள் மாணவர்களை நல்ல நிபுணர்களாக மட்டுமல்லாமல் பொறுப்புள்ள குடிமக்களாகவும் மாற்றும். கல்வி என்பது வெறும் வாழ்வாதாரத்திற்கான வழிமுறை மட்டுமல்ல, சமூகத்திற்கும் தேசத்திற்கும் சேவை செய்வதற்கான ஒரு வழிமுறையாகும்.

மாணவர்கள் தங்கள் கல்விக்கு பங்களித்த சமூகத்திற்கு கடன்பட்டிருக்கிறார்கள். சமூகத்தில் பின்தங்கியவர்களை உயர்த்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்வது இந்த கடனை அடைப்பதற்கான ஒரு வழியாகும்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் அடுத்த 20 ஆண்டுகள் மிக முக்கியமானவை. இந்தியாவின் எதிர்காலம் அறிவியல் மனப்பான்மை கொண்ட, தன்னலமின்றி சேவை செய்யும் இளைஞர்களை சார்ந்துள்ளது. உயர்கல்வி நிறுவனங்கள் இந்த மதிப்புகளை தங்கள் மாணவர்களிடம் வளர்க்க வேண்டும்.

இளம் மாணவர்கள் தாங்கள் எந்த தொழிலை தேர்ந்தெடுத்தாலும், அவர்களின் பணியானது தேசத்தை வலுப்படுத்தவும், மனித மதிப்புகளை வலுப்படுத்தவும் உதவுவதை உறுதி செய்ய வேண்டும்."இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## மகாமேளா: மகர சங்கராந்தியை முன்னிட்டு கங்கை நதியில் 21 லட்சம் பேர் புனித நீராடல்

**லக்னோ, ஜன.17:**

உத்தர பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் ஆண்டுதோறும் மகாமேளா நடத்தப்படுகிறது. இந்த மகாமேளா காலத்தில் அங்கு புனித நதியான கங்கை நதியிலும், திரிவேணி சங்கமத்திலும் பெருந்திரளானோர் புனித நீராடுவது வழக்கம். இந்த மகாமேளா பிப்ரவரி 15-ந்தேதி வரை 44 நாட்கள் நடைபெறுகிறது. இதில், ஜனவரி 15 (மகர சங்கராந்தி), ஜனவரி 18 (மவுனி அமாவாசை), ஜனவரி 23 (வசந்த பஞ்சமி), பிப்ரவரி 1 (மகி பூர்ணிமா) மற்றும் பிப்ரவரி 15 (மகா சிவராத்திரி) ஆகியவை புனித நீராடல் செய்வதற்கான முக்கிய நாட்கள் ஆகும். இதன்படி மகர சங்கராந்தியான இன்று, கங்கை நதியில் புனித நீராடுவதற்காக லட்சக்கணக்கான பக்தர்கள் திரண்டனர். கங்கை நதி மற்றும் திரிவேணி சங்கமத்தில் இன்று நள்ளிரவு தொடங்கி காலை 8 மணி வரை சுமார் 21 லட்சம் பேர் புனித நீராடினர்.

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
- Public Notice
- Loss of Share
- Legal Notice
- Merger
- Tender Notice
- Acquisition
- Society Notice
- AFR, UFR, etc.

for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர்
9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com

## பாலமேடு ஜல்லிக்கட்டு நிறைவு- 16 காளைகளை அடக்கி இருவர் முதலிடம்

**சென்னை, ஜன.17:**

உலகப்புகழக பெற்ற மதுரை பாலமேடு ஜல்லிக்கட்டு போட்டி நிறைவு பெற்றது.

ஜல்லிக்கட்டு போட்டியில் 10 சுற்றுகள் முடிந்த நிலையில், போட்டியின் முடிவில் மதுரை பாலமேடு ஜல்லிக்கட்டில் பொந்துகம்பட்டி அஜித், பொதும்பு பிரபாகரன் இருவரும் தலா 16 காளைகளை அடக்கி முதலிடம் பிடித்துள்ளனர்.

இந்த போட்டியில் சிறப்பாக களம்கண்ட காளையின் உரிமையாளருக்கு முதலமைச்சர் சார்பில் டிராக்டர் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

16 காளைகளை அடக்கி முதலிடம் பிடித்த அஜித், பிரபாகரன் இருவரில் யாருக்கு கார் பரிசு என்பது கேள்விக் குறியாக இருந்தது.



குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படும் மாடுபிடி வீரருக்கு காரும் மற்றொரு நபருக்கு பைக்கும் பரிசாக வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டது.

ஜல்லிக்கட்டு போட்டிகளில் இதுவரை 4 முறை கார் பரிசு வென்ற பிரபாகரன் மீண்டும் கார் பரிசை வெல்வாரா என எதிர்பார்ப்பு எழுந்தது.

இந்நிலையில், 16 காளைகளை அடக்கி சிறந்த மாடுபிடி வீரருக்கான கார் பரிசை பொந்துகம்பட்டி அஜித் தட்டிச்சென்றார். அஜித், பிரபாகரன் தலா 16 காளைகளை அடக்கி முதலிடத்தில் இருந்ததால் குலுக்கல் முறையில் முதலிடம் தேர்வு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

SEND AN EMAIL WITH Hi TO
tamilnaduepaper@gmail.com
RECEIVE OUR DAILY NEWSPAPERS & MAGAZINES

## திருக்குறள் குறள்-502

குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு



நல்லகுடியில் பிறந்து குற்றங்களிலிருந்து நீங்கிப் பழியாச் செயல்களைச் செய்ய அஞ்சுகின்ற நாணம் உடையவனையே நம்பித் தெளிய வேண்டும்.

## சிந்திக்க ஒரு நொடி



பணக்காரன் மகன் செலவாளி
செலவாளி மகன் கடனாளி
கடனாளி மகன்
பொறுப்பாளி
பொறுப்பாளி மகன்
பணக்காரன்
இது தான் வாழ்க்கை

**ராஜகோபாலன்.J**
சென்னை 18

## தங்க சப்பரம் ஈக்காடு புறப்பாடு




ஸ்ரீ வைத்திய வீரராகவ சுவாமி தேவஸ்தானம் திருவள்ளூர் தை ப்ரம்மோத்ஸவம் முதல் நாள் காலை தங்க சப்பரம் ஈக்காடு புறப்பாடு

## தை வெள்ளி



காரைக்கால் மாவட்டம் கோட்டுச்சேரி அருள்மிகு வரதராஜ பெருமாள் கோயிலில் எழுந்தருளியுள்ள பெருந்தேவி தாயாருக்கு தை வெள்ளியை முன்னிட்டு சிறப்பு திருமஞ்சனம் மற்றும் மகா தீபாராதனையும் நடைபெற்றது. பக்தர்களுக்கு தீர்த்தம் சடாரி துளசி மற்றும் இதர பிரசாதங்கள் வழங்கப்பட்டன . **தகவல் : ஸ்ரீகாந் கோட்டுச்சேரி**

## மகா நந்திக்கு காய்கறிகள், பழங்கள், சிறப்பு அலங்காரம்



தஞ்சாவூர் பெரிய கோவிலில் நேற்று (16.01.2026) மாட்டுப் பொங்கலை முன்னிட்டு காலை மகா நந்திக்கு காய்கறிகள், பழங்கள், இனிப்பு வகைகளால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மகாதீபாராதனை நடைபெற்றது.

**செய்தி: தேனே T.P.குமரன், மகர் நோம்புச் சாவடி, தஞ்சாவூர்.**



## பெருமாளும், தாயாரும் தீர்த்தவாரி கண்டருளினர்

நாங்குநேரி வானமாமலை பெருமாள் கோயிலில் நேற்று கணு திருநாளை முன்னிட்டு, பெருமாளும், தாயாரும் தீர்த்தவாரி கண்டருளினர்.



## சிறப்பு அலங்காரத்தில் அருள் பாலிக்கும் சர்வலிங்கேஸ்வர பெருமான்

போச்சம்பள்ளி, வடமலைப்பட்டி சர்வலிங்கேஸ்வரர் ஆலயத்தில் பிரதோஷத்தை முன்னிட்டு சிறப்பு அலங்காரத்தில் அருள் பாலிக்கும் சர்வலிங்கேஸ்வர பெருமான்

## சீர்காழியில் திருவள்ளுவர் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை



**சீர்காழி , ஜன , 17 :** திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு மாட்டு பொங்கல் அன்று மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி புதிய பேருந்து நிலையம் அருகே திருவள்ளுவர் திருவுருவ படத்திற்கு நமது நாகை வள்ளுவர் குல சங்கம் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. பொது மக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் நமது நாகை வள்ளுவர் குல சங்கத்தின் மயிலாடுதுறை மாவட்ட தலைவர் மாங்குடி எஸ். பிரபாகரன், செயலாளர் சேந்தங்குடி ஆர். சரவணன், பொருளாளர் ஜோதி.சிவா மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

## ஏரியூரில் திருவள்ளுவர் தின கொண்டாட்டம்



**ஏரியூர், ஜன.17:** ஏரியூர் தமிழ்ச் சங்கம் மற்றும் சிகரல அள்ளி இயற்கை மற்றும் கல்வி அறக்கட்டளை சார்பில் திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு இல்லங்களில் திருக்குறள், இயற்கையோடு இணைவோம், வாழும் வள்ளுவமும் எனும் பொருண்மையில் முப்பெரும் விழா ஏரியூர் பேருந்து நிலையத்தில் நடைபெற்றது.

நிகழ்விற்கு சமூக ஆர்வலர் மா.நரசிம்மகுமார் தலைமை வகித்தார். சிகரல அள்ளி இயற்கை மற்றும் கல்வி அறக்கட்டளை நிர்வாகி இயற்கை துரை முத்துக்குமார், சமூக ஆர்வலர் கமலேசன், ஜெயபிரகாஷ், வெண்ணிலா மல்லமுத்து, கோகுல்காந்தி, அ.சதீஸ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னதாக ஏரியூர் தமிழ்ச் சங்கத்தின் நிறுவுநர் மற்றும் தலைவர் நா.நாகராஜ் வரவேற்று பேசினார்.

தமிழ் ஆர்வலர் காதர், கு.ஹரி, ஆகியோர்வாழ்த்துரை வழங்கினர். நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக சின்னப்பள்ளத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியர் மா.பழனி பங்கேற்று பேசினார்.

அப்போது அவர் பேசுகையில் " திருவள்ளுவர் தினத்தை தமிழக அரசு வெகு விமரிசையாக கொண்டாடி வருகிறது.

பொதுமக்களிடம் திருக்குறள் சார்ந்த சிந்தனைகளை கொண்டு சேர்ப்பது இன்றைய காலகட்டத்தில் அவசியமாகிறது. மாணவர்களுக்கு திருக்குறளின் அறநெறி கருத்துக்களை எடுத்துரைக்க வேண்டும். வீடுகளில் கண்டிப்பாக திருக்குறள் புத்தகம் வைத்திருக்கும் வேண்டும் மேலும் ஒவ்வொரு நாளும் ஒரு திருக்குறளை படித்து வாழ்க்கையில் பின்பற்ற வேண்டும்.இன்றைய தலைமுறையினருக்கு திருக்குறளின் உன்னத கருத்துக்களை அவசியம் கொண்டு சேர்க்க வேண்டும். மதிப்புமிக்க மனிதனாக வாழ திருக்குறள் அவசியம் படித்து வாழ்வில் பின்பற்ற வேண்டும் .

திருக்குறள் சார்ந்தும் , இயற்கை வாழ்வியலோடும் வாழ வேண்டும் என்றார்.

சிகரல அள்ளி இயற்கை மற்றும் கல்வி அறக்கட்டளை நிர்வாகி இயற்கை . துரை முத்துக்குமார் நன்றி கூறினார்.

நிகழ்வின் நிறைவாக மாணவர்களுக்கு திருக்குறள் புத்தகம் வழங்கப்பட்டது. திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு பொதுமக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.

நிகழ்வில் ஏரியூர் காவல் துறையினர், மாணவ மாணவிகள், பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## நிர்மலா கல்லூரி மாணவிகள் பரதநாட்டியம் மூலம் ஆடி சாதனை



கோவை நிர்மலா கல்லூரி மாணவிகள் 1330 திருக்குறள்களுக்கு ஏற்ப 4 மணி நேரம் 30 நிமிடத்தில் பரதநாட்டியம் மூலம் ஆடி சாதனை படைத்தனர்.

## பாரத் முன்னணியின் மாட்டுப்பொங்கல் கோ பூஜை



சென்னை திருவொற்றியூர் தொகுதியில் பாரத் முன்னணி அமைப்பின் திருவொற்றியூர் தொகுதி தலைவர் திரு. நீலகண்ட குமரன் சுவாமிகள் தலைமையில் மாட்டுப்பொங்கல் திருவிழா கொண்டாடப்பட்டது. அதில் பாரத் முன்னணி அமைப்பின் நிறுவனர், தலைவர் திரு. கே.எஸ்.சிவாஜி, மாவட்ட தலைவர் திரு. எம்.எஸ்.ஆர். காந்தி, சந்த் மஹா சபா மாநிலப் பொதுச்செயலாளர் திரு. தீபம் சண்முகம், தொழிலதிபர் திரு. கே.ஜெயராமன், எஸ்.ஆர்.கால் டிரைவர்ஸ் உரிமையாளர் திரு. ஸ்ரீராமுலு ஆகியோர் கலந்து கொண்டு கோ பூஜை செய்தனர். இதில் ஏராளமான பாரத் முன்னணி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



நேற்று புதுபாடி கிராமத்தில்அலங்கரிக்கப்பட்டிருந்த சுவாமி.

## ஸ்ரீஆற்காட்டம்மன் ஆலயத்தில் மகாதீபாரதனை



**விழுப்புரம், ஜன.17:** விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி நல்ல தண்ணீர் குளம் அருகில் அமைந்திருக்கும் ஶ்ரீ ஆற்காட்டம்மன் ஆலயத்தில் தை மாத பிறப்பு, பொங்கல் திருவிழாவை முன்னிட்டு காசிலிங்கம் பூசாரி அவர்களால் அபிஷேகம் பால், தயிர், சந்தனம், பன்னீர், தேன், பஞ்சாமிர்தம், வெட்டிவேர் வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்காரங்கள், எலுமிச்சம்பழம் மாலைகளுடன், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் , மகாதீபாரதனையும் நடைபெற்றது. பக்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார்கள். இன்றைய உபயதாரர் பத்மநாபன் EB செட்டியார் அவர்கள் திருவண்ணாமலை.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## அரும்பூர் சிவாலயத்தில் பிரதோச வழிபாடு



**மயிலாடுதுறை, ஜன17:** மயிலாடுதுறை மாவட்டம் & வட்டம் குளிச்சார் ஊராட்சி அரும்பூர் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஶ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத ஶ்ரீ அக்னீபுரீஸ்வரர் ஆலயத்தில்..(16-1-2026) மாட்டுப்பொங்கல் மற்றும் பிரதோச திருநாளை முன்னிட்டு ஶ்ரீ அக்னீபுரீஸ்வரர்,ஶ்ரீ அகிலாண்டேஸ்வரி அம்மன் ,நந்தியம்பெருமான் ஆகியோருக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து வடை மற்றும் இனிப்பு பட்சண மாலை அலங்காரத்தில் நந்தியம்பெருமான் பக்தர்களுக்கு காட்சியளித்து அருள்பாலித்தார்.

**தகவல்:-அரும்பூர்.க.குமாரகுரு,மயிலாடுதுறை**

## தமிழர் திருநாளாம் பொங்கல் விழா..!



**வந்தவாசி, ஜன 17:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி பொட்டி நாயுடு தெரு முத்தமிழ் சமூகநீதி பேரவை மற்றும் குடியிருப்போர் நலச்சங்கம் சார்பில் தமிழர் திருநாளாம் பொங்கல் விழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

இந்த விழாவில் குழந்தைகள் பங்கேற்ற பரதநாட்டியம், சிலம்பம், கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. மேலும் பொங்கலோ பொங்கல் என்ற தலைப்பில் சிறப்பு கவிதை வாசிப்பு, தமிழிசை பாடல்கள் உள்ளிட்டவை நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராக ஆரணி எம்பி எம்.எஸ்.தரணிவேந்தன் பங்கேற்று, தமிழர் திருநாள் பற்றிய சிறப்புரை ஆற்றினார். மேலும் நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவருக்கும் புத்தக பரிசுகள் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் நகர் மன்ற தலைவர் ஜலால், துணைத் தலைவர் அன்னை சீனிவாசன், நகர செயலாளர் தயாளன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் மற்றும் தெரு பிரமுகர்கள் பலரும் பங்கேற்றனர்.

முன்னதாக அப்பகுதி தெருக்களில் கோலப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

## வேலூர் மாவட்டத்தில் பணிபுரியும் அர்ச்சகர்கள் மற்றும் பூசாரிகளுக்கு புத்தாடைகள் வழங்கி இந்து சமய அறநிலையத்துறை அசத்தல்!



**வேலூர், ஜன. 17:** தமிழ்நாடு அரசு சட்டமன்ற அறிவிப்பை தொடர்ந்து தமிழர் திருநாளாம் தைத்திருநாளில் திருக்கோயில்களின் அர்ச்சகர்கள் மற்றும் பூசாரிகளுக்கு இந்து சமய அறநிலையத்துறை சார்பில் புத்தாடைகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்த விழாவில் வேலூர் மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் அசோகன் மற்றும் வேலூர் மண்டல இணை ஆணையர் விஜயா, ஆய்வர் செண்பகம் மற்றும் அனிதா ஆகியோர் கலந்து கொண்டனர்.

புத்த ஆடைகளை பெற்றுக் கொண்ட அர்ச்சகர்கள் மற்றும் பூசாரிகள் இந்து சமய அறநிலையத்துறைக்கு தங்களது நன்றியை தெரிவித்துக் கொண்டு சென்றது குறிப்பிடத்தக்கது.

## அண்ணாவின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



**திருவாரூர், ஜன17:** வலங்கைமானில் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு பேரூர் திமுக சார்பில் பேரறிஞர் அண்ணாவின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

திருவாரூர் மாவட்டம் வலங்கைமானில் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு பேரூர் திமுக சார்பில் பேரூர் செயலாளர் பா.சிவநேசன், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் க.தனித்தமிழ்மாறன், பேரூராட்சி மன்ற உறுப்பினரும், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் க.செல்வம், பெற்றோர் ஆசிரியர் கழக துணைத் தலைவர் புலவர் சிவ.செல்லையன் மற்றும் கட்சி நிர்வாகிகள் பேரறிஞர் அண்ணாவின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

## 1ம் வாரம் ஹம்ச வாகனம்



ஸ்ரீமயூரவல்லி தாயார் தை வெள்ளி விழா நேற்று 1ம் வாரம் ஹம்ச வாகனம்

## சென்னையில் காவல்துறை சார்பில் சமத்துவ பொங்கல்: மாநகர காவல் ஆணையாளர் பங்கேற்பு



சென்னை, ஜன.17:

சென்னை: மாநகர காவல்துறை சார்பில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவில் காவல் ஆணையாளர் அருண் கலந்து கொண்டு காவலர்கள் மற்றும் காவலர் குடும்பத்தினருக்கு வாழ்த்து தெரிவித்தார்.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்: "சென்னை பெருநகர காவல்துறை சார்பாக, சென்னையில் பல்வேறு இடங்களில் சமத்துவ பொங்கல் கொண்டாடப்பட்டு வருகிறது. சென்னை பெருநகர காவல் ஆணையர் அருண், (15.01.2026) காலை, புனித தோமையர் மலை அருகே உள்ள ஆயுதப்படை வளாகத்தில், சென்னை பெருநகர காவல், ஆயுதப்படை, மத்திய குற்றப்பிரிவு மற்றும் தனிப்பிரிவுகள் சார்பில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவில் கலந்து கொண்டு, விழாவினை துவக்கி வைத்து, பொங்கல் நல்வாழ்த்துக்களை தெரிவித்து சிறப்புரையாற்றினார்.

மேலும், பொங்கல் விழாவையொட்டி, காவல் குடும்பத்தினர் வரைந்திருந்த கோலப்போட்டிக்கான கோலங்களை பார்வையிட்டு, கிராமிய பண்பாட்டினை பறைசாற்றும் விதமாக அங்கு அமைக்கப்பட்டிருந்த வயல்வெளி, நாற்று நடுதல், நெற்களஞ்சியம் உள்ளிட்ட கிராம கலைகளை பார்வையிட்டும், காவல் ஆளிநர்கள் மற்றும் காவல் குடும்பத்தினருக்கான கயிறு இழுத்தல், உறியடித்தல், இசை நாற்காலி உள்ளிட்ட விளையாட்டு போட்டிகளை துவக்கி வைத்தார்.

## ஜான் பென்னிகுவிக் பிறந்தநாள் - மு.க.ஸ்டாலின் புகழஞ்சலி

சென்னை, ஜன.17:

தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ்தளபதிவில் தெரிவித்திருப்பதாவது:-

"செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது"

- என்ற வள்ளுவர் வாக்குக்கு இலக்கணமாக, தென் தமிழ்நாட்டு உழவர் பெருமக்களின் உள்ளங்களில் எல்லாம் நிறைந்து வாழும் கர்னல் ஜான் பென்னிகுவிக்கின் பிறந்தநாளில் அவருக்கு என் புகழ்வணக்கம்!

முல்லைப் பெரியாறு அணையினைப் பெருமுயற்சியோடு கட்டி, அப்பகுதி மக்களின் பஞ்சம்-பசி நீக்கிய பென்னிகுவிக் பெருமகனாரின் குடும்பத்தினரை கடந்த ஆண்டு இங்கிலாந்து பயணத்தின்போது சந்தித்திருந்தேன்.

பென்னிகுவிக்கின் பிறந்தநாளையொட்டி, இந்த ஆண்டு அவர்களே நம் தமிழ்நாட்டுக்கு வந்துள்ள செய்தி கண்டு மகிழ்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேர்தல் முடிந்த பின்னர் விஜய் மீண்டும் படம் நடிக்க சென்றுவிடுவார்: நடிகர் எஸ்.வி.சேகர்

ஈரோடு, ஜன.17:

ஈரோடு மாவட்டம் கோபியில் நடிகர் எஸ்.வி.சேகர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:-

தமிழகத்தில் மீண்டும் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆட்சி அமைவது உறுதியாகவிட்டது. யார் வேண்டுமானாலும் அரசியலுக்கு வரலாம். ரசிகர் மன்றத்தை ரசிகர் மன்றமாக நடத்த வேண்டும். இதேபோல் அரசியல் கட்சியையும், அரசியல் கட்சியாக நடத்த வேண்டும். பா.ஜனதா மாநில கட்சிகளை அடக்கி ஆள முயற்சி செய்து வருகிறது. அரசியலில் விஜய் வெற்றி பெறுவது கடினம். சி.பி.ஐ. விசாரணைக்கு உடனே சென்ற விஜய், கரூரில் நடந்த துயர சம்பவத்துக்கு நேரில் சென்று வருத்தம் தெரிவிக்கவில்லையே. வருகிற சட்டமன்ற தேர்தலில் கே.ஏ.செங்கோட்டையன் போட்டியிட்டால் வெற்றிபெறுவாரா? என்பது தெரியாது. தமிழ்நாட்டில் 5 லட்சம் பிராமணர்கள் ஏழைகளாக உள்ளனர். அவர்களுக்கு நல வாரியம் அமைத்து கொடுத்தால் நான் 3 லட்சம் வாக்குகளை பெற்றுத்தருவேன். தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெறாது. தேர்தல் முடிந்த பின்னர் ஜூன் மாதம் விஜய் மீண்டும் படத்தில் நடிக்க சென்றுவிடுவார். இவ்வாறு அவர் கூறினார்.

## இன்று காணும் பொங்கல்: சென்னையில் பாதுகாப்பு பணியில் 16 ஆயிரம் போலீசார்

சென்னை, ஜன.17:

பொங்கல் பண்டிகையை பொதுமக்கள் மகிழ்ச்சியாகவும், பாதுகாப்பாகவும் கொண்டுவதற்காக சென்னை காவல்துறை கமிஷனர் அருண் உத்தரவின் பேரில் சிறப்பு பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



இது தொடர்பாக சென்னை காவல்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

17ந் தேதி காணும் பொங்கலை முன்னிட்டு பொதுமக்கள் தங்கள் குடும்பத்தாருடன் மெரினா கடற்கரை உள்ளிட்ட இதர பொழுதுபோக்கு இடங்களுக்கு அதிகளவில் வருவதால், எவ்வித அசம்பாவிதமும் நிகழா வண்ணம் பொதுமக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் காணும் பொங்கலை கொண்டாடுவதற்காக கமிஷனர் ஆ.அருண் உத்தரவின் பேரில், விரிவான பாதுகாப்பு ஏற்படுகள் செய்யப்பட்டுள்ளது. சென்னை பெருநகர காவல் கூடுதல் ஆணையாளர்கள் அறிவுரையின் பேரில் 16 ஆயிரம் காவல் அதிகாரிகள், ஆளிநர்கள் மற்றும் சுமார் 1,500 ஊர்க்காவல் படையினர் மூலம் காணும் பொங்கல் கொண்டாட்டத்தின் போது பாதுகாப்பு அளிக்க சென்னை பெருநகர காவல் துறை மூலம் விரிவான தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சென்னையில் காணும் பொங்கலை முன்னிட்டு உழைப்பாளர் சிலை முதல் காந்தி சிலை வரை 3 தற்காலிக காவல் கட்டுப்பாட்டறைகள் அமைக்கப்பட்டும், உழைப்பாளர் சிலை முதல் கலங்கரை விளக்கம் வரையிலுள்ள 7 சர்வீஸ் சாலைகளின் நுழைவு வாயில்களில் காவல் உதவி மையங்கள் அமைக்கப்பட்டும், அவசர மருத்துவ உதவிக்காக மருத்துவக் குழுவினருடன் 8 ஆம்புலன்ஸ் வாகனங்கள் மற்றும் மீட்புப் பணிக்காக தீயணைப்பு வீரர்கள் அடங்கிய 2 தீயணைப்பு வாகனங்கள் ஆகியவை தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்படும். இவை தவிர மீட்புப் பணிக்காக மோட்டார் படகுகள் மற்றும் சுமார் 200க்கும் மேற்பட்ட நீச்சல் தெரிந்த தன்னார்வலர்கள் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்படுவார்கள்.

## விழுப்புரம் அருகே 1,200 ஆண்டுகள் பழமை வாய்ந்த 3 கொற்றவை சிற்பங்கள் கண்டெடுப்பு

விழுப்புரம், ஜன.17:

விழுப்புரம் அருகே 1,200 ஆண்டுகள் பழமைவாய்ந்த 3 கொற்றவை சிற்பங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.



விழுப்புரம் அருகே உள்ள கல்பட்டு சிறுவாக்கூர் கிராமத்தில் 1,200 ஆண்டுகள் பழமைவாய்ந்த கொற்றவை சிற்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதுபற்றி விழுப்புரத்தை சேர்ந்த வரலாற்று ஆய்வாளர் செங்குட்டுவன் கூறியதாவது:-

பழந்தமிழர்களின் தாய் தெய்வமாக விளங்கியவள் கொற்றவை தெய்வம். தொடக்கத்தில் காட்டில் உறைபவள் எனும் பொருளில் காடமர் செல்வி என வழங்கப்பட்டவள் பின்னர் போரில் வெற்றியை அளிக்கும் தெய்வமாக கொற்றவை என வணங்கப்பட்டாள். கொற்றவையின் உருவ அமைப்பு, வழிபாடு உள்ளிட்ட விவரங்களை சிலப்பதிகாரம் நமக்கு விளக்கமாக சொல்கிறது.

விழுப்புரம் அருகே தென்பெண்ணை ஆற்றின் கரையில் அமைந்துள்ள கல்பட்டு சிறுவாக்கூர் கிராமத்தில் அண்மையில் கள ஆய்வில் ஈடுபட்டோம். அப்போது வயல்வெளிகளில் 2 சிற்றாலயத்தில் மூன்று கொற்றவை சிற்பங்கள் தனித்தனியே இருப்பதை கண்டறிந்தோம். இந்த சிற்பங்கள் சுமார் 5 அடி உயரமுள்ள பலகைக்கல்லில் வடிக்கப்பட்டுள்ளன.

பல்லவர் கலைப்பாணியில் கொற்றவை அழகாகவும், கம்பீரமாகவும் காட்சித்தருகிறாள். காதணி கள், கழுத்தணி மற்றும் கை வளையல்கள் உள்ளிட்ட அணிகலன்கள் அழகாக காணப்படுகின்றன.

இடையில் குறுவாள் ஒன்று காட்டப்பட்டிருப்பது கூடுதல் சிறப்பாகும். இந்த சிற்பங்கள் 1,200 ஆண்டுகளை கடந்தும் இன்றும் வழிபாட்டில் இருந்து வருகின்றன. விழுப்புரம் மாவட்டத்தில் அரசூர், ஏமப்பேரூர், மொளசூர், சிங்கவரம், ஆரூர் உள்ளிட்ட இடங்களில் தலா 2 கொற்றவை சிற்பங்கள் அமைந்துள்ளன. ஒரே ஊரில் 3 கொற்றவை சிற்பங்கள் இருப்பது சிறுவாக்கூர் கிராமத்தில் தற்போது கண்டறியப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## கூவம் ஆற்றில் குதித்து மாணவி தற்கொலை: கடிதம் சிக்கியது

சென்னை, ஜன.17:

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் யுவஸ்ரீ என்ற மாணவி எம்.பி.ஏ. 2-ம் ஆண்டு படித்து வந்தார். சம்பவத்தன்று மாலை காமராஜர் சாலையிலுள்ள நேப்பியர் பாலம் அருகே அவர் சென்று கொண்டிருந்தார். திடீரென யுவஸ்ரீ பாலத்தில் இருந்து கூவம் ஆற்றில் குத்தித்தார். இதைக்கண்ட அந்தவழியாக சென்றவர்கள் உடனடியாக போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

தகவலின் பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். அப்போது அங்கிருந்த பையை கைப்பற்றி நடத்திய ஆய்வில் தற்கொலை குறிப்பு ஒன்று கிடைத்தது. அதில் 'எனக்கு வாழப்பிடிக்கவில்லை.

தனது தற்கொலைக்கு யாரும் காரணம் இல்லை. பெற்றோரும் சகோதரியும் என்னை மன்னியுங்கள்' என்று எழுதப்பட்டு இருந்தது.

இதையடுத்து தீயணைப்பு படையினர் படகு மூலம் யுவஸ்ரீயின் உடலை தேடும் பணியில் ஈடுபட்டனர்.

இந்தநிலையில் மெரினா கடல் பகுதியில் யுவஸ்ரீயின் உடல் கரை ஒதுங்கியது. போலீசார் மாணவியின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து மாணவியின் தற்கொலைக்கு காதல் தோல்வி காரணமா? அல்லது வீட்டில் ஏதாவது பிரச்சினையா? பல்கலைக்கழகத்தில் ஏதாவது பிரச்சினையா' என விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கொடைக்கானலில் முதல் முறையாக பழமையான கார்கள் கண்காட்சி: சுற்றுலா பயணிகள் ஆர்வம்

கொடைக்கானல், ஜன.17:

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் முதல் முறையாகப் பழமையான கார்கள் கண்காட்சி நடைபெற்றது.



கொடைக்கானல் வின்சென்ட் ஆட்டோ கேரேஜ் ட்ரிப்பில் என் குரூப் நிறுவனங்கள் சார்பில், அங்குள்ள அரசு மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் இந்தச் சிறப்பு கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் 60-க்கும் மேற்பட்ட அரிய வகை பழமையான கார்கள் மற்றும் இருசக்கர வாகனங்கள் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன.

இந்தக் கண்காட்சியில் 1954 ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட ஆஸ்டின் கார், அதே ஆண்டில் உருவாக்கப்பட்ட வில்லிஸ் ரக ஜீப்புகள் ஆகியவை முக்கிய ஈர்ப்பாக அமைந்தன. மேலும், 1950 ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட ஏஜேஎஸ் பைக் மற்றும் தற்போது புழக்கத்தில் இல்லாத எஸ்டி மினி புல்லட் உள்ளிட்ட பல்வேறு இருசக்கர வாகனங்களும் காட்சிப்படுத்தப்பட்டன. இவை தவிர, நவீன முறையில் மறுவடிவமைப்பு செய்யப்பட்ட கார்கள் மற்றும் ஜீப்புகளும் கண்காட்சியில் இடம்பெற்று பார்வையாளர்களைக் கவர்ந்தன.

இக்கண்காட்சியை கொடைக்கானல் முன்னாள் நகர்மன்றத் தலைவர் டாக்டர் கே.சி.ஏ. குரியன் ஆபிரகாம், நகர்மன்றத் தலைவர் செல்லத்துரை மற்றும் துணைத் தலைவர் மாயக்கண்ணன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

மலைகளின் இளவரசியான கொடைக்கானலுக்கு வருகை தந்திருந்த சுற்றுலாப் பயணிகளும், உள்ளூர் பொதுமக்களும் அரிய வகை வாகனங்களை ஆர்வத்துடன் கண்டு ரசித்தனர். மேலும், பலரும் இந்த பழமையான வாகனங்களின் முன்பு நின்று ஆர்வத்துடன் புகைப்படங்கள் மற்றும் செல்ஃபிக்கள் எடுத்துக் கொண்டனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

### நீரிழிவு நோயாளிகள் ஏன் நாவல் பழம் சாப்பிட வேண்டும்?

நீரிழிவு நோயாளிகள் ரத்தத்தில் சர்க்கரை அளவை கட்டுப்படுத்துவது மிக முக்கியம். நீரிழிவு மேலாண்மையில் உதவக்கூடிய பருவகால பழமாக நாவல் பழம் அமைந்திருக்கிறது. நீரிழிவு நோயாளிகள் தினமும் 10 நாவல் பழங்கள் வரை சாப்பிடலாம்

மதிய உணவுக்கு பிறகு சாப்பிடுவது சிறந்தது. நாவல் பழம் நார்ச்சத்து நிறைந்தது. இது மலச்சிக்கலைத் தடுக்கும். குடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும். வெறும் வயிற்றில் நாவல் பழம் சாப்பிடுவதை தவிர்க்கவும். நீரிழிவு நோயாளிகள் பழங்களை சாப்பிடுவதற்கு கட்டுப்பாடு இருக்கிறது. சில பழங்களில் சர்க்கரை அளவு அதிகமாக இருப்பதுதான் அதற்கு காரணம். அதனால் பழங்கள் தேர்வில் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு வரப்பிரசாதமாக நாவல் பழம் அமைந்திருக்கிறது. நீரிழிவு நோயாளிகள் ஏன் நாவல் பழம் சாப்பிட வேண்டும் என்று தெரியுமா?

**1. ரத்த சர்க்கரை அளவை கட்டுப்படுத்தும்**

நாவல் பழத்தில் உள்ள ஜாம்போலின் மற்றும் எலாஜிக் அமிலம் போன்ற சேர்மங்கள், ரத்தத்தில் சர்க்கரை மெதுவாக கலக்க உதவுகின்றன. இவை சர்க்கரை அளவை கட்டுப்படுத்தவும், செரிமானத்தை மேம்படுத்தவும் உதவுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

**2. கல்லீரலை பாதுகாக்கும்**

நாவல் பழம் ஆன்டி-ஆக்சிடென்டுகள் நிறைந்தது. இது உடலில் உள்ள நச்சுக்களை குறைத்து, அழற்சியை தணிக்க உதவும். கல்லீரல் செல்களை பாதுகாக்கவும் செய்யும்.

**3. குறைந்த கிளைசெமிக் குறியீடு**

நாவல்பழம் குறைந்த கிளைசெமிக் குறியீடு கொண்டது. ஒரு நாவல் பழத்தில் சுமார் 25 வரையே இருக்கும். இதனால், ரத்தத்தில் திடீரென சர்க்கரை உயர்வதை தடுத்துவிடும்.

**4. இதய ஆரோக்கியம் காக்கும்**

நீரிழிவு நோயாளிகளுக்கு இதய நோய்கள் ஏற்படும் அபாயம் அதிகம் இருக்கிறது. நாவல் பழத்தில் உள்ள ஆன்டி-ஆக்சிடென்டுகள் மற்றும் பொட்டாசியம் இதய ஆரோக்கியத்தை மேம்படுத்தும். பக்கவாத அபாயத்தை குறைக்கவும் துணை புரியும்.

**5. இன்சுலின் செயல்பாட்டை மேம்படுத்தும்**

நாவல் பழத்தை டைப்-2 நீரிழிவு நோயாளிகள் முறையாக உட்கொள்வது, உடலில் இன்சுலின் உணர்திறனை மேம்படுத்த உதவும். இதனால் உடலில் சரியாக சர்க்கரை பயன்படுத்தப்படுவது உறுதி செய்யப்படும்.

### உலர் பழங்கள்-நட்ஸ்களை தண்ணீரில் ஊறவைப்பதால் கிடைக்கும் நன்மைகள்

உலர்பழங்கள், நட்ஸ் வகைகளை பலரும் விரும்பி சுவைக்கிறார்கள். அவற்றை சரியான முறையில் உட்கொள்கிறார்களா? என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. சில உலர் பழங்கள் மற்றும் நட்ஸ்களை ஊற வைத்து உட்கொள்வதே சரியானது. அவைபற்றியும், ஏன் ஊறவைத்து உட்கொள்ள வேண்டும் என்பது குறித்தும் பார்ப்போம்.

**வால்நட்:** வால்நட்டில் ஒமேகா-3 கொழுப்பு அமிலங்கள் மற்றும் பாலி பீனால்கள் அதிகம் காணப்படும். அடர்த்தியான கொழுப்பையும், சற்று கசப்புத்தன்மையையும் கொண்டிருக்கும். அதனை அப்படியே சாப்பிட்டால் செரிமானமாவதற்கும் கடினமாக இருக்கும். தண்ணீரில் 6 முதல் 8 மணி நேரம் ஊறவைப்பது கசப்புத்தன்மையை குறைப்பதோடு மென்மையாக மாற்றும். அதிலிருக்கும் கொழுப்பை உடல் எளிதில் பயன்படுத்துவதற்கு ஏதுவாக மாற்றி செரிமான மண்டலத்திற்கு குறைந்த அழுத்தத்தையே கொடுக்கும். 2 அல்லது 4 வால்நட்டுகளை 12 மணி முதல் 24 மணி நேரம் வரை ஊற வைத்து உட்கொள்வது, எந்த உணவுப்பொருளுடனும் சேர்க்காமல் தனியாக உட்கொள்வது அதிகபட்ச நன்மையை அளிக்கும்.

**முந்திரி:** கிரீமி தன்மை கொண்ட முந்திரியில் தாமிரம், துத்தநாகம் மற்றும் மெக்னீசியம் போன்றவை அதிகம் உள்ளன. அதனை அப்படியே சாப்பிடுவது சிலருக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தும். ஊறவைக்கும்போது முந்திரியில் உள்ள நொதிகள் நடுநிலையாக்கப்படுகின்றன. ஊட்டச்சத்து எதிர்ப்பு தன்மையும் குறையும். ஆரோக்கியமான கொழுப்புகளின் தன்மையும் மேம்படுத்தப்படும். 4-5 முந்திரிகளை 2 அல்லது 4 மணி நேரம் தண்ணீரில் ஊறவைத்து, அவற்றை ஸ்மூத்தி அல்லது சிற்றுண்டிகளில் பயன்படுத்தலாம்.

# மாட்டுப்பொங்கலையொட்டி நந்தி பகவானுக்கு சிறப்பு அலங்காரம்



திருண்ணாமலையில் அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் (16.01.2026) மாட்டுப் பொங்கலை முன்னிட்டு நந்தி பகவானுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு நந்தி பகவானை தரிசனம் செய்தனர்.





வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை
பூமியில் இல்லாமல்
ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528


## நாட்டின் பணவீக்கம் 0.83% அதிகரிப்பு

**புதுடெல்லி, ஜன.17:**

மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பணவீக்கம் கடந்த டிசம்பரில் 0.83 சதவீதமாக அதிகரித்துள்ளது.

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களின்படி, கடந்த 2025-ம் ஆண்டு நவம்பரில் 0.32% அளவுக்குக் குறைந்து காணப்பட்ட பணவீக்கம், டிசம்பரில் 0.83% ஆக உயர்ந்துள்ளது.

மொத்த விற்பனை விலை குறியீட்டுப் பட்டியலில் முக்கியப் பங்கு வகிக்கும் உற்பத்திப் பொருட்களின் பணவீக்கம் டிசம்பரில் 1.82% ஆகப் பதிவாகியுள்ளது. உணவுப் பொருட்களின் விலை உயர்வு 'பூஜ்ஜியம்' சதவீதம் என்ற அளவிலேயே உள்ளது.

## எஸ்ஐஆர்! சரிபார்ப்புக்கான ஆவணமாக 10 ஆம் வகுப்பு நுழைவுச் சீட்டை ஏற்க மறுப்பு!

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தின்போது பத்தாம் வகுப்பு நுழைவுச் சீட்டை சரிபார்ப்பு ஆவணமாக ஏற்க தேர்தல் ஆணையம் மறுப்பு தெரிவித்துள்ளது.

மேற்கு வங்காளத்தில் மேற்கொள்ளப்படும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளில் (SIR) சரிபார்ப்புக்கான ஆவணமாக பத்தாம் வகுப்பு நுழைவுச் சீட்டை (ADMIT CARD - அட்மிட் கார்டு) ஏற்றுக் கொள்ளுமாறு மாநில தலைமைத்தேர்தல் அதிகாரி கோரிக்கை விடுத்தார். இருப்பினும், எஸ்ஐஆர் சரிபார்ப்புக்கான செல்லுபடியாகும் ஆவணமாக பத்தாம் வகுப்பு நுழைவுச் சீட்டை ஏற்றுக்கொள்ள தேர்தல் ஆணையம் மறுத்துள்ளது. ஏற்கெனவே பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ், நிரந்தர குடியிருப்புச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், பாஸ்போர்ட், அரசு ஊழியர்கள் அல்லது ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படும் அடையாள அட்டை அல்லது ஆணைகள், வன உரிமைச் சான்றிதழ் உள்ளிட்டவற்றை சரிபார்ப்பு ஆவணங்களாக தேர்தல் ஆணையம் அறிவித்தது.

## முதுநிலை மருத்துவப் படிப்பு சேர்க்கை: கட்-ஆஃப் குறைப்பு: 18,000 இடங்கள் காலியாக இருப்பதால் நடவடிக்கை

**சென்னை, ஜன.17:**

முதுநிலை மருத்துவப் படிப்புகள் சேர்க்கைக்கான நீட் (தேசிய தகுதிகாண் நுழைவுத் தேர்வு) தகுதி மதிப்பெண்ணை (கட்-ஆஃப்) தேசிய மருத்துவத் தேர்வுகள் வாரியம் (என்பிஇஎம்எஸ்) குறைத்து உத்தரவிட்டது.

மாணவர் சேர்க்கைக்கான இரண்டு சுற்று கலந்தாய்வுக்குப் பிறகும் நாடு முழுவதும் 18,000 இடங்கள் காலியாக இருந்ததைத் தொடர்ந்து, இந்த நடவடிக்கையை என்பிஇஎம்எஸ் மேற்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக என்பிஇஎம்எஸ் வெளியிட்ட அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

முதுநிலை மருத்துவப் படிப்பு சேர்க்கையில் எஸ்சி., எஸ்டி. உள்ளிட்ட




இடஒதுக்கீடு பிரிவினருக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த குறைந்தபட்ச நீட்-பிஜி மதிப்பெண் விகிதமான (பர்சென்டைல்) 40 சதவீதமானது, பூஜ்ஜியம் சதவீதமாகக் குறைக்கப்படுகிறது.

அதுபோல, பொதுப் பிரிவு மாணவர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருந்த குறைந்தபட்ச நீட்-பிஜி மதிப்பெண் விகிதமான (பர்சென்டைல்) 50 சதவீதம், 7 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, முதுநிலை நீட் தேர்வில் 800-க்கு 'மைனஸ்' 40 மதிப்பெண் பெற்ற எஸ்.சி., எஸ்.டி., ஓபிசி உள்ளிட்ட இடஒதுக்கீடு பிரிவு மாணவர்கள் முதுநிலை மருத்துவப் படிப்புகளில் சேர்வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது.

அதுபோல, நீட் தேர்வில் 800-க்கு 103 மதிப்பெண் பெற்ற பொதுப் பிரிவு மாணவர்களும் சேர்க்கை பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

நாடு முழுவதும் 65,000 முதல் 70,000 முதுநிலை மருத்துவப் படிப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதில் மாணவர் சேர்க்கைக் கலந்தாய்வுக்குப் பிறகு ஒவ்வொரு ஆண்டும் ஏராளமான இடங்கள் சேர்க்கை இன்றி காலியாக விடப்பட்ட நிலையில், சேர்க்கைக்கான தகுதி மதிப்பெண்ணைக் குறைக்க இந்திய மருத்துவச் சங்கம் (ஐஎம்ஏ) சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதனடிப்படையில், முதுநிலை மருத்துவப் படிப்பு இடங்கள் சேர்க்கையின்றி வீணாவதை தடுக்கும் வகையில் என்பிஇஎம்எஸ் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

## சீனாவுக்கான இந்திய ஏற்றுமதி 9.7% அதிகரிப்பு: வர்த்தகப் பற்றாக்குறையும் புதிய உச்சம்

**புதுடெல்லி, ஜன.17:**

சீனாவுக்கான இந்தியாவின் ஏற்றுமதி 9.7 சதவீத அளவுக்கு உயர்வு கண்டுள்ளது; அதே வேளையில் சீனாவுடனான இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை கடந்த ஆண்டில் ரூ. 10 லட்சம் கோடி (116 பில்லியன் டாலர்) என்ற சாதனை அளவை எட்டியுள்ளது.

இருதரப்பு வர்த்தகமும் இதுவரை இல்லாத அளவில் ரூ. 14 லட்சம் கோடி (155.62 பில்லியன் டாலர்) அளவுக்கு உயர்ந்துள்ளது.

சீன சுங்கத் துறை சார்பில் புதன்கிழமை வெளியிடப்பட்ட இரு நாடுகளிடையேயான வருடாந்திர வர்த்தகப் புள்ளிவிவர அறிக்கை மூலம் இத் தகவல் தெரியவந்துள்ளது. அதில் மேலும் கூறியிருப்பதாவது:

பல ஆண்டுகளாக முன்னேற்றம் காண இருந்த இந்திய ஏற்றுமதிகள், கடந்த ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான காலகட்டத்தில் 19.75 பில்லியன் அமெரிக்க டாலராக (ரூ. 1.78 லட்சம் கோடி) அதிகரித்தது. இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 9.7 சதவீத உயர்வாகும். அதாவது, 5.5 பில்லியன் டாலர் அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளது.

இந்தியாவுக்கான சீனாவின் ஏற்றுமதி 12.8 சதவீதமாக அதிகரித்து 135.87 பில்லியன் டாலர் (ரூ. 12.27 லட்சம் கோடி) அளவுக்கு வளர்ச்சி கண்டது.

இருதரப்பு வர்த்தகமும் இதுவரை இல்லாத அளவில் ரூ. 14 லட்சம் கோடி (155.62 பில்லியன் டாலர்) அளவுக்கு உயர்ந்துள்ளது.

அதே நேரம், இரு நாடுகளிடையேயான வர்த்தகப் பற்றாக்குறை நிலையான பிரச்னையாக நீடித்து வருகிறது. கடந்த ஆண்டில் அந் நாட்டுடனான இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை இதுவரை இல்லாத அளவில் ரூ. 10 லட்சம் கோடி என்ற அளவை எட்டியது. கடந்த 2023-ஆம் ஆண்டிலிருந்து இரண்டாவது முறையாக ரூ. 9 லட்சம் கோடி (100 பில்லியன் டாலர்) என்ற அளவை இரு நாடுகளிடையேயான வாத்தகப் பற்றாக்குறை கடந்துள்ளது.

அமெரிக்காவுடன் வர்த்தகப் பதற்றம் தொடர்ந்து வரும் நிலையிலும், சீனாவின் ஒட்டுமொத்த உலகளாவிய வர்த்தகம் தொடர்ந்து வளர்ச்சி கண்டு வருகிறது.

சீனாவின் ஏற்றுமதி 3.77 ட்ரில்லியன் டாலர் அளவிலும், இறக்குமதி 2.58 ட்ரில்லியன் டாலர் அளவிலும் பதிவாகியுள்ளது. வர்த்தகப் பற்றாக்குறை 1.2 ட்ரில்லியன் டாலர் அளவில் பதிவாகியுள்ளது.

இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 20 சதவீதம் கூடுதலாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்குவதாக குற்றஞ்சாட்டி இந்தியா மற்றும் சீனா மீது அமெரிக்கா கூடுதல் வரி விதிப்பை மேற்கொண்டுள்ள சூழலில், இந்தியா-சீனா இடையேயான இருதரப்பு வர்த்தகம் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## டில்லியில்... 2024-ல் மூச்சு பிரச்னையால் 9,000 பேர் உயிரிழப்பு!

**புதுடெல்லி, ஜன.17:**

கடந்த ஆண்டில் மட்டும் மூச்சு தொடர்பான பிரச்னைகளால் பாதிக்கப்பட்டு 9, 211 பேர் உயிரிழந்துள்ளனர். 2023ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 8,801 ஆக இருந்த நிலையில், கடந்த ஆண்டு அதிகரித்துள்ளது.

டில்லி அரசு வெளியிட்டுள்ள தரவுகளின்படி,

2024 ஆம் ஆண்டு தரவுகளின்படி, சுவாச சுழற்சி அமைப்பில் ஏற்பட்ட பிரச்னை காரணமாக அதிகபட்சமாக 21,262 பேர் உயிரிழந்துள்ளனர். இதற்கு அடுத்தபடியாக தொற்று மற்றும் ஒட்டுண்ணி நோயால் பாதிக்கப்பட்டு 16,060 பேர் இறந்துள்ளனர். மனநிலை மற்றும் நடத்தை கோளாறு காரணமாக 62 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஒட்டுமொத்தமாக கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு இறப்பு விகிதம் தலைநகரில் அதிகரித்துள்ளது. இதேபோன்று, மூச்சு தொடர்பான பிரச்னைகளால் பாதிக்கப்பட்டு இறப்பதும் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு அதிகரித்துள்ளதை தரவுகள் குறிப்பிடுகின்றன.

2024-ல் மட்டும் தில்லியில் இறந்தோர் எண்ணிக்கை 1.39 லட்சம். இதில் 85,391 ஆண்கள், 54,051 பேர் பெண்கள், 38 பேர் பிற பாலினத்தவர்கள். அதாவது தில்லியில் கடந்த ஆண்டு கணக்கின்படி, தில்லியில் ஒரு நாளுக்கு 381 பேர் இறந்துள்ளனர்.

## 158 வகை உணவுகளுடன் மாப்பிளைக்கு தல பொங்கல் விருந்து!

ஆந்திரத்தில் தலபொங்கல் கொண்டாட வருகைப்புரிந்த மாப்பிள்ளைக்கு 158 வகை உணவுகளுடன் மாமியார் வீட்டினர் விருந்து வைத்து அசத்தியுள்ளனர். இந்த விடியோ இணையத்தில் பலரால் பகிரப்பட்டு வருகிறது. ஆந்திர மாநிலம் குண்டூர் மாவட்டத்தைச் சேர்ந்த முரளிகிருஷ்ணா தனது மனைவியுடன் சேர்ந்து, தல பொங்கல் (ஆந்திரத்தில் சங்கராந்தி) கொண்டாட வந்த மகளுக்கும் மருமகனுக்கும் ஆடம்பர விருந்து வைத்துள்ளனர். கோதாவரி மாவட்டம் ராஜமுந்திரி பகுதியைச் சேர்ந்த ஸ்ரீதத்தாவுக்கும் மௌனிகாவுக்கும் இடையே சமீபத்தில் திருமணம் நடைபெற்றுள்ளது. திருமணம் முடிந்து முதல் சங்கராந்தி பண்டிகையை கொண்டாட தாய் வீட்டிற்கு தனது கணவருடன் மௌனிகா வருகைப்புரிந்துள்ளார். தல சங்கராந்தி என்பதால், மறக்க முடியாத அளவுக்கு இருக்க வேண்டும் என்பதற்காக மருமகனுக்காக மாமியார் வீட்டில் ஆடம்பரமாக உணவு தயார் செய்யப்பட்டுள்ளது. சைவம், அசைவம் என இரு வகைகளிலும், இனிப்பு, காரம், பாரம்பரியம்மிக்க பலகாரங்கள் என 158 வகைகளில் இலையில் உணவு பரிமாறப்பட்டுள்ளது. இதில் ஆந்திரத்தைச் சேர்ந்த பழமைமாறாத உணவுப் பொருள்களும் இடம்பெற்றுள்ளன. இந்த விடியோ இணையத்தில் பலரால் பகிரப்பட்டு வருகிறது.

# பசிக்கு இடமில்லாத புனித தலம்.. தினமும் 3 லட்சம் பக்தர்களுக்கு அன்னபிரசாதம் விநியோகம்

திருமலை மட்டுமல்லாமல், நாடு முழுவதும் தேவஸ்தானத்தால் நிர்வகிக்கப்படும் அனைத்து கோவில்களிலும் அன்னப்பிரசாத திட்டம் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது.

உலகப் புகழ்பெற்ற திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு உலகெங்கிலும் இருந்து ஏராளமான பக்தர்கள் வருகை தந்து பகவானை தரிசனம் செய்கின்றனர். கோவிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு மூன்று வேளையும் அன்னப்பிரசாதம் வழங்கப்படுகிறது. பக்தர்கள் வயிறார உண்டு, மனநிறைவுடன் செல்கின்றனர். இதனால் இந்த தலம் 'பசிக்கு இடமில்லாத புனிதத் தலம்' என்றும் போற்றப்படுகிறது.

அன்னப்பிரசாத திட்டத்தின் சிறப்புகள் குறித்து திருமலை திருப்பதி தேவஸ்தானம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:-

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் அன்னப்பிரசாதத் துறையின் முயற்சிகளால், விரிவான ஒழுங்கமைக்கப்பட்ட உணவு விநியோக அமைப்பு மூலம் தினமும் சுமார் மூன்று லட்சம் பக்தர்களுக்கு உணவு வழங்கப்படுகிறது.

### சமையல் அறைகள்

திருப்பதி தேவஸ்தான அன்னப்பிரசாதத் துறை 3 முக்கிய சமையல் அறைகளை கொண்டது. அவற்றில் மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அன்னப்பிரசாத வளாகம், அட்சய சமையல் அறை, வகுளமாதா சமையல் அறை ஆகியவை ஆகும். இவை அனைத்தும் இரவு பகலாக இயங்கி வருகின்றன.

மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அன்னப்பிரசாத வளாகத்தில் சுமார் 74 ஆயிரம் பக்தர்களுக்கு சுவையான அன்னப்பிரசாதம் வழங்கப்படுகிறது.



அட்சய சமையல் அறை சுமார் 1 லட்சத்து 48 ஆயிரம் பக்தர்களின் அன்னப்பிரசாதத் தேவைகளை பூர்த்தி செய்கிறது. அதே நேரத்தில் வகுளமாதா சமையல் அறை மூலம் சுமார் 77 ஆயிரம் பக்தர்களுக்கு அன்னப்பிரசாதம் வழங்கப்படுகிறது.

### நித்ய அன்னதானத் திட்டம்

ஸ்ரீவெங்கடேஸ்வரா நித்ய அன்னதானத் திட்டத்தை ஆந்திர மாநில முன்னாள் முதல்-மந்திரி என்.டி. ராமாராவ் 1985-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ந்தேதி திருமலையில் தொடங்கி வைத்தார். இந்தத் திட்டம் 1994-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந்தேதி ஒரு அறக்கட்டளையாக மாற்றப்பட்டது.

ஆந்திர மாநில தற்போதைய முதல்-மந்திரி சந்திரபாபு நாயுடுவின் வழிகாட்டுதல் கீழ் அன்னப்பிரசாதத் திட்டம் இப்போது திருமலையில் உள்ள பல்வேறு இடங்களில் மட்டுமல்லாமல், நாடு முழுவதும் உள்ள தேவஸ்தானத்தால் நிர்வகிக்கப்படும் அனைத்து கோவில்களிலும் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. மிக விரைவில் திருப்பதி தேவஸ்தானத்தன் கீழ் செயல்படும் அனைத்து உள்ளூர் கோவில்களிலும் அன்னப்பிரசாத செயல்பாடு தொடங்கப்படும்.

### உணவு விவரங்கள்

மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அன்னப்பிரசாத வளாகத்தில் தினமும் காலையில் கோதுமை ரவை உப்புமா, சூஜி ரவை உப்புமா, சேமியா உப்புமா, பொங்கல், சட்னி மற்றும் சாம்பார் வழங்கப்படுகின்றன. மதியம் சர்க்கரை பொங்கல், சாதம், காய்கறிகள், சட்னி, வடை, சாம்பார், ரசம் மற்றும் மோர் என 8 வகையான உணவுகள் வழங்கப்படுகின்றன. மாலையில் சர்க்கரை பொங்கல், சாதம், காய்கறி, சட்னி, வடை, சாம்பார், ரசம் மற்றும் மோர் என 8 வகையான உணவுகள் வழங்கப்படுகின்றன.


அட்சய சமையல் அறையில் தினமும் கோதுமை ரவை உப்புமா, சூஜி ரவை உப்புமா, பொங்கல், சாம்பார் சாதம், தயிர் சாதம், தக்காளி சாதம், சுண்டல், பால், தேநீர் மற்றும் காபி ஆகியவை வழங்கப்படுகின்றன. அதிக பக்தர்கள் வரும் நாட்களில் மற்றும் திருவிழா காலங்களில் பக்தர்களுக்கு மோர், பாதாம் பால், பிஸ்கட் மற்றும் ஜூஸ் பாக்கெட்டுகளும் வினியோகிக்கப்படுகின்றன.

வகுளமாதா சமையல் அறையில் சுமார் 1,000 அன்னப்பிரசாதப் பணியாளர்கள் மற்றும் ஸ்ரீவாரி சேவா சங்க தொண்டர்களின் அயராத முயற்சியால் பக்தர்கள் தங்கும் வளாகம்- 2,4,5ல் உள்ள உணவுக் கூடங்கள், மத்திய விசாரணை அலுவலகம், அமைனிட்டி காம்ப்ளக்ஸ் 1, ராம் பகீச்சா விருந்தினர் மாளிகை, அஞ்சனாத்ரி நிலையம் குடில்களுக்கு சாம்பார் சாதம், தயிர் சாதம் மற்றும் உப்புமா தயாரித்து வழங்கப்படுகின்றன. திருமலையில் அனைத்து நேரங்களிலும் பக்தர்களுக்கு உணவு தடையின்றி வழங்கப்படுகிறது.

# ராதையும் கண்ணனும்



யமுனை நதிக்கரையில்
அடர்ந்த புன்னை மர
நிழலில் ராதையும்,
கண்ணனும் ஊஞ்சலாடிக்
கொண்டிருந்தார்கள்.
'உன்னை விட்டுப் பிரிந்து
எத்தனை நாட்களாகி
விட்டன; ராதை!' உள்ளார்ந்த
மன நெகிழ்ச்சியில்
அங்கலாய்த்தான், கண்ணன்.
' அப்படியா? நான்
உன்னைவிட்டு
பிரிவதுமில்லை;
விலகுவதுமில்லை;
என்றல்லவா நான்
நினைக்கிறேன்.' என்றாள் ;
ராதை, மென்னகையுடன்.
மதுரா சென்றது முதல்
நான் உன்னை சந்திக்கவே
இல்லையே! நீ என்னதான்
சொல்கிறாய்?' என்று
வினவினான் ராதேயன்.
' கண்ணா! நான் எப்போதும்
உன்னிலேயே இருக்கிறேன்.
உன்னில் உறைந்திருக்கும்
என் உயிர் சக்தியால்
தானே கம்ஸ வதம்
நடந்தேறியது!
நான் இல்லையேல் நீ
இல்லவே இல்லை.
ஏழுலகையும் தாங்கும்
கமலனே!
நான் உன்னைத்
தாங்குவதால் அன்றோ;
நீ அனைத்தையும் தாங்கி
நிற்கிறாய்!
உன்னில் சரி பாதி
நானல்லவா?
'ராதை! இவ்வாறு உரைப்பது
எனக்கே நகைப்பை
மூட்டுகிறது.
'அவ்வாறானால் நீ எனக்கு
ஒரு சான்று கூறி நிரூபி.'
என்றான்.
கல கலவென சிரித்த
ராதை,'நான் உன்னில்
உறையாமலா குவலயாபீடம்
என்ற வேழத்தை சாய்க்கும்
ரௌத்திர தருணத்திலும்,
என் நினைப்புதான்,
உனக்கு.
அதன் தந்தங்களை
வேரோடு பிடுங்கி
எறியும் கணத்தில்,
தந்தங்களின் அடியில்
இருந்த முத்துக்களை
எடுத்து மாலையாக்கி
உன் நண்பனின் வழியாக
எனக்கு அனுப்பி வைத்தாய்!
வேறு ஏதும் சான்று
வேண்டுமா; சொல்' என்றாள்.
மாயக்கண்ணனின் மன
மயக்கம் எங்கோ மறைந்து
போக; ராதையிடம்
சரணடைந்தான்;கண்ணன்.
உயிரொளியில் உன்னதம்
கலந்து உறைந்தது
ராதே
கிருஷ்ணா!



- சசிகலா
விஸ்வநாதன்

# குறும்புக்காரன்

பாபு ஒரு குறும்புக்கார பையன். கிராமத்தில் வசிப்பவன். எப்பொழுதும் யாரையாவது அடித்து விடுவான், பொருள்களை உடைத்து விடுவான், ஏதாவது குறும்பு செய்து கொண்டே இருப்பான். அவனுடைய வீடு பஸ் ஸ்டாப்பில் இருந்து கிராமத்திற்கு உள்ளே சற்று தொலைவில் உள்ளது .அவருடைய வீட்டிற்கு செல்ல வேண்டும் என்றால் சிறிது தூரம் நடக்க வேண்டும் . வழியில் பெரிய மாந்தோப்பு உள்ளது. அந்த வழியில் தான் தினமும் பாபு பள்ளிக்குச் செல்வான். மாந்தோப்பில் நிறைய மாங்காய்கள் காய்த்து தொங்கியது. பள்ளியிலிருந்து போகும்போதும், பள்ளியை விட்டு வரும்போதும் அந்த மாங்காயை பார்த்தான். சாப்பிடுவதற்கு ஆசை கொண்டான். அதனால் ஒரு நாள் அந்த மாங்காயை எப்படியாவது பறித்து விட வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு தோன்றியது .மறுநாள் பள்ளியை விட்டு வரும்போது அவன் மாங்காய் பறிப்பதற்காக சென்றான் .ஆனால் கேட் மூடப்பட்டிருந்தது. உள்ளே தோட்டக்கார தாத்தா செடிகளுக்கு தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தார் .பாபு மெதுவாக கேட்டின் மேலே ஏறி உள்ளே குதித்தான் .சத்தம் கேட்டு தாத்தா யாருடா அது என்று கேட்டுக் கொண்டே ஓடி வந்து அவனை பிடித்தார். உன் பெயர் என்ன? என்று கேட்டார் .அவன் பயந்து போய் பாபு என்றான் .சரி இனிமேல் இப்படி கேட்டின் மீது ஏறி குதிக்க கூடாது .சரியா? போ வீட்டுக்கு என்று மிரட்டி அனுப்பி விட்டார். பாபுவும் ஓடி வந்துவிட்டான் .மறுநாள் பள்ளிக்கூடம் போகும்போது, பாபுவின் கண் அந்த மாங்காய் மீது விழுந்தது .அன்று முழுவதும் பள்ளியில் மாங்காயை எப்படியாவது பறித்து விட வேண்டும் என்ற எண்ணம் அவன் மனதில் ஓடிக்கொண்டே இருந்தது .பள்ளி முடிந்து



மாலை வீடு திரும்பும் போது நேராக அந்த மாந்தோப்பின் கேட்டிற்கு வெளியே வந்து நின்றான். அப்பொழுது கேட் திறந்திருந்தது .உடனே உள்ளே மெதுவாக சென்று மரத்தின் மீது ஏறி மாங்காய் பறிக்கச் சென்றான் .அவனுக்கு எட்டவில்லை. கீழே இறங்கி ஒரு கல்லை எடுத்து மாங்காயை பார்த்து எறிந்தான். அந்த கல் மாங்காய் மீது படவில்லை ,ஆனால் தோட்டத்துக்கார தாத்தாவின் மேல் பட்டது .வலியால் துடித்த தாத்தா டேய் யார்ரா ? என்றார் .பாபு ஓடினான் .தாத்தா பார்த்துவிட்டார். நில்லுடா... நில்லுடா... என்று கத்திக் கொண்டே அவரும் ஓடி வந்தார் .ஆனால் பாபு சிக்காமல் வீட்டிற்கு ஓடி வந்து விட்டான். தாத்தாவிற்கு அதிக கோபம் வந்தது. வேலையை முடித்துவிட்டு சாயங்காலம் பாபுவின் வீட்டிற்கு வந்து தாத்தா அவனுடைய அம்மாவிடம் உங்கள் பையன் கல்லால் என்னை அடித்து விட்டான் பாருங்கள். எப்படி வீங்கி உள்ளது என்றார் கோபமாக, அவனை கண்டித்து வையுங்கள் என்று சொன்னார் .பாபுவின் அம்மாவும் பாபுவை அழைத்து இனிமேல் இதுபோல் செய்யக்கூடாது என்று கண்டித்தார் .அடுத்த நாள் சனி பள்ளி விடுமுறை நாள். ஊரிலிருந்து பாட்டி வருகிறார் அதுவும் பலகாரத்துடன் என்று அம்மா கூறினார். பாபுவிற்கு ஒரே குஷி. இருந்தாலும் பாட்டி வருவதற்குள் அந்த மாங்காயை எப்படியாவது பறித்து விட வேண்டும் என்று நினைத்துக் கொண்டு மீண்டும் மாந்தோப்பிற்கு சென்றான். கீழே கிடந்த கொம்பை எடுத்து அடித்தான் மரம் அசைந்து இரண்டு மூன்று மாங்காய்கள் சாலையில் விழுந்தது. தாத்தா உள்ளே இருந்து கொண்டே சத்தம் போட்டார் .பயத்தில் மீண்டும் ஓடி வந்து விட்டான் பாபு. வீட்டிற்குள் சென்று படுத்தான் அப்படியே தூங்கிவிட்டான். பாட்டியும் ,கோபுவும் பஸ்ஸை விட்டு இறங்கி ஊருக்குள்ளே வந்து கொண்டிருந்தார்கள். பாட்டி முன்னே நடந்து போய்க்கொண்டிருந்தாள் .பின்னால் வந்த கோபு மாமரத்தில் இருந்து கீழே விழுந்த மாங்காயை பார்த்து இரண்டு கைகளிலும் எடுத்துக் கொண்டான். அண்ணாந்து மாமரத்தை பார்த்தான் ஆஹா எவ்வளவு காய்கள் காச்சிருக்கு என்று பார்த்தபடியே நின்றிருந்தான் .பாட்டி வெகு தூரம் போய்விட்டாள். அப்பொழுதுதான் தோட்டக்கார தாத்தா கேட்டை சாத்திவிட்டு வெளியே வந்தார். கையில் மாங்காயுடன் இருந்த கோபுவை பார்த்து கையும் களவுமாக மாட்டிக் கொண்டாயா ?என்று பிடித்து பளார்,பளார் என்று இரண்டு அடி அடித்து விட்டார். பின்பு கையைப் பிடித்து இழுத்துக் கொண்டே பாபு வீட்டிற்குச் சென்று சத்தம் போட்டார். வெளியே வந்த பாபுவின் அம்மா என்ன சத்தம் போடுகிறீர்கள்? என்றாள்.பாபு இன்றைக்கும் மாந்தோப்பிற்கு வந்து மாங்காயை திருடி இருக்கிறான். அவனை இரண்டு அடி அடித்து கையோடு கூட்டிக்கொண்டு வந்திருக்கிறேன் என்றார் .அதற்கு பாபுவின் அம்மா அவன் இவ்வளவு நேரம் தூங்கிக் கொண்டிருந்தான். அவன் பாட்டி ஊரிலிருந்து வந்திருக்கிறார் அவன் அவர்களுடன் இனிப்பு, பலகாரம் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான். நீங்களே உள்ளே வந்து பாருங்கள் என்றாள். தாத்தாவும் உள்ளே வந்து பார்த்தார் அவருக்கு ஒரே அதிர்ச்சி !!உள்ளே பாபு பாட்டியுடன் இருந்தான். அப்பொழுது நான் அழைத்து வந்த பையன் யார்? என்று வெளியே வந்து பார்த்தார். இருவரும் ஒரே மாதிரி இருந்தார்கள் அவருக்கு ஒன்றும் புரியவில்லை. தலையை சொரிந்து கொண்டு விழித்தார். வெளியே வந்த பாட்டி கோபுவிடம் நீ மாங்காயை திருடினாயா ?என்று கேட்டார் .அதற்கு கோபு இல்லை பாட்டி நடந்து வரும் வழியில் கீழே விழுந்து கிடந்தது. அதைத்தான் நான் எடுத்துக் கொண்டேன். நான் திருடவில்லை என்று சொன்னான். அப்பொழுது பாபுவின் அம்மா வெளியில் வந்து வா கோபு ஏன் இவ்வளவு நேரம் கழித்து வருகிறாய்? என்றாள்.கோபுவின் கைகளில் மாங்காயை பார்த்தாள். தோட்டக்கார தாத்தா இதோ பாருங்கள் பாபு என்றார். பாட்டி சிரி த்தப்படியே பாபுவும், கோபுவும் இரட்டையர்கள் கோபு என்னுடன் ஊரில் இருக்கிறான் இப்பொழுது தான் நாங்கள் வந்தோம் என்றாள். தாத்தாவிற்கு அப்பொழுதுதான் உண்மை புரிந்தது நான் தான் தெரியாமல் தவறு செய்து விட்டேன் என்னை மன்னித்து விடுங்கள் என்றார். தவறு செய்தவன் ஒருவன், தண்டனை பெற்றது வேறொருவன். கோபு என்னை மன்னித்து விடப்பா என்று மன்னிப்பு கேட்டார். மாங்காயையும் பரிசாக கொடுத்து விட்டார்.



எம்.எல்.பிரபா
ஆதம்பாக்கம், சென்னை.

# வாழ்ந்தே தீருவோம்

# நகரும் நிழல்கள்

அத்தியாயம் -37



■முனைவர்
க. அன்பழகன் (ஹரணி)
கரந்தை.தஞ்சாவூர்

## எல்லாம் நன்மைக்கே

வள்ளியம்மையும் சிவராமனும் ஒரே நேரத்தில் அதிர்ந்தார்கள். அப்பா... ஐயா.. என்றார்கள் ஏகக்காலத்தில் இருவரும்.

உண்மைதான். இவனோட நோய் தீர்ந்துடீச்சி.. அதுக்காக யோசிக்கவேண்டாம். பார்க்கத்தான் விகாரமா இருக்கும். ஆனா நோய் இல்ல. அதுக்காக நீ யோசிக்கவேண்டாம்மா வள்ளியம்மை என்றார்.

ஐயா.. என்ன இது என்று தடுத்தான் சிவராமன்.

அப்பா.. என்னப்பா இது? உங்களுக்குப் பிடிச்சிருந்தா எனக்கு சம்மதம்.. ஒரு வாழ்க்கை அமைஞ்சப்புறம் நோய் வந்திருந்தா என்னப்பா பண்ணுவோம்.. உங்களுக்கு எது நல்லதுன்னு தோனுதோ அதை செய்யுங்கப்பா.. எனக்கு நல்லதுதானே இதுவரை செஞ்சிருக்கீங்க..

மாதவன் இருவரையும் கட்டித் தழுவிக்கொண்டார்.. நான் சரியா வாழலியோன்னு உறுத்தல் இருந்துச்சி.. கடவுள் உங்களுக்காகத்தான் எனக்கு வாழ்க்கைப் போட்டிருக்காரு போலருக்கு. வள்ளியம்மை எப்படியாச்சும் சிவராமனை மீண்டும் கோச்சிங் அனுப்பு.. அவனும் பாஸ் பண்ணிடுவான். உன்னை மாதிரி வேலை அமைஞ்சிடும்..

நீங்க ரெண்டுபேரும் கல்யாணம் பண்ணிக்கறோம்னு எனக்கு சத்தியம் பண்ணித்தாங்க.. என்றார் மாதவன் திடீரென்று.

என்னப்பா நீங்க.. அதான் சம்மதம் சொல்லிட்டேனே.. நீங்கதானே நடத்தி வைக்கப்போறீங்க என்றாள்.

இல்லைம்மா.. எனக்கு சிலவிஷயங்கள் தோனுது. அதை சொல்லமுடியாது.. சத்தியம்பண்ணுங்க ரெண்டுபேரும் என்று கையை நீட்டினார்.

சத்தியம் பண்ணிக்கொடுத்தார்கள் வள்ளியம்மையும் சிவராமனும்.

சரி போய் படுங்க..காலையில எழுந்து வேலைக்குப் போகணும்..

தன் அறைக்கு வந்தார் மாதவன். தன் கணக்கில் இருந்த பணத்தில் கொஞ்சம் கலாவதி கணக்கிற்கு மாற்றினார்.அது சற்றே பெரியதொகை. மிச்சம் கொஞ்சமிருந்தது. சில கடிதங்களை எழுதினார். ஒரு பேப்பரில் ரெவின்யு ஸ்டாம்பு ஒட்டி கையொப்பமிட்டார். மனதுக்குள் ஒருமுறை கலாவதியையும் பிள்ளைகளையும் நினைத்துக்கொண்டார். கண்களில் நீர் திரண்டது.



துடைத்துக்கொண்டார். காலையிலேயே வங்கியிலிருந்து எடுத்து வந்த கொஞ்சம்பணத்தை ஒரு கவரில் போட்டு அலமாரியில் வைத்தார். கவரின் மேல் வள்ளியம்மை சிவராமன் என்று எழுதி வைத்தார். இன்னொரு கவரில் கொஞ்சம் பணத்தை வைத்து மாதவன் செலவுக்கு என்று எழுதினார். விளக்கை அணைத்துவிட்டுப் படுத்தார். மனது தெளிந்திருந்தார். கலாவதி மனதுக்குள் வந்தார்.. என்னங்க என்றாள். என்னப்பா கலா.. பிள்ளைகங்களப் பாத்துக்க என்றார்.

மறுநாள் பொழுது விடிந்தது. வள்ளியம்மை எழுந்து குளித்து முடித்து அடுப்படியில் காபி போட்டுக்கொண்டிருந்தாள். சிவராமன் எழுந்துவிட்டிருந்தான். மாதவன் எழவில்லை.

நெடுநேரமாகியும் மாதவன் எழவில்லை என்றதும் அறைக்குள் போனார்கள். மாதவன் உறங்கிக்கொண்டிருந்தார். வள்ளியம்மை எழுப்பினாள்.. அப்பா.. மணி பாருங்க.. ஏழாவப்போவுது.. மாதவன் எழவில்லை.,

ஐயா.. எ.ழுந்திரிங்க. என்றான் சிவராமன்.

மாதவன் எழவேயில்லை.

இருவருக்கும் புரிந்தது. கதறினார்கள்.

மாதவன் நிரந்தர உறக்கத்திலிருந்தார்.

கடிதங்கள் தெளிவாக எழுதியிருந்தார்.

மனைவிக்கான கடிதம். வள்ளியம்மைக்கு ஒரு கடிதம். சிவராமனுக்கு ஒரு கடிதம்.

தன் காரியம் பார்க்க மாதவன் செலவுக்குக் கவரைப் பயன்படுத்திக்கொள்ள எழுதியிருந்தார். வள்ளியம்மை சிவராமன் திருமணத்திற்குத் தனியே எழுதியிருந்த கவரை தன் அன்பளிப்பாக எடுத்துக்கொள்ளச் சொல்லியிருந்தார். தன்னுடைய பென்ஷன் புத்தகம் மற்றவைகளை கலாவதியின் முகவரியை எழுதி அவர்களிடம் தன் காரியம் முடிந்ததும் ஒப்படைக்கச் சொல்லியிருந்தார்.

அப்பா... ஐயா.. என்று விழுந்து புரண்டு அழுதார்கள்.

அங்கே குலதெய்வம் கோயிலில் தன் மகள், மகன் வயிற்றுப் பிள்ளைகளுக்குக் காதுகுத்தக் கூடியிருந்தார்கள். கலாவதி மும்முரமாக இருந்தாள்.

மூத்த மகள் சொன்னாள் என் பிள்ளைக்கு அப்பா பேர வச்சிடுங்க மாதவன்.. இதுதான் என் முடிவு என்றாள்.

எல்லோரும் ஆளுக்கொரு வேலை பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

இங்கே கையில் கொள்ளிச்சட்டியுடன் சிவராமன் போய்க்கொண்டிருந்தான். அவனருகில் வள்ளியம்மை நடந்துகொண்டிருந்தாள். அழுதுகொண்டே நடந்தார்கள்.

மாதவனின் கடைசி ஊர்வலம் போய்க்கொண்டிருந்தது.

(நிறைந்தது).

# அஷ்டமி மற்றும் நவமி நாட்களில் எந்த நல்ல காரியமும் செய்ய கூடாது என்பது ஏன்?

ஒரு மாதத்திற்கு அமாவாசை, ஒரு பவுர்ணமி வரும். அந்த இரு நிகழ்ச்சிகளும் பூமி மற்றும் சந்திரனின் சுழற்சியால் ஏற்படுவதை நாம் அறிவோம். நாட்களைச் சுட்டிக்காட்ட அமாவாசையிலிருந்து அல்லது பவுர்ணமியிலிருந்து எத்தனையாவது நாள் என்று குறிப்பிட்டுக் காட்டவே பிரதமை முதல் சதுர்த்தசி வரை 14 நாட்களுக்கும் பெயரிட்டிருக்கிறார்கள். பெயர் தமிழில் வைத்திருந்தால் விளங்கும். சமஸ்கிருதம் ஆதிக்கத்தில் இருந்த போது தமிழ் வருடங்களின் பெயரை கூட பொருள் தெரியாத வடமொழியில் அல்லவா வைத்து விட்டார்கள்? நாமும் அதை மாற்ற மனமின்றி வைத்துக் கொண்டு திண்டாடுகிறோம். அதே போல் தான் நாட்களின் பெயர்களும் பின்வருமாறு வடமொழியில் உள்ளன.

1. பவுர்ணமி, அமாவசைக்கு அடுத்த நாள் பிரதமை பிரதமர் என்றால் பிரதானமானவர் அதாவது முதல்வர் என்று பொருள். அதுபோல் பிரதமை என்றால் முதல் நாள்.

2. துவிதை என்றால் இரண்டாம் நாள் தோ என்றால் இரண்டு. துவிச்சக்கர வண்டி என்று மிதிவண்டியை குறிப்பிடுவது வணக்கம்.

3. திரிதியை என்றால் மூன்றாம் நாள் திரி என்றால் மூன்று அல்லவா?

4. சதுர்த்தி என்றால் நான்காம் நாள் சதுரம் நான்கு பக்கங்கள் கொண் டது.

5. பஞ்சமி என்றால் ஐந்தாம் நாள் பாஞ்ச் என்றால் அய்ந்து எனப் பொருள்.

6. சஷ்டி என்றால் ஆறாம் நாள்.

7. சப்தமி என்றால் ஏழாம் நாள். சப்த ஸ்வரங்கள் என ஏழு ஸ்வரங்களைக் கூறுவது குறிப்பிடத்தக்கது.

8. அஷ்டமி என்றால் எட்டாம் நாள். அஷ்டவக்கிரம் என்று எட்டு கோணல்களைக் கூறுவதையும் அஷ்ட லட்சுமி என்று எட்டு லட்சுமிகளையும் குறிப்பிடுவதை அறிவோம்.

9. நவமி என்றால் ஒன்பதாம் நாள் நவ என்றால் ஒன்பது என்றும் நவ கிரகங்கள் என்பதும் அனைவருக்கும் தெரிந்ததே.

10. தசமி என்றால் பத்தாம் நாள் தஸ் என்றால் பத்து அல்லவா? தசாவதாரம் என்று கடவுளின் அவதாரங்களைக் கூறக் கேட்டிருக்கிறோம்.

11. ஏகாதசி என்றால் பதினொன்றாம் நாள் ஏக் என்றால் ஒன்று தஸ் என்றால் பத்து இரண்டின் கூட்டுத் தொகை பதினொன்று.

12. துவாதசி என்றால் பன்னிரண்டாம் நாள் தோ/ துவி என்றால் இரண்டு தஸ் என்றால் பத்து எனவே இதன் கூட்டுத்தொகை பன்னிரண்டு ஆகும்.

13. திரியோதசி என்றால் பதிமூன்றாம் நாள் திரி என்றால் மூன்று + தஸ் என்றால் பத்து ஆகப் பதிமூன்று.

14. சதுர்த்தசி என்றால் பதினான்காம் நாள் சதுர் (சதுரம்) என்றால் நான்கு அத்தோடு தஸ் என்ற பத்து சேர்த்தால் பதினான்கு என ஆகும்.




சதுர்த்தசிக்கும் அடுத்தது பவுர்ணமி அல்லது அமாவாசை ஆகி விடும். இப்படி நாட்களைச் சுட்டிக் காட்ட வைத்த பெயர்களில் என்ன வேறுபாடு இருக்கிறது? அமாவாசை அல்லது பவுர்ணமிக்குப் பிறகு வரும் எட்டாம் நாளும் ஒன்பதாம் நாளும் கெட்டவை என்பதற்கு ஏதேனும் அறிவியல் பூர்வமான காரணம் உள்ளதா ?

ஆனால் நம் முன்னோர்கள் முட்டாள்கள் அல்ல . நம் முன்னோர்கள் அஷ்டமி அன்றும் , நவமி அன்றும் நல்ல காரியங்கள் ஏன் செய்வதில்லை ? அதற்கு என்ன காரணம் ?

அதில்தான் விஞ்ஞானம் இருக்கிறது. நம் முன்னோர்களின் வானியல் அறிவு அதில் பளிச்சிடுகிறது. கிருஷ்ண பரமாத்மா அஷ்டமி அன்று பிறந்ததால் ஒரு மிகப்பெரிய போரை நடத்த வேண்டி இருந்தது.

ஸ்ரீ ராமன் நவமி அன்று பிறந்ததால் அவரது வாழ்வில் 14 வருடம் காட்டில் கழிக்க வேண்டி இருந்தது. இதுதான் காரணமா ? இல்லை ! பூமி தன்னைத்தானே சுற்றிக் கொள்வதை ஒரு நாள் என்று சொல்கிறோம்.

அதே பூமி தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனை சுற்றி வருவதை ஒரு வருடம் என்கிறோம்.

நிலவு தன்னைத்தானே சுற்றிக்கொண்டு பூமியை சுற்றி வருவதை ஒரு மாதம் என்கிறோம். அதனால் தான் மாதத்திற்கு திங்கள் என்ற பெயர் உண்டு. (திங்கள் என்றால் சந்திரன்)

நிலவு தன்னைத்தானே சுற்றிக்கொண்டு பூமியை சுற்றி வரும் போது ஒரு பாதி சுற்று ( 15 நாட்கள் அமாவாசையாகவும் ) அடுத்த 15 நாட்கள் பௌர்ணமி என்றும் சொல்கிறோம்.

அமாவாசைக்கும், பௌர்ணமிக்கு இடைப்பட்ட எட்டாவது நாளை அஷ்டமி என்று சொல்கிறோம். ஒரு மாதத்திற்கு இரண்டு அஷ்டமி வரும்.தேய்பிறை அஷ்டமி என்றும் வளர்பிறை அஷ்டமி என்றும் சொல்கிறோம்.

சரியாக அஷ்டமி தினத்தன்று நாம் வாழும் பூமியானது சூரியனுக்கும், சந்திரனுக்கும் நடுவில் வருகிறது.

அவ்வேளையில் சூரியனின் சக்தியும் , சந்திரனின் சக்தியும் பூமியை தங்கள் பக்கம் இழுப்பதால் ஒருவித அதிர்வு ஏற்படுகிறது.

அந்த அதிர்வு பூமியில் உள்ள அனைத்து ஜீவராசிகளிடமும் எதிரொலிக்கும்.

அதன் காரணமாக எந்த ஜீவராசியாலும் ஒரு நிலையான முடிவை எடுக்க முடியாது. அஷ்டமி, நவமி நாட்களில் செய்யும் காரியம் இழுபறியாக முடியும். அஷ்டமி, நவமி திதிகள் எதிர்மறையான எண்ணங்களைத் தோற்றுவிக்கும். அவ்வேளைகளில் நாம் எடுக்கும் முடிவும் நிலையற்றதாக இருக்கும்.

நவமி கழிந்த பிறகே பூமி தனது இயல்பு நிலைக்கு திரும்பும். அப்போதுதான் மனிதர்கள் உட்பட அனைத்து ஜீவராசிகள் மனமும் நிலை பெறும்.

அதனால் அஷ்டமி அன்றும், நவமி நவநாழிகை வரை எந்த முடிவையும் எடுக்கக் கூடாது என்று நம் முன்னோர்கள் முடிவெடுத்தார்கள்.



ப.கோபிபச்சமுத்து
பாரதியார் நகர்,
கிருஷ்ணகிரி - 1

# தினம் ஒரு தலைவர்கள் தீன் தயாள் குப்தா வரலாறு

1951 ஆம் ஆண்டு, சுதந்திரம் அடைந்த சில ஆண்டுகளுக்குப் பிறகு, டாக்டர் ஷ்யாமா பிரசாத் முகர்ஜியுடன் சேர்ந்து, தீன் தயாள் உபாத்யாயா புதிய கட்சியைத் தொடங்கினார் ராஷ்ட்ரிய ஜன சங்கம் ரிஷப் சவுகான் பண்டிட் தீன் தயாள் உபாத்யாயா பாஜகவின் முன்னோடியான பாரதிய ஜன சங்கத்தின் சித்தாந்த கட்டமைப்பாளராக பணியாற்றினார். அவரது குறிப்பிடத்தக்க பங்களிப்புகள் இந்த புதிய அரசியல் அமைப்பிற்கான அடித்தளத்தை அமைத்தது மட்டுமல்லாமல், அவரது சமூக தத்துவங்களையும் வெளிப்படுத்தின, அவரை வெறும் அரசியல் அந்தஸ்துக்கு அப்பால் உயர்த்தின.

உத்தரபிரதேச மாநிலம் மதுரா மாவட்டத்தில் செப்டம்பர் 25, 1916 அன்று பிறந்த உபாத்யாயா, சிறு வயதிலிருந்தே அறிவார்ந்த சிறந்து விளங்கினார். பிலானியில் பள்ளிப் படிப்பை முடித்த அவர், பின்னர் ஆங்கில இலக்கியத்தில் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டம், பி.இ.டி. மற்றும் மருத்துவம் ஆகிய இரண்டையும் பெற்றார்.

ஆர்.எஸ்.எஸ்ஸின் தீவிர சக்தி

1937 ஆம் ஆண்டு ராஷ்ட்ரிய சுயம்சேவக் சங்கத்தில் (ஆர்.எஸ். எஸ்) சேர்ந்தபோது உபாத்யாயாவின் அரசியல் பயணம் 21 வயதில் தொடங்கியது. இந்தக் காலகட்டத்தில்தான் அவர் எம்.எஸ். கோல்வால்கரை சந்தித்தார், அவர் அவரது வழிகாட்டியாக மாறி அவரது சித்தாந்தப் பாதையை வடிவமைத்தார். பல ஆண்டுகளாக, உபாத்யாயா ஆர். எஸ்.எஸ்ஸில் ஒரு குறிப்பிடத்தக்க நபராக உருவெடுத்தார். இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தின் போது, அவர் 'அகண்ட பாரதம்: குறிக்கோள்கள் மற்றும் வழிமுறைகள்' என்ற தலைப்பில் ஒரு செல்வாக்கு மிக்க கட்டுரையை எழுதினார், அதில் அவர் ஒவ்வொரு சமூகமும், அது முஸ்லிம் அல்லது கிறிஸ்தவராக இருந்தாலும், "இந்த நாட்டில் இந்து கலாச்சாரம் என்ற நீடித்த தேசிய கலாச்சார நீரோட்டத்துடன் தங்களை அடையாளம் காண வேண்டும்" என்று வலியுறுத்தினார். இது அடையாள அடிப்படையிலான பிளவுகளைத் தாண்டிய ஒருங்கிணைந்த இந்தியாவைப் பற்றிய அவரது பார்வையை வெளிப்படுத்தியது, மேலும் இது பெரும்பாலும் காங்கிரஸால் விமர்சிக்கப்பட்டது.

தீன் தயாள் உபாத்யாயா கலாச்சாரத்தை தேசியவாதத்தின் சாராம்சமாகக் கருதினார், பன்முக கலாச்சாரக் கருத்தை உறுதியாக நிராகரித்தார். "அனைத்து மக்களும் ஒரே கலாச்சார நீரோட்டத்தின் ஒரு பகுதியாக மாறாவிட்டால், தேசிய ஒற்றுமை அல்லது ஒருங்கிணைப்பு சாத்தியமற்றது" என்று அவர் வாதிட்டார். இந்திய தேசியவாதத்தைப் பாதுகாப்பதற்கு ஒரு ஒருங்கிணைந்த கலாச்சார அடித்தளம் தேவை என்று அவர் நம்பினார்.

1942 ஆம் ஆண்டில், உபாத்யாயா ஆர்எஸ்எஸ்ஸின் முழு உறுப்பினரானார். தேசியவாதத்தை ஆதரிக்கும் ராஷ்ட்ரிய தர்மா என்ற மாத இதழைத் தொடங்கினார். பஞ்சஜன்யா மற்றும் சுதேஷ் என்ற நாளிதழ் உள்ளிட்ட வாராந்திர வெளியீடுகளையும் அவர் தொடங்கினார்.


உள்ளூர் சமூகங்களை அதிகாரப்படுத்த அதிகாரத்தை பரவலாக்குவதில் அவர் காட்டிய முக்கியத்துவம், 1968 இல் அவர் மறைந்து கிட்டத்தட்ட ஒரு தசாப்தத்திற்குப் பிறகு தோன்றிய பஞ்சாயத்து ராஜ் அமைப்புடன் ஒத்துப்போகிறது.

ஜன சங்கத்தின் ஸ்தாபனம்

1951 ஆம் ஆண்டு, சுதந்திரம் அடைந்த சில ஆண்டுகளுக்குப் பிறகு, டாக்டர் ஷ்யாமா பிரசாத் முகர்ஜியுடன் சேர்ந்து, தீன் தயாள் உபாத்யாயா ராஷ்ட்ரிய ஜன சங்கம் என்ற புதிய கட்சியைத் தொடங்கினார்.

பின்னர் உபாத்யாயா ராஷ்ட்ரிய ஜன சங்கத்திற்கான அடித்தளத்தை அமைத்தார். அவரது இலட்சியவாதமும் அர்ப்பணிப்பும் ஷ்யாமா பிரசாத் முகர்ஜியைக் கவர்ந்தது, அவர் "எனக்கு இரண்டு தீன் தயாள்களைக் கொடுங்கள், நான் நாட்டின் முகத்தையே முற்றிலுமாக மாற்றுவேன்" என்று பிரபலமாகக் குறிப்பிட்டார். 1953 இல் முகர்ஜி இறந்ததைத் தொடர்ந்து, ஜன சங்கத்தின் தலைமை உபாத்யாயாவிடம் சென்றது.

அவரது வழிகாட்டுதலின் கீழ், கட்சி புதிய உயரங்களை எட்டியது, அதன் சித்தாந்தத்தை நாடு முழுவதும் திறம்படத் தெரிவித்தது. பின்னர் பாஜகவால் ஏற்றுக்கொள்ளப்படும் அரசியல் தத்துவத்தை வடிவமைப்பதில் அவரது முயற்சிகள் முக்கிய பங்கு வகித்தன.



தீன் தயாள் உபாத்யாயா, கலாச்சாரத்தை தேசியவாதத்தின் சாரமாகக் கருதினார், பன்முக கலாச்சாரக் கருத்தை உறுதியாக நிராகரித்தார். "எல்லா மக்களும் ஒரே கலாச்சார நீரோட்டத்தின் ஒரு பகுதியாக மாறாவிட்டால், தேசிய ஒற்றுமை அல்லது ஒருங்கிணைப்பு சாத்தியமற்றது" என்று அவர் வாதிட்டார். இந்திய தேசியவாதத்தைப் பாதுகாப்பதற்கு ஒருங்கிணைந்த கலாச்சார அடித்தளம் தேவை என்று அவர் நம்பினார்.

இருப்பினும், உபாத்யாயாவின் பங்களிப்புகள் அரசியலுக்கு அப்பாற்பட்டவை; அவரது மிக முக்கியமான மரபு 'ஏகாத்மா' அல்லது 'ஒருங்கிணைந்த மனிதநேயம்' என்று அழைக்கப்படும் அவரது தத்துவ கட்டமைப்பில் உள்ளது.

உபாத்யாயாவின் கூற்றுப்படி, தனிநபர்களின் நோக்கங்கள் சமூகத்தின் பரந்த இலக்குகளை பூர்த்தி செய்ய வேண்டும், ஏனெனில் ஒரு பகிரப்பட்ட சாராம்சம் அனைத்து மனிதகுலத்தையும் ஒன்றிணைக்கிறது. தனிப்பட்ட மற்றும் குடும்ப அக்கறைகளைத் தாண்டி, அதிக நன்மைக்கு முன்னுரிமை அளிக்கும் ஒரு சிறந்த குடிமகனை அவர் கற்பனை செய்தார்.

ஒரு தீவிர தேசியவாதியான உபாத்யாயா, மேற்கத்திய தத்துவங்களான தனித்துவம் மற்றும் சோசலிசத்தை கடைபிடிப்பதன் மூலம் இந்தியா செழிக்க முடியாது என்று வாதிட்டார்.

ஒரு பொருளாதார நிபுணராக, உபாத்யாயா காந்திய சோசலிசத்துடன் அதிகமாக அடையாளம் காணப்பட்டார், சிறு நிறுவனங்கள் மூலம் உற்பத்தியை அதிகப்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

திட்டக் கமிஷனை கடுமையாக விமர்சித்த அவர், வேலையின்மை, பொது சுகாதாரம் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு போன்ற முக்கிய பிரச்சினைகளை கையாள்வதில் அதன் தோல்வியை எடுத்துக்காட்டினார். இந்தியாவின் கலாச்சார பாரம்பரியத்தை ஏற்றுக்கொண்டு அதற்கு ஏற்ப மாற்றுவதன் மூலம் மட்டுமே உண்மையான முன்னேற்றத்தை அடைய முடியும் என்ற நம்பிக்கையில் இந்தியாவுக்கான அவரது தொலைநோக்கு வேரூன்றியது.

1968 ஆம் ஆண்டு உபாத்யாயா முகல்சராய் நிலையத்திற்கு அருகில் அறிமுகமில்லாத சூழ்நிலையில் இறந்து கிடந்தார். அவர் கொலை செய்யப்பட்டார், இந்த செயல் இன்றுவரை ஒரு மர்மமாகவே உள்ளது.

# ‘லெனின் பாண்டியன்’ படத்தின் புதிய போஸ்டர் வெளியீடு



சத்ய ஜோதி பிலிம்ஸ் டி. ஜி. தியாகராஜன் வழங்க, தயாரிப்பாளர்களாக செந்தில் தியாகராஜன், அர்ஜுன் தியாகராஜன் மற்றும் சுப்பு பஞ்சு ஆகியோர் இணைந்து தயாரித்துள்ள படம் 'லெனின் பாண்டியன்'. இப்படத்தை டி. டி. பாலச்சந்திரன் இயக்கியுள்ளார்.

'லெனின் பாண்டியன்' படத்தில் பல முக்கியமான நட்சத்திரங்கள் இணைந்து பணியாற்றுகின்றனர். இதில் தமிழ் திரைப்பட உலகின் பன்முக திறமையாளராக திகழும் கங்கை அமரன் நடித்துள்ளார். மேலும், நடிகை மற்றும் அரசியல்வாதியான ரோஜா நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும் தமிழ் திரையுலகில் திரும்பி வந்துள்ளார். இவர்களுடன் நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் பேரன் தர்ஷன் கணேசன், ஷ்ரீதா ராவ், ஆடுகளம் நரேன், யுகேந்திரன், போஸ் வெங்கட், ஜார்ஜ் மரியன், அர்ச்சனா, மற்றும் சுப்பு பஞ்சு ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இப்படத்திற்கு சந்தோஷ் நாராயணன் இசையமைத்துள்ளார். ஒளிப்பதிவை ஏ. எம். எட்வின் சக்காய் கவனிக்க, தொகுப்பை நாகூரான் ராமச்சந்திரன் மேற்கொண்டுள்ளார். இந்த நிலையில், 'லெனின் பாண்டியன்' படத்தின் புதிய போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. கங்கை அமரன், ரோஜா வயதான தோற்றத்திலும், தர்ஷன் கணேஷ் காவல்துறை உடையில் துப்பாக்கியுடன் காணப்படுகிறார். கிராமப்புறத்தை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இப்படத்தின் வெளியீட்டு தேதி குறித்த எந்த தகவலும் வெளியாகவில்லை.



சன் டிவியில் ஒளிபரப்பான ரோஜா சீரியல் மூலம் தமிழக மக்கள் மத்தியில் பிரபலமானவர் நடிகை பிரியங்கா நல்காரி. இவர் சீதா ராமன், நளதமயந்தி ஆகிய சீரியல்களிலும் நடித்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், நடிகை பிரியங்கா திருமண லுக்கில் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ள புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகிறது.

# விளம்பர உலகில் மீண்டும் அஜித்





தமிழ் சினிமாவின் முன்னணி நடிகராக மட்டுமின்றி, ஒரு தீவிர கார்பந்தய வீரராகவும் திகழ்ந்து வருபவர் நடிகர் அஜித்குமார். இவர் குட் பேட் அக்லி படத்திற்கு பிறகு கார் ரேஸில் கவனம் செலுத்தி வருகிறார்.

தனது சொந்த கார் ரேஸிங் அணியான, அஜித்குமார் ரேஸிங்' மூலம் பல்வேறு பந்தயப் போட்டிகளில் கலந்துவருகிறார் அஜித்குமார். அஜித்தின் இந்த கார் ரேஸ் வாழ்க்கைத் தொடர்பான ஆவணப்படமும் உருவாகி வருகிறது.

இதனிடையே ரிலையன்ஸ் நிறுவனத்தின் எனர்ஜி டிரிங்க் பிராண்டான 'கேம்பா எனர்ஜி' (Campa Energy), அஜித் குமாரின் 'அஜித் குமார் ரேஸிங்' அணியின் அதிகாரப்பூர்வ எனர்ஜி பார்ட்னராக செயல்படும் என அறிவிப்பு வெளியானது. இந்நிலையில் கேம்பா எனர்ஜி ட்ரிங்க் விளம்பரத்தில் அஜித் நடித்துள்ளது போன்ற புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன. இதன்மூலம் நீண்ட இடைவேளைக்குப் பிறகு அஜித் குமார் மீண்டும் விளம்பர உலகில் கால் பதித்துள்ளார்.


இந்திய விளையாட்டு வீரர்களை சர்வதேச அளவில் ஊக்குவிக்கவும், "மேட்-இன்-இந்தியா" திட்டங்களுக்கு ஆதரவளிக்கவும் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என ரிலையன்ஸ் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# மம்மூட்டியின் களம்காவல் ஓ.டி.டி ரிலீஸ் அப்டேட்!




சமீப காலங்களாகவே வித்தியாசமாக கதைகளை தேர்ந்தெடுத்து நடித்துவருகிறார் நடிகர் மம்மூட்டி. அந்த வகையில், அறிமுக இயக்குநர் ஜித்தின் கே ஜோஸ் இயக்கத்தில் மம்மூட்டி, விநாயகன், காயத்ரி அர்ஜுன், ரஜிஷா விஜயன், ஸ்ருதி ராமசந்திரன், மாளவிகா மேனன் உள்ளிட்ட பலர் நடித்துள்ள படம் 'களம்காவல்'.

இந்தப் படம் கடந்த ஆண்டு டிசம்பர் 5-ம் தேதி திரையரங்குகளில் வெளியாகி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. வில்லனாக மம்மூட்டி நடித்திருப்ப இப்படம், குறைந்த பட்ஜெட்டில் உருவாகி ரூ.80 கோடி வசூல் செய்தது. இந்நிலையில் இப்படத்தின் ஓ.டி.டி. ரிலீஸ் குறித்த அப்டேட் வெளியாகி உள்ளது. அதன்படி இப்படம் நாளைமுதல் Sony LIV ஓ.டி.டி தளத்தில் வெளியாக உள்ளது.



எதிர்நீச்சல் சீரியல் மூலம் பிரபலமாகி தற்போது அய்யனார் துணை சீரியலில் கதாநாயகியாக கலக்கிக்கொண்டிருப்பவர் நடிகை மதுமிதா. இவர் இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் பிரபலம் ஆவார். இவருடைய போட்டோஷூட் புகைப்படங்கள் ரசிகர்கள் மத்தியில் உடனடியாக வைரலாகும்.

இந்த நிலையில், திருமண கோலத்தில் தான் எடுத்துக்கொண்ட லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை பதிவு செய்துள்ளார். இந்த புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.

# ‘பூக்கி’ படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு




விஜய் ஆண்டனி ஆரம்பத்தில் இசையமைப்பாளராக திரைத்துறையில் நுழைந்தவர். தற்போது இசையமைப்பாளர், பாடகர், நடிகர், தயாரிப்பாளர், இயக்குனர் என பல பரிமாணங்களில் கலக்கி வரும் விஜய் ஆண்டனி தற்போது 'பூக்கி' என்ற படத்தை தயாரிக்கிறார். இதில் விஜய் ஆண்டனியின் அக்கா மகனும், சில படங்களில் உதவி இயக்குனராகவும் பணியாற்றிய அஜய் தீஷன் கதாநாயகனாக நடிக்கிறார்.

சலீம் படத்தில் ஒளிப்பதிவாளராக பணியாற்றிய கணேஷ் சந்திரா 'பூக்கி' படத்தை இயக்குகிறார். இதில் நடிகை தனுஷா கதாநாயகியாக நடிக்கிறார். மேலும் பாண்டியராஜன், சுனில், இந்துமதி மணிகண்டன், விவேக் பிரசன்னா, பிளாக் பாண்டி, ஆதித்யா கதிர், பிரியங்கா ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

2கே தலைமுறை காதலர்களின் ரிலேஷன்ஷிப் பிரச்சினைகளை மையமாக வைத்து கலக்கலான காமெடியுடன், பரபரப்பான திரைக்கதையில், இப்படம் உருவாகி வருகிறது.

இந்நிலையில், 'பூக்கி' திரைப்படம் வரும் பிப்ரவரி 13ம் தேதி வெளியாகும் என படக்குழு போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளது.

# “மரகத நாணயம் 2’ படத்தின் அதிரடி புரோமோ வெளியீடு!

தமிழ் திரையுலகில் பேண்டஸி மற்றும் நகைச்சுவை இணைந்து வெற்றிகரமாக உருவான சில படங்களில், ஒன்று மரகத நாணயம். நடிகர் ஆதி மற்றும் நிக்கி கல்ராணி நடிப்பில், இயக்குநர் ஏ.ஆர்.கே. சரவணன் இயக்கத்தில் வெளியான இந்த படம் வசூல் மற்றும் விமர்சன ரீதியாக நல்ல வரவேற்பை பெற்றது.

இதனைத்தொடர்ந்து தற்போது இதன் இரண்டாம் பாகம் உருவாகி வருகிறது. இரண்டாம் பாகத்தையும் ஏகேஆர் சரவணன்தான் இயக்குகிறார். இதில் ஆதி, நிக்கி கல்ராணி, பிரியா பவானி சங்கர், முனிஷ்காந்த், சத்யராஜ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இப்படத்திற்கு திபு நினன் தாமஸ் இசையமைத்துள்ளார்.

பேஷன் ஸ்டுடியோஸ், அக்செஸ் ஃபிலிம் ஃபேக்டரி இணைந்து படத்தை தயாரித்துள்ளது. இந்நிலையில் பொங்கலை முன்னிட்டு, படக்குழு சிறப்பு புரோமோ ஒன்றை வெளியிட்டுள்ளது.



We Are Urgently **Hiring!**

**Marketing Manager**
Ad Sales (Print Media)

Package Rs. 4.8 LPA

Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai

Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.

**Key responsibilities for Marketing Manager**

- Minimum 5 years of experience in print media ad sales
- Proven experience in space selling
- Strong background in field sales and client acquisition
- Excellent communication and negotiation skills
- If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you

If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com

**Call: 9337501889**

VILAMBARAM

**WANTED**
10 SMART FEMALE
**Telecallers**


Job Type: Full-time
Education : Bachelor's degree
Freshers And Experience
Both can apply.

SEO & DIGITAL MARKETING
COMPANY SINCE 2020
Don't miss this opportunity
INTERESTED CANDIDATES CAN APPLY
+91 9337501889
+91 7789941009

Job @ CHENNAI
www.vilambaram.com

**உடன்குடியில்**
**ஸ்ரீவேல்முருகன்**
**டெக்ஸ்டைல்ஸ்**
**ஜவுளி, நகைக்கடையில்**
**வேலைக்கு ஆண்கள்,**
**பெண்கள் தேவை.**
தகுதிக்கேற்ப சம்பளம்.
**Ph: 81442 27771**




**ஆட்கள் தேவை**

**1.Supervisor**
with any post graduate degree Age 45 above to 55
**2.Security** 2 Persons
**3.Garderner**
செடிகளை பராமரிக்க வேண்டும்

**தேவதாஸ் மருத்துவமனை வளாகம்**
நித்திரவிளை,
கன்னியாகுமரி மாவட்டம்
**Cell : 6382807831**




**WANTED**
**NEWS COORDINATOR**

Salary Rs. 25000 Plus
*Salary is not a constraint for right candidate

**Responsibilities:**

1. Appoint Reporters and Photographers in Tamil Nadu Districts and Taluks
2. Will coordinate with reporters and the news desk
3. Should have a minimum of six years of experience in a print and TV newsroom.
4. Will report to the editors at the Chennai office

PRGI No. TNBIL/25/A1569

வைகறையில் **பேப்பர்பாய்**

Send CV to padmamediapublications@gmail.com
Call 9337501889

தூத்துக்குடி, திருநெல்வேலி சிப்காட் பகுதியில் உள்ள பிரபல பன்னாட்டு நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை. (ஆண்கள் மட்டும்)

**ASST. செக்யூரிட்டி ஆபிஸர்**
சம்பளம் : 27500 (Ex.Serviceman)
**செக்யூரிட்டி சூப்பர் வைசர்**
சம்பளம் : 24506 (Ex.Serviceman)
**செக்யூரிட்டி கார்டு**
சம்பளம் : 20701 (Civil)

8 மணி நேர வேலை
System work தெரிந்தவர்களுக்கும், முன் அனுபவம் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்

படிப்பு : 10th Pass அதற்குமேல்
வார விடுமுறை உண்டு
வருடாந்திர ஊதிய உயர்வு
ESI / PF / போனஸ் உண்டு
வயது : 25 முதல் 50 வயது வரை
தங்கும் வசதி செய்து தரப்படும்
குறைந்த விலையில் உணவு வசதி செய்து தரப்படும்

**98949 99422**
**99941 34169**
**81109 77577**











திருவள்ளுவர் நாள்.

## வான்புகழ் கொண்ட வள்ளுவன்.!

வள்ளுவரைக் கொண்டாடுவோம்.!நமக்கு வாழும்நெறி
தந்ததனாலே.. தெள்ளுத்தமிழ் மறையோதுவோம்..நம்
தெய்வப் புலவர் அருளுவதாலே.!

முப்பாலில் முத்தமிழர் நெறிவளர்த்தவர்! முயற்சியினால்
வென்றுவாழ வழிவகுத்தவர்.! தப்பாமல் நேர்வழிக்குத் தடம்
வகுத்தவர்! தரணியிலே மாந்ணர்வாழ தவமிருந்தவர்!

அறம் பொருள் இன்பம் என்ற அன்புநெறியிலே
அறிவு என்ற கோவிலுக்கு வாசல் திறந்திட..
நிறம் சாதி மதம் கடந்து மனிதர் ஏகிட.. நிறைவானப்
பொதுமறையை அன்றுதந்தவர்.!

பரம்பொருளே மனிதர் என்று சான்று பகர்ந்தவர்!
பசித்தவர்க்காய் பரமனிடம் கேள்விக் கேட்டவர்.!
மறைபொருளை உலகத்திற்காய் குறளில் வைத்தவர்! மனித
நேயப் பாவலரை வாழ்த்தி வணங்குவோம்!

பிறப்பொக்கும் என்று புரட்சி செய்தவர் யாரோ?
பேதமற்ற சமுதாயம் விழைந்தவர் யாரோ? இரக்கத்தோடு
மானுடத்தை இணைத்தவர் யாரோ? இல்லறத்தில்
துறவறத்தை உரைத்தவர் யாரோ?

அறம் பொருள் இன்பம் தந்த அறிவொளி யாரோ?
அன்னைத் தமிழ் நாடு கண்ட பாவலர் யாரோ?
சிரம் தாழ்த்தி திருவள்ளுவர் குறளைப் போற்றியே..
செந்நா புலவரை நாம் வாழ்த்தி வணங்குவோம்!

**பொற்கிழிப் பாவலர் வே.கல்யாண்குமார்,** பெங்களூரு.



## நாணும் பொங்கலாய்

நீ இருப்பதெல்லாம்
ரசனைதான்... அதற்காய்
காணும் பொங்கலாகவே
கடைசிவரை இருந்திடாமல்
இனியேனும் கொஞ்சம்
என்னிடத்தில் நெருங்கி வா!
இனிப்பான உன் இதழால்
நா(ன்) ருசிக்கப் பொங்கல் தா!

கொம்பிலே பூவைச்
சுற்றிக்கொண்டு
வாடிவாசலில் துள்ளிக்குதித்து
வருகிற ஜல்லிக்கட்டு
காளையைப் போலவே
நீயும் துள்ளிக்குதித்து
வருகிறாய்...
கொண்டையில்
பூவைச்
சுற்றிக்கொண்டு
உன் வீட்டு
வாசலிலிருந்து!



**சு. அருண் பிரகாஷ்**



## ஏரும் எருதும்

பார் போற்றும் தமிழர் பெருமை
ஏர் சொல்லும் சிறப்பாக

காலிரண்டு உறவாடி
கழனி புகழ் பாடி
காசினிக்கு அறம் சொல்லும்

களர் நிலமும் கதிராகும்
உவர் மண்ணும் உவப்பாகும்
உழவனவன் வியர்வையில்
உப்பும் இனிப்பாகும்

எருதின் காலோட்டம்
பூமிப்பந்தை திசை மாற்றும்
சுழலும் புவியும்
சுகமாக உலா வரும்

மண்ணெல்லாம்
பொன்னாகும்
தன்னிலை மறந்து
கவிபாடும்
தாவரப்பிள்ளை தான்
வளர
தவமிருந்து
பெற்றெடுக்கும்

ஏரும் எருதும்
துணையிருந்தால்
பேரும் புகழும் தேடி வரும்
நேரும் துன்பம் யாவையும்
நேர்த்தியாகத் தீர்த்து விடும்

தித்திக்கும் பொங்கலிலே
திகட்டாத சுவை நல்கும்
வாயில்லா ஜீவனும்
வற்றாது உழவு காணும்
அறுவடையின் பலனதுவும்
அகிலத்தின் வாழ்வளிக்கும்
அயராத உழைப்பாலே
அனுதினமும் உணவாகும்

ஏரும் எருதும்
துணையாக்கி
எங்கும் நிறைந்த
இயற்கையைப்பொங்கும்
இன்பம் தனைக்
கொண்டு
போற்றி வாழ்வோம்
என்றென்றும்.



**தமிழ்நிலா**

## புதுவிதியைப் படைப்போம் வாரீர்

திருக்குறளே செங்கோலாய் ஆட்சி செய்யத்
திகழ்கின்ற சட்டமெல்லாம் குறளாய்ச் செய்வோம்
வருவாயை ஈட்டுதற்கும் திட்டம் தீட்டி
வளர்பணிகள் செய்வதற்கும் குறளில் சொன்ன
திருவான வழிகளென்போம் ! நீதி மன்ற
தீர்ப்பெல்லாம் முப்பாலின் வழியளிப்போம்
கருவான வள்ளுவர்தம் மொழியே ஆட்சிக்
கட்டிலிலே அமர்வோரின் சட்டம் என்போம் !



பள்ளிகளில் கல்லூரிப் பாடம் தன்னில்
பல்கலையின் கழகத்தில் ஆய்வு தன்னில்
புள்ளிபோடும் அலுவலகக் கோப்பில் ; நீதி
புரிகின்ற மன்றத்தில் நிர்வா கத்தில்
துள்ளிவரும் விளம்பரத்தில் திரைப்படத்தின்
தலைப்புகளில் தொலைக்காட்சி உச்சரிப்பில்
பிள்ளைகளின் அமுதநாவில் பெற்றோர் வாயில்
பிறக்கவேண்டும் தமிழென்றே விதியைச்செய்வோம் !

சாதிகளின் பிரிவுமின்றி மதங்களென்னும்
சாய்க்கின்ற பாகுபாட்டுப் பகையுமின்றி
ஓதுகின்ற மந்திரமாய்ப் பாசுரங்கள்
குர்ரானும் பைபிளுடன் ஒன்று சேர்ந்து
வீதிக்குள் அமைந்திருக்கும் மும்மதத்தின்
இறைவணங்கும் இடங்களிலே ஒலிக்க வைத்தே
நீதியெல்லாம் ஒன்றாகித் தமிழர் என்ற
நிலையுர்த்தும் விதிபடைத்தே ஓங்கச் செய்வோம் !

## புரியாமல் கற்பதற்கா கல்வி

பெண்குழந்தை எனத்தாழ்வாய் நினைத்ததாலே
பெற்றோர்கள் அரசாங்கம் நடத்துகின்ற
மண்வாசத் தமிழ்க்கல்வி பள்ளிதன்னில்
மகள்தன்னைச் சேர்த்தார்கள் படிப்பதற்கே
கண்போன்ற தாய்தமிழில் கற்றதாலே
கற்பதிலே சிரமமின்றிப் புரிதலோடு
கண்முன்னே காண்கின்ற இயற்கைபோல
கல்விதனை மகிழ்ச்சியுடன் கற்றுத்தேர்ந்தாள் !

தன்மகனை உயர்வென்றே ஆங்கிலத்தில்
தரும்கல்விப் பள்ளிதன்னில் கற்கச்சேர்த்தார்
முன்பின்னே உடுக்காத உடையுடுத்தி
முழுப்பாதம் தெரியாமல் செருப்பைப்பூட்டிச்
சின்னதாக வீட்டின்முன் வந்து நிற்கும்
சிற்றுந்தில் அமரவைத்துக் கையசைத்தே
நன்றாக வீட்டினிலே பேசி வந்த
நற்றமிழை மறப்பதற்கே பணத்தைத் தந்தார் !

அப்பாவை டாடியென்றார் எதற்காம் என்றான்
அம்மாவை மம்மியென்றார் ஐயம் கொண்டான்
தப்பான இடத்திற்கு வந்தோமென்ற
தவிப்போடே அச்சத்தில் மிரண்டுபோனான் !
எப்போதும் பேசுகின்ற தமிழைவிட்டே
ஏதோவோர் மொழியினிலே நாளும் பார்க்கும்
இப்பகுதி காட்சிகளைச் சொல்லும் போதோ
இவனேதும் புரியாமல் விழ்க்கலானான் !

உள்ளத்தில் தெளிவோடும் மகிழ்ச்சியோடும்
உடன்பிறந்த அக்காபோல் படிப்பதற்கோ
எள்ளளவும் முடியாமல் தவிக்கலானான்
எழிற்கல்வி வேம்பாக ஒதுக்கலானான் !
பள்ளத்தில் பிடித்தவனைத்தள்ளி விட்டுப்
பாரவனோ துரைபோல வருவானென்று
புள்ளிபோட்ட பெற்றோரும் ஏமாந்தார்கள்
புரிந்தினிமேல் தாய்மொழியில் தருவோம் கல்வி !

## புரியாமல் கற்பதற்கா கல்வி


பெண்குழந்தை எனத்தாழ்வாய் நினைத்ததாலே
பெற்றோர்கள் அரசாங்கம் நடத்துகின்ற
மண்வாசத் தமிழ்க்கல்வி பள்ளி தன்னில்
மகள்தன்னைச் சேர்த்தார்கள் படிப்பதற்கே
கண்போன்ற தாய்தமிழில் கற்றதாலே
கற்பதிலே சிரமமின்றிப் புரிதலோடு
கண்முன்னே காண்கின்ற இயற்கைபோல
கல்விதனை மகிழ்ச்சியுடன் கற்றுத் தேர்ந்தாள் !

தன்மகனை உயர்வென்றே ஆங்கிலத்தில்
தரும்கல்விப் பள்ளிதன்னில் கற்கச்சேர்த்தார்
முன்பின்னே உடுக்காத உடையுடுத்தி
முழுப்பாதம் தெரியாமல் செருப்பைப்பூட்டிச்
சின்னதாக வீட்டின்முன் வந்து நிற்கும்
சிற்றுந்தில் அமரவைத்துக் கையசைத்தே
நன்றாக வீட்டினிலே பேசி வந்த
நற்றமிழை மறப்பதற்கே பணத்தைத்தந்தார் !

அப்பாவை டாடியென்றார் எதற்காம் என்றான்
அம்மாவை மம்மியென்றார் ஐயம் கொண்டான்
தப்பான இடத்திற்கு வந்தோமென்ற
தவிப்போடே அச்சத்தில் மிரண்டு போனான் !
எப்போதும் பேசுகின்ற தமிழை விட்டே
ஏதோவோர் மொழியினிலே நாளும் பார்க்கும்
இப்பகுதி காட்சிகளைச் சொல்லும் போதோ
இவனேதும் புரியாமல் விழ்க்கலானான் !

உள்ளத்தில் தெளிவோடும் மகிழ்ச்சியோடும்
உடன்பிறந்த அக்காபோல் படிப்பதற்கோ
எள்ளளவும் முடியாமல் தவிக்கலானான்
எழிற்கல்வி வேம்பாக ஒதுக்கலானான் !
பள்ளத்தில் பிடித்தவனைத் தள்ளி விட்டுப்
பாரவனோ துரைபோல வருவானென்று
புள்ளிபோட்ட பெற்றோரும் ஏமாந்தார்கள்
புரிந்தினிமேல் தாய்மொழியில் தருவோம் கல்வி !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**



மன்மதன் மட்டும்தான்
கையில் கரும்பு வில்
வைத்திருப்பானென்ற
புராண
நம்பிக்கையைப்
பொய்யாக்கும்படி
ஒரு முழுநீளக்
கரும்பைக்
கையில் ஏந்தியபடி
என் எதிரில் நீ
நடந்து வருகிறாய்
ஒருரதியென..!

**சு. அருண் பிரகாஷ்**
இராமச்சந்திரபுரம்

## மயக்கம்

பொங்கும் அலைகடல்
ஓசையில் நெஞ்சம் தாளம்
போட நினைவுக் கதிர்
ஜ்வாலயில்...


மெழுகுவர்த்தி உருகுமா?
குளிர்ந்த பனி கருகுமா?

நிலா சோறாய் சிந்தினாலும்
நிறமில்லா நிறமியாக
வானத் தேரில் மறைந்தது...



நினைவு
மயக்கமா?
கனவான
உணர்வுகளா?

**நா.பத்மாவதி**
கொரட்டூர்



கதறி அழுகிறேன் உன்
காதலுக்காய் அனுதினமும்...
கண்ணீரில் என் காதல்
கரைந்து காணாமல் போவது
கூட தெரியாமல்...
ஆற்றும் கடமை உயிர்மூச்சு
அதிலே யில்லை மறுபேச்சு,
வேற்று நினைப்பே
மனதிலில்லை வேலை
செய்வதே வாழ்வினெல்லை,
நேற்று நினைப்பு
நெஞ்சிலில்லை
நினைவில் கவலை
கொஞ்சவில்லை,
ஆற்று நீரும் அரையடிதான்
அதனால் வாழ்வே ஆறாகுமே
வைகறையில் உதித்து
அந்தியில் சாயும்
சூரியனுமல்ல, வளர்ந்ததும்
தேயும் வெண்ணிலவுமல்ல,
அண்டத்தின் இறுதிநாள்
வரை அழியாமலிருக்கும்
ஆகாய மாகும்!
உன் மீது நான்
கொண்ட
அன்பு.....!!



**கவிஞர் பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

நித்தம் ஒரு மாற்றம்
நித்தம் புதிய உச்சம்
தங்கத்தின் விலை

இன்று உயரத் தாண்டுதல்
நாளை
தடியுடனே
உயரத்
தாண்டுதல்
வெள்ளி விலை



**ஓம் குமார் P N**
மதுரை

## "பொம்மைப் புரவிகளின் வாக்குறுதிகள்"

மேடையின் மேல்
மினுங்கும் ஆவேசப்
புன்னகைகள்
அரைவேக்காட்டு
அசைவங்கள்!

கயிறு கட்டிய பொம்மைப்
புரவிகள் சுழன்றாடும் ஒரு
வட்டத்தில் மட்டும்!

நாளை வரும் மாற்றமென்று
இன்று முழங்கும் குரல்கள்,
நேற்றின் குப்பையில்
தூக்கி வீசப்பட்ட
வாக்குறுதிகளின் எச்சங்கள்!

வாக்குப் பெட்டிக்குள்
நுழையும் நம் நம்பிக்கை,
வெளியே வரும்போது
சாம்பலாய்!

ஐந்து ஆண்டுகள் கழித்தும்
அதே மேடை, அதே இசை,
அதே பொம்மைப் புரவிகள்
புதிய வண்ணம் பூசப்பட்ட
பழைய பொய்கள்!

வருங்காலத்தில் நாம்
வாக்காளர்களாக
மட்டுமில்லாமல்,
இயக்குபவர் களாக
மாறும்
நாள்தான்
உண்மையான
மாற்றம்!



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்



## நன்றிப் பொங்கல்

தாயிற்கு அடுத்து குழந்தைகளின் பசி போக்க தினந்தோறும்
தன் உதிரப் பால் தரும் "கோமாதா" எங்கள் "குலமாதா" என்று
"வணங்கும்" பசுக்களே !

மானிட உணவுதனை உருவாக்க "விவசாயிக்கு"
உறுதுணையாக உழவு செய்து "ஏர்தழுவும்" காளைகளே !

முப்போகம் பயிர் செய்து முப்பாட்டன் வழிமுறையில்
மாட்டுவண்டி பூட்டிகிட்டு நெல்மணிகளை "சுமக்கும்"
காளைகளே !

ஜல்லிக்கட்டு வாலிபனின் வீர விளையாட்டில் உதிரத்தினை
"உழவு "பார்க்க மஞ்சள் காவி வண்ணம் தீட்டி
கொம்பு சீவி வாடிவாசலில் "களமிரங்கும்"
காளைகளே !

உங்களுக்கு நன்றி சொல்லி வைக்கும்
பொங்கல்! "மாட்டுப்பொங்கல்"



**G.A.கோவிந்தராஜ் (எ)சுரேஷ்குமார்**
திருப்புவனம் புதூர்

## அஞ்சல் அட்டை ரகசியம்

தோலில் பச்சை குத்திக் கொள்ளத் துணிச்சலில்லை,
ஊசியைப் பார்த்தாலே 'பச்சை' தண்ணி ஊற்றிய நடுக்கம்!
வலிக்கு அஞ்சிய கோழை அல்ல இவன் – அவள்
பெயர் அழியக் கூடாதெனக் கொண்ட ஒரு அக்கறை!
அன்று...பதினைந்து பைசா அஞ்சல் அட்டையில் தான்
பத்திரமாய் ஒளிந்திருந்தது கோபுவின் காதல்!
"படம் சுமார், ஆனால் பாட்டு அமர்க்களம்" – என
மொக்கையாய் வாசகர் கடிதம் எழுதி,
கீழே 'அமுதா' என அவள் பெயர் செதுக்கி,
அது அச்சேறி வரும் அழகில் ஆஸ்கர் விருது காண்பான்!
அந்தப் பத்திரிகை துணுக்கை அவளிடம் காட்டி,
அவள் இதழ் விரிக்கும் புன்னகையில் – ஆயிரம்
பச்சை குத்திய சுகத்தை அடைந்தவன் கோபு!
காலம் வேகமாய் உருண்டோடி விட்டது...
இளமை நரைத்தது, இதழ்கள் சுருங்கியது,
ஆனால் காதல் மட்டும் அந்த இரும்புப் பெட்டிக்குள்!
மனைவி உறங்கும் மதிய நேரத்து ஏகாந்தத்தில்,
வீட்டு வரி ரசீது தேடுவது போல ஒரு பாவனை!
மெதுவாய் நகரும் அந்தப் பழைய இரும்புப் பெட்டி –
துருவேறிய மூடியைத் திறந்தால்,
துள்ளி வரும் பதினேழு வயசுப் பையனின் நினைவுகள்!
அன்று அமுதாவின் பெயரால் அச்சேறிய காகிதம்,
இன்று மஞ்சள் பூத்து மணம் வீசுகிறது!
நரைத்த தலைக்கு நடுவே ஒரு ரகசிய நந்தவனம்...
மனைவிக்குத் தெரியாமல் அசைபோடும்
அந்தப் பதினைந்து பைசா அஞ்சல் அட்டை நினைவுகள் –
கோபுவின் இரும்புப் பெட்டிக்குள் இன்றும் பொக்கிஷம்!

**ப.நந்தகுமார்,**காங்கேயம்



## பொன் விலை சரிய !!

மடமைகள் மறையட்டும்
மங்கலங்கள் பொங்கட்டும்
கடமைகள் கனியட்டும்
கண்ணியங்கள் சிறக்கட்டும்!!
நல்லெண்ணங்கள் பெருகட்டும்
நல்வாழ்வு தழைக்கட்டும்
புல்லுறுவிகள் புலம்பெயருட்டும்
பொல்லாங்கு
பொடிபொடியாகட்டும்

தைமகள் நாட்டின்
கடன்சுமை தனிக்கவரட்டும்
பொன்மகளும்
பொன்விலை
சரிந்திட
வந்தருளட்டும்!!



**சண்முக சுப்பிரமணியன்**
திருநெல்வேலி

## குடிகாரர்கள் படுத்தும் பாடு!

பொங்கலன்று பட்டு பீதாம்பரம்
கையிலே கரும்பென்று
ஒரே குதூகலம்தான்
மறுநாளே வெற்று மார்பு
அழுக்கு வேஷ்டி
கையிலே பாட்டிலென்று
கண்டபடி திட்டிக்கொண்டு
கூத்தடிக்கும் குடிகாரர்களை
கண்டாலே எனக்கு
பயம்தான்!





**சின்னஞ்சிறுகோபு,** சென்னை.

## மகிழ்ச்சி..... மகிழ்ச்சி ....

விடியலில் ஆதவன் வரும் போது மகிழ்ச்சி
மழலையின் குரல் அன்னைக்கு மகிழ்ச்சி
நட்புகளுடன் பேசும் போது மகிழ்ச்சி
சின்ன சின்ன வெற்றிகள் எண்ணத்திற்கு மகிழ்ச்சி
கொட்டும் மழையை பார்க்கும் போது மகிழ்ச்சி
நாளிதழில் செய்திகளை படிக்கும் போது மகிழ்ச்சி
அடுத்தவருக்கு உதவும் போது
அகத்தில் மகிழ்ச்சி
கனவு நினைவாகும் போது மாபெரும் மகிழ்ச்சி
நெற்றி வியர்வை நிலத்தில் விழுந்து உழைக்கும்
போது முடிவில் மலரும் மகிழ்ச்சி
வாழ்க்கை கற்றுத் தரும் எல்லாமே
அனுபவத்தில் மகிழ்ச்சி



**உஷா முத்துராமன்**






## பிறந்துள்ள தைமகளே!

பிறந்துள்ளதைமகளால்
வழிகள் வாய்க்கும்
பீடுடைய வாழ்க்கைக்கு
உறுதி சேர்க்கும்
திறந்தமனம் என்றென்றும்
பெருமை வார்க்கும்
தீர்வுகளை நமக்களித்து
திறமை கோர்க்கும்
சிறந்தசெயல் செய்திட்டே
உலகை ஈர்க்கும்
சிந்தனையால்
இன்னலைத்தான் இன்றே
தீர்க்கும் துறந்திடவா
வாழ்க்கையென்று கேள்வி
கேட்கும் தூணாக
நம்பிக்கை நம்மை
தேற்றும்

செங்கரும்பின்
இனிப்பைப்போல்
இனிமை ஏறும்

செவ்வான நீளம்போல்
எண்ணம் மாறும்
தங்கிடுமே மங்கலமும்
நமது வாழ்வில் தந்திடுமே
மகிழ்ச்சியைத்தான் என்றும்
நன்றாய் பொங்கிடுமே
பொங்கலுந்தான் வாழ்த்து
சொல்லி பொலிவாக
ஒளிரட்டும் நமது பண்பு
எங்கெங்கும் மலர்ச்சியினை
நாமும் கொள்வோம்
எழுச்சியாலே இவ்வுலகை
நொடியில் வெல்வோம்

உழவாலே உலகனைத்தும்
உய்யும் உண்மை
உழவர்கள் உயர்விற்கு
செய்வோம் நன்மை
சுழல்கின்ற புவிதனக்கு
கதிரோன் ஈயும்
சுடரொளியால்
வளங்களெலாம் கூடும்
திண்மை உழல்கின்ற
வறுமையெலாம் ஒழிந்தே நல்ல
உழைப்பினாலே உயருகின்ற



விழிப்பை நெய்வோம்
இழந்திடவா பண்பாடு
இல்லை இல்லை
ஈடில்லா தமிழர்க்கு
வானம் எல்லை!

**கவிஞர் மு.வா. பாலாஜி, ஒசூர்.**

---

ஒற்றையாய் காற்றில் அலைகிறது ஒரு கேள்வி.
உலகம் முழுவதற்குமான கேள்வி ஓயாது நெஞ்சில்
உறுத்திக் கொண்டே இருக்கிறது பிரபஞ்சத்திடம் வினவும்



கேள்விக்கு பதில் இல்லை அடங்காத ஆசைகள்
நிறைவேறாத கனவுகள் வாழ்வின் துக்கம்,
அலட்சியம் அவமானம் என்ற அனைத்திற்குமான
ஒரே கேள்வியாய் ஒற்றையாய் பதில் எதிர்பார்த்து
ஒதுங்கி நிற்கிறது ஒரு கேள்வி "ஏன்?"

**ஜி ஏ பிரபா,** கோவை

---



## தமிழர் திருநாள் (பொங்கல்)

எண்சீர் மண்டிலம்.

ஏழையர்க்கும் எளியோர்க்கும்
எல்லோர்க்கும் இல்லார்க்கும்
இனிதாகப்பொங்கல்தான்
எற்றமாகக்கிடைத்திடுமா!
வாழையடி வாழையென
வந்தோர்க்கும் நின்றோர்க்கும்
வளமான பொங்கல்தான்
வாழ்வினிலே கிடைத்திடுமா!

கூழைத்தான் ஒருவேளை
மட்டும்தான் குடித்துவாழும
கும்பலுக்குப்பொங்கல்தான்
குவலத்தில் கிடைத்திடுமா!
ஆழமாக சிந்திப்போம்
அன்றாடம் காய்ச்சிகளே
அகிலத்தில் இல்லாமல்
செய்திடுமா!

பச்சரிசி கரும்புக்கும்
பாங்கான மஞ்சளுக்கும்
பாட்டாளி மக்கள்தான்
எங்கேதான் போவார்கள்!
இச்சையுடன்
பொங்கலைத்தான்
எளிமையாகக்கொண்டாட
இவரெல்லாம் பொங்கலுக்கு
எங்கேதான் போவார்கள்!
அச்சமின்றி வாழ்ந்திடவும்
அன்னாரால் கூடவில்லை
அன்புக்கோ பஞ்சமில்லை
அவரெல்லாம் எங்குபோவார்!
உச்சமின்றி வாழ்வேதான்
உள்ளத்தில் இல்லாமல்
ஊரோரம் படுத்திருக்கும்
உள்ளார்ந்த
பொங்கலெப்போ!

## பொங்கல்!

(குறள்வெண் செந்துறை)
தமிழர் திருநாள்
பொங்கலாகும் தக்க
பெருநாள் பொங்கலாகும்!
கமழும் விழாவே
பொங்கலாகும்
காணும் பொங்கல்
திருவிழாவே!

மஞ்சள் கரும்புப்பச்சரிசி
மாண்பாய்க் காணும்
பொங்கலாகும்!
நெஞ்சம் இனிக்கும்
பொங்கலாகும்
நேர்மைத் தூய்மைப்
பொங்கலாகும்!

மழலை முதலாய் மூத்தோர்க்கு
மகிழ்ச்சி அளிக்கும்
பொங்கலாகும்!
அழகுப் பொங்கல்
எல்லார்க்கும் அன்பைப்
பொழியும் பொங்கலாகும்!

## போ(க்)கி!

நேரிசை வெண்பா!
அல்லவை போக்கி
அருமையை ஆக்குவோம்

பொல்லவை நீக்கிப்
பொலிவினை.. நல்லவை

தேக்கிடுவோம் நாளும்
தெளிவாக வாழ்ந்திடுவோம்!

ஆக்குவோம் நன்மை அழகு!

தின்மையைப்போக்கியே
தேர்ந்தேதான்
வாழ்ந்திடுவோம்

நன்மையை ஆக்கி
நலமாக... பொன்மயமாய்

வாழ்ந்திடுவோம் வண்ண
வளமாகத் திட்டமிட்டுச்



சூழ்ந்திடுவோம்
நன்மையே
சொல்!

**முனைவர் இராம. வேதநாயகம்.**

---

## கடல்!

நிலைமண்டில ஆசிரியப்பா!

உவர்ப்புத் தன்மை
உன்னதமாக
உவரெனும் கடலும்
உள்ளே காணுமே!

முந்நீர் என்றும் முன்னோர்
கூறுவர் சிந்தும் உப்பைச்
சீராய்த் தருமே!

இயற்கைப் படைப்பில்
இனிமை கடலே
நயன்மைப் பொருள்கள்
நல்கும் கடலே!

ஆழம் அதிகம்
கொண்ட கடலே
வாழும் மீனவர்க்
குதவும் வண்ணமாய்!

பலவாய் உயிர்கள்
பாங்காய் உதவும்
கலையாய் விளங்கிக்
கண்ணாய்த் துலங்கும்!

புவிக்குத் தோலாய்
பூத்துக் காணும்
குவிக்கும் நன்மை
கூறவும் கூடுமோ!

**முனைவர் இராம.வேதநாயகம்.**

---



## உள்ளங்கள் மகிழ்வில் பொங்கட்டும்

எல்லோருக்கும் நல்வாழ்வு
பொங்க, செல்வமும் வளமும்
தங்க, இயற்கை வேளாண்மை
செழிக்க, விளைநிலம்
மகிழ்ச்சியில் திளைக்க,
வீடுதோறும் பூலை பூவிட்டு,
கரும்பு..மஞ்சள்
தோரணங்கட்டி,



புதுப்பானை
பச்சரிசி
வெல்லம்
இட்டு,
உள்ளங்களில்
எழுச்சியோடு....
பொங்கலோ
பொங்கல் பொங்கட்டும்

**நல.ஞானபண்டிதன்**
யாதும் ஊரே....

---

## அலை கடல்

நீரலைகள் திவலை தெறிக்க,
நினைவலைகள் கவலை
மறக்க,
ஓரலையில் வந்தது
உடலும் உள்ளமும்.



அடிவானில்
கதிர் எழும்ப,
ஆழ்மனதில்
உறுதி பிறக்க,
நேரலையில்
வந்தது
செயலும்
கடமையும்.

**கே. பி. ஜனார்த்தனன்**


---

## மெல்லிய இழைகள்

அந்த மெல்லிய இழையின்
இரு பக்கங்களையும்
பிடித்திருக்கும் கரங்களின்
விரல்களில் எப்போதும் அன்பு
நிரம்பியிருக்கும்.

இழையின் அதிர்வுகள் இரு
தரப்பினருக்கும் மகிழ்ச்சி
தந்து சுமுகமான இருப்பை
உணர்த்தும் அதிர்வில்
அழுத்தம் அதிகமானால்
சொற்கள் வெடித்து இழை
அறுந்து போவதும் மீண்டும்
இணைக்கப்பட்டால் பறவை
அலகு சிறகு கோதும்
யதார்த்தமாய் இடை முடிச்சு
மறைந்து போகும்!

கண்ணாடித்தூள் பூசப்பட்ட
பட்டம் விடும் மாஞ்சாக்
கயிறு உரசியது போல் இழை
துண்டிக்கப்பட்டு இருபுறமும்
மனிதர்கள் சாய்வர்!



பல்வேறு
இழைகளின்
தொகுப்பால்
உறவுகள்
வாழ்க்கையாகி
பல
வண்ணங்கள்
காட்டி எல்லோரையும்
முன்னெடுத்துச் செல்லும்!

**மீனாட்சி பாண்டியன்**
திருவண்ணாமலை

---



## பொங்கல்!

(குறள்வெண் செந்துறை)

தமிழர் திருநாள்
பொங்கலாகும் தக்க
பெருநாள் பொங்கலாகும்!
கமழும் விழாவே
பொங்கலாகும்
காணும் பொங்கல்
திருவிழாவே!

மஞ்சள் கரும்புப்பச்சரிசி
மாண்பாய்க் காணும்
பொங்கலாகும்!
நெஞ்சம் இனிக்கும்
பொங்கலாகும்
நேர்மைத் தூய்மைப்
பொங்கலாகும்!

மழலை முதலாய்
மூத்தோர்க்கு மகிழ்ச்சி
அளிக்கும் பொங்கலாகும்!
அழகுப் பொங்கல்
எல்லார்க்கும் அன்பைப்
பொழியும் பொங்கலாகும்!

**முனைவர் இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

---

## அழகு

நீ சிரிக்கும் அந்த நொடி
அழகு. எதுவும் பேசாமல்
அகண்ட விழிகளுடன் நீ
என்னைப் பார்ப்பது அழகு.
என் அருகில் நீ இருப்பதே
கொள்ளை அழகு.
நம் இருவருக்கும் இடையே
வரும் சின்ன சண்டைக்குப்
பின் உன் மெல்லிய
உதட்டால் மௌனமாய்
என்னை முத்தமிடுவது
அழகு. என்னைப் பார்த்து
பார்த்து நீ சிரிப்பது அழகு.
பெரிய கனவுகள் இல்லாத
நம் வாழ்க்கை அழகு.
நாள்தோறும் என்னை நீ
கிள்ளிவிட்டு ஓடுவது அழகு.
என் பெயரை நீ என்
காதருகே அழைப்பது அழகு.
உலகத்தை மறந்து நீயும்,
நானும் நாணத்துடன் மெல்ல,
மெல்ல நடனமாடுவது அழகு.



நீ அழகு நான்
அழகு.
இதற்குப்
பெயர்தான்
காதல் அழகு.

**உ.மு.ந.ராசன் கலாமணி**
கோயம்புத்தூர்.

---

## சித்த மருத்துவம்

(நிலைமண்டில ஆசிரியப்பா)

சித்த மருத்துவம்
சிறந்த மருத்துவம்
வித்தக மானால்
வெற்றி மகத்துவம்!

வாதம் பித்தம் வந்திடும்
கபத்தை ஓதும் சித்தமே
ஒண்மையாய்த் தானே!

காய கல்பம் கனிவாய்
முதியோரை நேய மாகவே
நேர்ந்து காத்திடும்!

இயற்கை முறையில்
இனிதாய்க் கிடைக்கும்
நயன்மைத் தாவரம்
நல்கும் மூலிகை!

உணவே மருந்தாய்
மருந்தே உணவாய்
மணக்கும் வகையில்
மாண்பாய் விளங்கும்!

சித்த மருத்துவத்தின்
சீர்தந்தை அகத்தியர்
முத்திரை பதித்தார்
சித்த மருத்துவத்தில்!

தமிழில் காணும்
தக்க மருத்துவம்
கமழும் சித்தமாய்க்
காணும் சிறப்புடன்!

நோயை நாடி
நோய்முதல் நாடி
நோயைப் போக்கும்
நுண்ணிய சித்தாவே!

**முனைவர் இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

---




## மாடு.!

மாடுகளுக்கொரு
திருநாள்.!தமிழ்
நாடு மறவாதப் பெருநாள்.!
கன்றினுக்கொருநாள்
திருநாள்.!இன்று தான்
கொண்டாடும் பெருநாள்!

மாடெனில் செல்வம்
என்பார்..! அதைத் தேடியே
மனிதர்கள் செல்வார்.!
மாடினில் தெய்வத்தைக்
காண்பார்..! அதைக்
காமதேனு என்று புகழ்வார்.!
மாடும் செல்வமும் ஒன்றே..!
அதைக் கூறும் திருநாள்
இன்றே.!
(மாடுகளுக்கொரு..)

பால்தரும் தாய்பசுத்
தெய்வம்..! ஏர் உழவர்க்கு
காளைகள் தோழன்!
பொறுமைக்கு எருமையே
சாட்சி..! அந்த மாடுகள்
தான் மனை மாட்சி.! பாரம்
சுமக்கும் அந்த மாடும்..
மனிதரின் வாழ்க்கைக்குப்
பாடம்!
(மாடுகளுக்கொரு..)

இருக்கயில் பால் தந்த
மாடும்.. இறந்தபின்
பயனதரும் தோலும்..
உழைக்கயில் உடன் வரும்
மாடும்.. ஒரு உண்மையை
உலகுக்குக் கூறும்! வந்து
பிறந்த பயன் இதுதான்..!
மனிதன் வாழும் நெறிகூட
அதுதான்.!
(மாடுகளுக்கொரு..)

மாடு போல் உழைக்கும்
மனிதர்..! அடி மாடுபோல்
இங்கு இருப்பார்.! மாடுகள்
வாழ்க்கையைப் பார்த்தும்..
பெரும் பாடுகள் படுவார்
பாரீர்! மாட்டின் புகழ் பாட
வாரீர்..!அந்த ஜீவனை
நினைப்பவர் வாரீர்.!

**வே.கல்யாண்குமார்.**

---



## பணமா.. குணமா..

பார்த்துப் பழக வேணும்
உலகைப் பார்த்துப் பழக
வேணும்..நூத்துக் கணக்கில்
பணமிருந்தா வணக்கம்
போடும் உலகம்..
சோத்துக்கில்லை
என்றவனை விரட்டி யடிக்கும்
அவலம்.

ஆத்துநீரைப் போல
வாழ்க்கை அடித்துக்
கொண்டு ஓடும்.. அதில்
அழுக்குப் போல தீயகுணம்
கலந்தபடி ஓடும்.. பாத்து
இறங்கு பாசியாலே
படித்துறைகள் வழுக்கும் !
பாதம் பதித்து கவனமாக
நடக்கும் போது சிறக்கும்.

இலைகளோடு பூக்களோடு
துரும்புகளும் மிதக்கும்.
கரையைத் தொடும்
அலைகலோடு கதைகள்
நூறு இருக்கும்..
மலையில் பிறந்து கடலைத்
தேடி நதியின் பயணம்
தொடரும்.. அதில் மனிதம்
என்னும் படகு ஏறு.. நல்ல
குணமே படரும் .

பணமிருக்கும் இடத்தில்
எல்லாம் குணம்
இருப்பதில்லை.. நல்ல
குணமிருக்கும் மனிதனிடம்
பணமிருப்ப தில்லை..
சிலைகளாக மரங்களாக



நாம் பிறக்க
வில்லை..
செல்லும்
பாதை
தூரமில்லை
குணங்கள்
தோற்பதில்லை...!

**வே.கல்யாண்குமார்.**

---




## மாடுகள் பேசினால்.. மாட்டுப் பொங்கல் திருநாளில் ஒரு சிறப்பு பேட்டி.

**பசுமாடு**

தாய்ப்பாலாய் தரும் பாலை தவறாமல் குடிப்பவரே.. புல் கொடுத்து பால்கறக்கும் புத்தியுள்ள மனிதர்களே!
பசுமாடு தெய்வமென்று பாரிலே நடித்தப்படி.. அடிமாட்டுக் கறி உண்ணும் அன்பில்லா நடிகர்களே.. பாலெல்லாம் சத்தாகும் தோல்கூட செருப்பாகும் யார் என் போல் எனக்கு விடை கூறுங்களே.. பசுமாட்டை வாழ விடுவீர்களே..

**காளை மாடு**

சீறவிட்டு.. ஏறவிட்டு.. இழுக்க விட்டு.. சுமக்க விட்டு..
ஓடவிட்டுப் பிடிப்பவரே.. வண்டிமாடாய் வந்தாரை சுமப்பேன்..
வலித்தாலும் பாரத்தை இழுப்பேன்.. ஏர்உழவர் தோழனாக இருப்பேன்..
இறந்தாலும் தோல் கொடுத்து உயிர்பேன்.
நன்றி மறவாத நல்லுயிர் நான் ஒருவன்! தவிடு புண்ணாக்கு, வைக்கோலு புல்லுக்கட்டு தந்தே என்னை சீராட்டி தலையாட்ட வைத்தவனே.. நொந்தே மடிந்தாலும் தின்றே தீர்ப்பவனே..
ஈசனை சுமந்தேன்.. கிருஷ்ணனை மேய்க்கவிட்டேன்..
இயேசுவைத் தேட வைத்தேன் எனக்கு இணை யார் இங்கே?

**எருமை மாடு**

யான் செய்த பாவம் என்ன? என்மேல் ஏன் வெறுப்பு? பால் கறந்தாய் மனிதா.. பாசம் ஏன் காட்டவில்லை.. சேற்றிலே குளிக்கின்றேன்.. மழையிலே நனைகின்றேன.. சாலையிலே அசைந்தாடித் திரிகின்றேன.. அனாதை யானோ.. யார் அறிவார் என் துயரம்? எருமை மாடென்று பிள்ளைகளைத் திட்டுவீரே.. எருமையின் அருமையை என்றுணர்ந்து கொள்வீரோ?

இன்று மாட்டுப் பொங்கல்.. எங்களின் பேட்டிக் கேட்ட அனைவருக்கும் இனிய மாட்டுப் பொங்கல் நல் வாழ்த்துகள்!

**வே.கல்யாண்குமார்**

---



## உழவும் கால்நடைகளும்!

நிலைமண்டில ஆசிரியப்பா!

உழவின் மேன்மை
உன்னத மாகும் உழவே
உலகுக்கு அச்சாணி ஆகும்!

உழவு இன்றேல்
உலகே இல்லை
உழவே முதன்மை
உழவரே முதன்மை!

உழவு இன்றி அமையாது
உலகம் உழவே இன்றி
உயிர்கள் இல்லை!

உழவின் உயிரே
கால்நடை கள்தான்
உழவு மாடுகள்
உன்னதச் செல்வம்!

உழந்தும் உழவே தலையே
ஆகும் உழவுத் தொழிலை
உணர்ந்தே வணங்குவோம்!

ஆழ உழுதலே வாழ உதவும்
வாழும் வகையே
உழவு செய்யும்!

உழவே தெய்வம் உழவரே
தெய்வம் சுழலும் ஏரே
சொல்லும் இதையும்!

எருதின் உழைப்பே
ஏற்ற மாகும் கருது எருதைக்
கண்ணிய மாக!

காளை மாட்டின் கடின
உழைப்பே வேளையில்
உதவும் வெற்றி காணும்!


கால்நடை எல்லாம்
காணும் உழைப்பைக்
கோல மோடு
கூறும் உழைப்பை!

உழவும் எருதும் இல்லை
என்றால் சுழலும் பூமி
சுழலாது நிற்கும்!

உழவை மதிப்போம்
உழவரைத் துதிப்போம்
அழகு உயிரை
அன்றாடம் காக்கவே!

**முனைவர் இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

---



## ஏறு தழுவுதல்....

வீரமும் ஈரமும் இரு
கண்களடா...

காதலில் உருகி களத்தில்
எழும் தமிழ் இனமடா...

வீறுகொண்டு பாயும்
காளைகளை...நேர்நின்று
அடங்கும்..மண்ணடா...

சீறிப்பாயும் திமிரை...
திமில் பிடித்து

வீழ்த்தும்...திறனடா...
மண்டியிடாத மறவர் கூட்டம்...

தோள் தட்டி நிற்கும்
காளையர் கூட்டம்...

வீரத்தின் விளைநிலம் ..
என் பிறப்பிடம்...



தமிழர் பேரினம்
தரணியில்...சிறப்பிடம்...
என சங்கே முழங்கு ..

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி



just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com




WE'RE HIRING!
A Passionate Content Creator
94386 10756




CREATE YOUR PROFILE WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!




6380139263
9952007563
9940010279
GERMANSILVER.RR
RATNARAJSILVER.COM
RAJ&RAJ
GERMANSILVER /
POOJA ITEMS RETURNGIFTS/
WEDDING GIFTS /HOME NEEDS




சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா பாக்கு
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
அஜந்தா பாக்குடன் உங்கள் தீபாவளியை கொண்டாடுங்கள்!
RAVIKUMAR AND COMPANY




ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE





ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601




Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs




S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.

FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843




ARG CONSTRUCTIONS
We Build Your
DREAM HOME
Recently We Have Completed Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377




Just 499
Visite Our Website
JUST499.COM
All type Of your Website/App need at one place
Small Business website
E - commerce Website
Corporate Website
Enterprise website
Mobile App Development
contact us at
9337501889




Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
based on Harvard's Project Zero
Admissions Open
for AY 25-26
EuroTots
PlayGroup
Nursery
EuroJunior
EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081




999 SITE
ARE YOU
LOOKING FOR JOB
JOB
Websites
CONTACT/WHATSAPP-7789951009




உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும் ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www. tamilnaduepaper.com
உள்ளூர் செய்திகள் முதல் வெளிநாட்டு செய்திகள் வரை துல்லியமாக தரும் ஒரே நாளிதழ்
ஆனந்த பாஸ்கர்
www.anandabhaskar.com
தினம் தோறும் உள்ளூர், உலக செய்திகள் வரை தரும் தரமான நாளிதழ்
பேப்பர்பாய்
www.paperboy.biz




ADVERTISE WITH US
CONTACT US
9438610756




Call- 9438610756, 9337501889
News Portal Website Development
Only
Rs. 499/-
Just 499
www.just499.com


ADVERTISE WITH US!
CONTACT US
9337501889


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை/
மணப்பெண்ணைப்
பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009



முனீஸ்வர் துணை
RG
கங்கோதரி
எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI
ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அனுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை
பொருள்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots
*Flats
*House
*Villa
*Bungalows
*Farm Land
*Ware Houses
*Factory Sites
*Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call:7871617005


just499
REAL ESTATE
SOFTWARE
We Provide Complete Real
Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF
SPECIAL OFFER
DISCOUNT
90 DAYS
MONEY BACK
GUARANTEE


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250–Rs500
per day
Work From Home
Jobs
Rs 8000 – Rs 15000
per month
Ananda Bhaskar
9337501889
7789941009

**DAKSHAN PROPERTIES**
Khushal Gardens
**GUDUVANCHERY**
**KAYARAMBEDU**
**ASTHINAPURAM**
- On Road Site Rs.3999 /- Per Sq.Ft
- DTCP & RERA Approved
- Plot Size: 600 to 1200 sf

84385 85986 / 72000 49411

**அய்யப்பன்தாங்கல்**
மெட்ரோ ரயில் நிலையம் அருகில்
(PRE - LAUNCH)
**1800SQ.FT**
3BHK -1FLOOR 1FLAT
TOTAL 4 FLATS CCP LIFT
ஒரு சதுரடியின் விலை
ரூ.5500/-
90929 93599

**வாடகைக்கு**
**Poonamallee**
1800 Sq.ft. 40HP
Shed with Building
9629276108

**சென்னையில்**
இருந்து 50 kms
தொலைவுக்குள்
Layouts தேவை.
Only marketing
(No out rate purchase)
9551559597

**தனி வீடு விற்பனைக்கு**
NEMILICHERY, CHROMPET
Duplex Villa with CCP
Land area - 1080 sqft
Buildup area - 2400 sqft
contact:-
98414 83333 / 96000 69222

**2 கடை வாடகைக்கு**
பழைய வண்ணை
தெலுங்கு செட்டி தெரு,
Near Thiyagaraya Metro
94444 13395
044-48609138

**COMMERCIAL COMPLEX FOR RENT**



3 FLOORS with Lift
EACH Floor AREA, 3000 sqft,
1st, 2nd, 3rd Floor Available
Corner Side 2 way Entrance
KKR GARDEN 3rd Main Road,
Madhavaram, Chennai - 60
Nr. Metro Rly Stn & Anthony Hospital.
Cell: 98846 25240 / 98843 38911

**சென்னை**
**GNT ROAD**
சோழவரம் BY PASS
25000 சதுர அடி
&
300 HP பவருடன்
INDUSTRIAL /
COMMERCIAL
SHED வாடகைக்கு உள்ளது
9841420151

**Space available on OMR for RENT!**
Fully Furnished Amenities
Ideal for:
Coaching / Tuition Classes,
Govt. / Competitive Examinations,
Workshops, Conferences,
Seminars, etc.
Film shooting & Advt. shoots
Video/ Audio Editing or Recording
Facilities include Ample Parking,
Cafeteria, and Power Backup.
Available on Weekends
and Holidays
Contact +91 99406 94545
to know more!

**குடோன் வாடகைக்கு**
3000 சதுர அடி
இடம்: காஞ்சிபுரம்,
பொன்னேரிக்கரை
Tata Car சர்வீஸ்
சென்டர் அருகில்.
Double Side
Road Access.
தொடர்புக்கு:
9840436193


**OFFICE SPACE FOR RENT**
**AVADI PARUTHIPATTU**



12000 SFT
Each Flr 4000 Sft
Tailor Made
1st, 2nd &
3rd FLOORS
Building With
Lift Facility
98713 10022 / 91768 00400

**அம்பத்தூர்**
விஜயராகவாசாரியார் தெரு
துலுகாத்தம்மன் கோவில் அருகில்
KALPAVRIKSHA - 3BHK FLATS
3BHK 1200 sq.ft | 4 FLATS ₹5500 Per sft.
with CCP + LIFT
90929 93599

**CREST THE BEST**
@ ANAKAPUTHUR
SPOT BOOKING OFFERS




1 BHK FLAT ₹.22.99 L*
2 BHK FLAT ₹.38.50 L*
3 BHK FLAT ₹.56.99 L*
Onwards
visit our site
www.crest.homes
CREST HOMES PVT LTD
Elegant Affordable...
89399 65050

**Commercial Building for Rent**
**THIRUNINDRAVUR**
Main Road 3000Sft, 2nd Floor
Suit for Gym, Restaurant, Etc.,
**REDHILLS MAIN ROAD**
Main Road 2500Sft, Ground Floor,
(Via Redhills to Thiruvallur)
Suits for Showroom, Restaurant.
98412 38854

**AMBATTUR ESTATE**
Nr. BSNL
7200 Sft. Each Floor
1st & 2nd Floor
Lift, Parking.
Looking for Banks &
Corporate Clients.
Ct : 98846 35932

**பிரபல TYRE கம்பெனி Staff தங்குவதற்கு**
மாதவரம், புழல்,
திருவொற்றியூர்
அருகில் பில்டிங்
வாடகைக்கு தேவை.
97899 74898 / 91765 21641

**MADIPAKKAM**



NEAR PONNIAMMAN
KOIL &
PRINCE SCHOOL
| OFF. MAIN ROAD |
1300 Sq.ft
₹ 1.49 Cr
NORTH FACING
SRI SAI HOUSING
98411 36844

**WANTED**
A Running Hospital
for LEASE / RENT /
PURCHASE
in and Around
Chennai.
Ct: 98430 64009

**VEMPATI REALTORS**
25years of Exp. in Construction
seek JOINT VENTURE PARTNERS
for our upcoming projects
in and around Chennai.
Interested Land Owners Contact:
VEMPATI REALTORS
94441 70437 | 96772 59869

**COMMERCIAL SPACE FOR RENT**
WAREHOUSE @
GERUGAMBAKKAM
12500 Sq.ft.
40 Feet Road, 12 Mtr Ht,
3 Phase EB, ACC Flooring
Call : 98408 93117
82202 20444

**NEW FLAT FOR SALE**
@ KEELKATTALAI



Near
JAYACHANDRAN TEXTILES
| 200ft Radial Road |
Opp.Metro &
Keelkattalai Bus Terminus
Ready to Occupy
2 BHK & 3 BHK
| CCP, LIFT, CCTV |
SRI SAI HOUSING
98411 36844

**சென்னையில்**
இருந்து 50 kms
தொலைவுக்குள்
Layouts தேவை.
Only marketing
(No out rate purchase)
9551559597

**Approved Layouts Wanted**
Our Co-operative
society requires
LAYOUTs approved
by CMDA/DTCP
in and around
Chennai,Tiruvallur
Kanchipuram,
Chengalpet, etc.
for Joint Venture
THE ROYAL LANDS & NEST
CO-OPERATIVE HOUSING SOCIETY
Plot No.1722, 6th Avenue,
Anna Nagar, Chennai - 40.
✆ 96000 43333


**வாடகைக்கு**
ஒரு ஏக்கர் நிலம் தேவை
சிமெண்ட் கான்கிரீட் கலவை
ஆலை (Ready Mix
Concrete Plant)
அமைப்பதற்குதொழில்துறை மற்றும் வகைப்படுத்தப்படாத நிலம் 1 ஏக்கருக்கு (43,560 சதுர அடி) குறைவில்லாத காலி இடம் மாசுகட்டுப்பாட்டு வாரிய விதிமுறைகளின்படி கீழ்கண்ட பகுதிகளில் 10 வருட குத்தகையுடன் கூடிய மாத வாடகைக்கு தேவை.
சென்னை படப்பை To
ஓரக்கடம் மற்றும்
பெருங்களத்தூர் To
மதுரவாயல்
பைபாஸ் அருகில்
உள்ள பகுதிகளில்
காலி இடம் தேவை.
தொடர்புக்கு:
9940641555
website: www.amix.in

**தனி வீட்டுமனை தேவை**
7 கிரவுண்டுக்கு மேல்
போயஸ் கார்டன், அடையாறு,
பெசன்ட் நகர், போட் கிளப்,
ரேஸ் கோர்ஸ், பாலவாக்கம்,
நீலாங்கரை
உரிமையாளர்கள் மட்டும்
தொடர்பு கொள்ளவும்
✆ 75500 00680

**கமர்ஷியல் பில்டிங் வாடகைக்கு**
Commercial Building Available for Rent on
GST road, near Ford Car
Factory, Maraimalai Nagar,
Total 10000sft (3 Floors) with
Lift, Power back up &
Car Parking
Suitable for Office, Furniture
Showroom, Hospitals,
Hostel and Banks.
Long Lease preferable.
Contact: 9840961251
Email: uandicars@gmail.com
Call: Monday to Saturday
9am to 7pm



# பல்சுவை களஞ்சியம்



# துன்பத்தின் வலி !

சோழ நாட்டின் அரசவைக்கு ஒரு ஏழை ஓடி வந்தான். அரசன்! அவன் அரசவையை நாடி வந்ததற்கான காரணத்தைக் கேட்டார். அவன், அரசே! நம் நாட்டில் திருட்டு அதிகரித்துவிட்டது. நேற்று, என் வீட்டில் நான் சேமித்து வைத்திருந்த பொருள்களெல்லாம் திருட்டுப் போய்விட்டது என்றான்.

அரசன்! மந்திரி ஒருவரை அழைத்து, இவன் கூறுவது உண்மையா? என்று கேட்டார். அதற்கு அரசவையில் இருந்த இளைய அமைச்சர் ஒருவர் குறுக்கிட்டு, இவன் கூறுவது பொய் அரசே. ஒவ்வொருவரின் வீட்டிலும் நெல்லிக்காய் அளவு தங்கத்தையாவது மறைத்து வைத்திருப்பார்கள் என்றார்.

அரசருக்கு ஒன்றுமே புரியவில்லை. வயதில் மூத்த அமைச்சரை கேள்வியோடு நோக்கினார். அவரும், அரசே... விசாரித்துவிட்டு நாளை பதில் சொல்கிறேன் என்றார். அரசவை கலைந்தது. மறுநாள் சபை கூடியதும், இளைய அமைச்சர் ஓடிவந்து, அரசே.... நாட்டில் திருட்டுப் போவது உண்மை தான். நேற்று அந்த ஏழை கூறியதும் உண்மை தான் என்றார்.

அரசருக்கு ஒரே வியப்பு. நேற்று



இந்த அமைச்சர் பேசியதற்கும், இன்று இவர் பேசுவதற்கும் முரணாக இருக்கிறதே என்று எண்ணி, மூத்த அமைச்சரைக் கேட்டார். அவர் அரசரைப் பார்த்து, நம் நாட்டில் திருட்டுப் போவது உண்மை தான் அரசே. அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

அமைச்சர் கூறியதைக் கேட்ட அரசர், என்னுடைய ஆட்சியில் திருட்டுப் போவது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது என்றார். மேலும் அரசர், அமைச்சரைப் பார்த்து, இளைய அமைச்சரின் முரண்பாடான கருத்துக்கு என்ன காரணம் என்று கேட்டார். அதற்கு மூத்த அமைச்சர், அரசே! அந்த அமைச்சரின் வீட்டில் நெல்லிக்காய் அளவு தங்கத்தை பாதுகாப்பாக வைத்து இருந்தார். அதை நான் நேற்று அவருடைய வீட்டிலிருந்து எடுத்து வந்து விட்டேன். அதனால்தான் அவர் இப்படிக் கூறினார்.

தத்துவம் :
அடக்கத்தில் சிறந்தவர்கள் தன்னிடம் உள்ள பலம், பலவீனம் பற்றி தெரிந்து வைத்திருப்பார்கள். அவர்களின் பலத்தை எந்த இடத்தில் பயன்படுத்த வேண்டும் என்பதையும் தெரிந்து வைத்து இருப்பார்கள்.

-A.s.Govinda rajan
Kodambakkam Chenna

# ஆடிப்பட்டம் தேடி விதை

ஆடியில் விதைத்து ’தையில்’ தங்கச்செம்பா நெல்மணிகளை பெற்று மனம் குளிர்ந்து நெல்மணிகளை கையிலெடுத்து கண்ணீர் மல்க நிற்கும் விவசாயிகள்! மனிதன் வாழ்வதற்கு முதல் ஆதாரம் உணவு. எத்தனை தொழில்நுட்பம் வளர்ந்தாலும் அடிப்படை விஷயங்கள் மாறாதது. கிராமங்களும் விவசாயமும் ஒவ்வொரு நாட்டிற்கும் மக்களுக்கும் வாழ்க்கைக்கு வேர் போன்றது. ஆடிமாதம் வானம் பார்த்து, ஆண்டவனை வேண்டி பயிர் செய்வதென்பது ஒரு வரம்.

ஆடிமாதம் தட்ப வெப்ப நிலையைப் பொறுத்து விவசாயிகள் விதைப்பதற்கு ஏற்ற காலமாக கருதப்படுகிறது. பருவமழை துவங்கும் காலமே ஆங்கிலத்தில் ஜூலை மாதமாகவும், தமிழில் ஆடி மாதமாகவும் அழைக்கப்படுகின்றது. ஆடிப்பட்டம் என்பது இந்த மாதத்தில் பெய்யும் மழையை பயன்படுத்தி விதைக்க வேண்டும் என்பதாகும்.

’தேடி விதை’ என்பது கவனமாக, தேடிப்பிடித்து, விதைப்பது என்பதாகும். ஆடி மாதம் விதைக்க ஏற்ற பருவநிலை கொண்ட மாதமாகும் என்பது அனைவரும் அறிந்ததே. பயிர்கள் செழித்து வளரும், நல்ல விளைச்சல் தரும் என்பது ஆண்டாண்டு காலமாய் இருக்கும் நம்பிக்கையாகும். விவசாய நிலங்களுக்கு முதலில் கிடைக்கும் மழையாகும். ஆறுகளில் புது வெள்ளம் வரும். விவசாயிகள் ஆற்றுப்பாசனத்தை வரவேற்கும் விதமாக புதுவெள்ள நீரை வணங்கி விதைக்க ஆரம்பிப்பார்கள். கடுமையான கோடையில்



இறுகிப்போன பூமி ஆடிமாதத்தின் மிதமான மழையில் மெல்ல இலகும். மண்ணில் சிறு சிறு உயிர்கள், மண்புழுக்கள், நத்தை முதலான உருவாகி மண் செழிப்பைப் பெறும்.

ஆடியில் விதைத்து, புரட்டாசி ஐப்பசியில் வரும் பெருமழை பயிர்கள் செழித்து வளர போதுமானதாகவும் இருக்கும். "வரப்புயர நீர் உயரும் நீர் உயர நெல் உயரும் நெல் உயர குடி உயர்வான் குடி உயர கோன் உயர்வான்" என்பது ஔவைப் பாட்டியின் வாக்கு. இயற்கை உரமான வேப்பெண்ணெய், வேப்பம் புண்ணாக்கு என்று ஆரம்பத்திலேயே பயன்படுத்துவதால் பயிர்களும் காக்கப்படுகின்றன. ஆடி 18 விதைக்க பெரும் நன்மைகள் கிடைக்கும் என்பதும் நம்பிக்கையாகும். என்னதான் புயல், வெள்ளம் பயிர் அழியும் நிலை வந்தாலும் விவசாயிகளின் நம்பிக்கை மட்டும் குறையவில்லை.

வருணபகவான் தேவைக்கேற்ப பெய்து விவசாயிகளின் கனவுகளை நனவாக்க வேண்டும் என்று வேண்டுவோம். விவசாயிகள் நலன் காப்போம். விவசாயம் காப்போம். விளைச்சல் நிலங்களை பேணுவோம். விளைந்த பயிர்களை பக்தியோடு வணங்குவோம்.

தினம் உண்ணும் உணவை மதித்து சில நொடிகள் பிரார்த்திப்போம்.

வி.பிரபாவதி
மடிப்பாக்கம்

# மீம்ஸ்









# விடுகதை

| | |
|---|---|
| இரவும் பகலும் ஓய்வு இல்லை, படுத்தால் எழுப்ப ஆள் இல்லை அது என்ன? | இதயம் |
| அலையலையாய் ஆடிவரும் கடலும் அல்ல, நிலையாக இருக்காது நிலவும் அல்ல, அது என்ன? | மேகம் |
| ஆணை ஏறாத மலையில், ஆடு ஏறாத மலையடி, ஆயிரம் பூ பூத்திருக்கு, அது என்ன? | விண்மீன் |
| உருவம் இல்லாத மனிதன் உலகமெல்லாம் சுற்றுகிறான். அது என்ன? | காற்று |
| பொழுது போனால் பூந்தோட்டம், விடிந்து பார்த்தால் வெறும் தோட்டம். அது என்ன? | வானம் |



# ஜோக்ஸ்

“டாக்டர் இவ்வளவு மருந்தையும் ரெண்டே நாள்ல சாப்பிட்டு முடிக்கணும்னு சொல்றீங்களே, ஏன்?”

“ரெண்டு நாளைக்கு அப்புறம் எக்ஸ்ப்ரி டேட் முடிஞ்சுடும்.”

========================================
====

“தலைவரால சட்டசபையே அதிர்ந்திடுச்சாம்...”


“அடேங்கப்பா ... அப்படி என்ன



பேசினாரு?”
“பேசலைய்யா... குறட்டை விட்டாரு!”
“பாட வந்தவங்க, எதுக்கு கையில கிளவுஸ் எடுத்து மாட்டிக்கறாங்க...?”

“குத்துப்பாட்டு பாடப் போறாங்களாம்!”

====================



====================
====

“அவர் சீலிங் ஃபேன் ரிப்பேர் பண்றவர்னு எப்படிச் சொல்றே..?”

“எப்போ கேட்டாலும், “தலைக்கு மேல வேலை இருக்கு”ன்னு சொல்றாரே!”

========================================
====

“என்னப்பா காபியில ‘ஈ’ செத்துக்கிடக்குது...?”

“ஸ்பெஷல் காபியிலதான் சார் ‘ஈ’ உயிரோட இருக்கும்”

========================================
====

“ஏன்டா நாய் படம் வரைஞ்சுட்டு வாய் மட்டும் வரையாம வச்சு இருக்க?”

“ஏன்னா.. அது வாயில்லா பிராணி சார்!”

# வாழ்வு தரும் ஆரோக்கியம்




## கோடீஸ்வரன்...



குடிசை..!
விறகு..!
அடுப்பு..!
நாட்டுக்கோழி..!
ஆடு..!
நாட்டுமாடு..!
மாட்டுவண்டி..!
தோட்டம்..!
வயல்..!
விவசாயம்..!
இவை
அனைத்தும்
இருந்தால் நீங்களும்
கோடிஸ்வரனே...!

## தைராய்டு அளவு குறைவாக இருப்பவர்கள் சாப்பிட வேண்டிய உணவுகள்



மருத்துவ ரீதியாக தைராய்டு ஹார்மோன் குறைபாடு 'ஹைப்போ தைராய்டிசம்' எனப்படும். மனிதனின் கழுத்தில் உள்ள பட்டாம் பூச்சி வடிவ தைராய்டு சுரப்பியில் தைராய்டு ஹார்மோன் உற்பத்தி ஆகிறது. உடல் தனக்கு கிடைக்கும் ஆற்றலை பயன்படுத்தி கொள்வதற்கும், வளர்சிதை மாற்றத்திற்கும் இது உதவுகிறது. தைராய்டு சுரப்பி குறைபாடு (ஹைப்போ தைராய்டிசம்) இந்தியாவில் 10 பேரில் ஒருவருக்கு இருப்பதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இது ஆண்களை விட பெண்களிடையே அதிகம் காணப்படுகிறது.

**தைராய்டு சுரப்பி குறைபாடு உள்ளவர்கள் சாப்பிட கூடாத உணவுகள்**

முட்டைக்கோஸ், காலிபிளவர், புரோக்கோலி மற்றும் முள்ளங்கி. இதில் உள்ள காயிட்ரோஜன் தைராய்டு சுரப்பி உற்பத்தியை குறைக்கிறது. சோயாபீன்ஸ், சோயா பால், டோபு. இவற்றில் உள்ள காயிட்ரோஜன் மற்றும் பைட்டோ ஈஸ்ட்ரோஜன் தைராய்டு செயல்பாட்டை தடுக்கிறது. பதப்படுத்தப்பட்ட இறைச்சிகள் அல்லது உணவுகள், எண்ணெயில் பொரித்த உணவுகள், துரித உணவுகள், பாட்டில் குளிர்பானங்கள், காபி (இது தைராய்டு மாத்திரைகள் உட்கொண்ட பின்னர், அவை வயிற்றில் இருந்து ரத்தத்தில் உறிஞ்சப்படுவதை தடுத்து அதன் செயல்பாட்டை குறைக்கிறது), மது பானங்கள், செயற்கை இனிப்பூட்டிகள்.

**தைராய்டு சுரப்பி குறைபாடு உள்ளவர்கள் சாப்பிட வேண்டிய உணவுகள்**

உணவில் அயோடின் கலந்த உப்பு பயன்படுத்த வேண்டும். மீன், இறால், பால் பொருட்கள், முட்டை, செலீனியம் நிறைந்த உணவுகள் (கடல் உணவுகள், கோழி, காளான், பூண்டு), ஒமேகா 3 கொழுப்பு அமிலங்கள் நிறைந்த உணவுகள் (சால்மன், மத்தி, கானாங்கெளுத்தி போன்ற மீன்கள், ஆளி விதைகள், அக்ரூட்), முழு தானியங்கள் (பழுப்பு அரிசி, ஓட்ஸ் மற்றும் முழு கோதுமை), மெலிந்த புரதங்கள், காய்கறிகள் மற்றும் பெக்டின்கள் நிறைந்த பெர்ரி, ஆப்பிள், பேரிக்காய், பிளம்ஸ், சாத்துக்குடி, ஆரஞ்சு, எலுமிச்சை போன்ற பழங்கள்.

சர்க்கரை நோயாளிகளுக்கு செய்யப்படும் எச்.பி.ஏ1சி (HbA1c) ரத்த பரிசோதனையில் ஒரு பொய்யான உயர்வை ஹைப்போ தைராய்டிசம் ஏற்படுத்தக் கூடும். மேலும் இது சர்க்கரை நோயாளிகளுக்கு நரம்பியல் மற்றும் சிறுநீரக பாதிப்பு ஏற்படும் வாய்ப்பை அதிகரிப்பதாக ஆராய்ச்சிகளில் கண்டறியப்பட்டுள்ளது.

## மனசு சஞ்சலப்படுகிறதா...?

ஒருமுறை புத்தர் தன்னுடைய சீடர்களுடன் பயணப் பட்டுக் கொண்டிருந்தார்.

ஒரு ஏரியை எதிர் கொண்டபோது, அங்கிருந்த பெரிய ஆலமர நிழலில் அனைவரு...ம் சற்று ஓய்வெடுக்கும் எண்ணத்துடன் தங்கினார்கள்.

புத்தர் தன்னுடைய சீடர்களில் ஒருவரை அனுப்பி ஏரியில் இருந்து குடிப்பதற்கு நீர்கொண்டு வரச் சொன்னார்.

சீடரும் தங்களிடம் இருந்த பானை ஒன்றை எடுத்துக்கொண்டு நீர்நிலையை நோக்கி நடந்தார்.

அந்த நேரத்தில், மாட்டு வண்டிக்காரர் ஒருவர், ஏரிக்குள் இறங்கி ஏறியைக் கடந்து சென்றார்.

ஏறி கலங்கி விட்டது. அத்துடன் ஏரியின் கீழ்ப் பகுதியில் இருந்த சேறும் சகதியும் மேலே வந்து நீரை அசுத்தப் படுத்தி பார்ப்பதற்கே உபயோகமற்றதாகக் காட்சியளித்தது.

இந்தக் கலங்கிய நீர் எப்படிக் குடிப்பதற்குப் பயன்படும்? இதை எப்படிக் குருவிற்குக் கொண்டுபோய்க் கொடுப்பது? என்று தண்ணீரில்லாமல் திரும்பிவிட்டார்.

அத்துடன் தன் குருவிடமும் அதைத் தெரிவித்தார்.



ஒரு மணி நேரம் சென்ற பிறகு,

புத்தர் தன்னுடைய சீடரை மீண்டும் ஏரிக்குச் சென்றுவரப் பணித்தார்

நீர்நிலையருகே சென்று சீடன் பார்த்தான். இப்போது நீர் தெளிந்திருந்தது . சகதி நீரின் அடியிற்சென்று பதிந்திருந்தது.

ஒரு பானையின் தண்ணீரை முகர்ந்து கொண்டு சீடன் புத்தரிடம் திரும்பினான்.

புத்தர் தண்ணீரைப் பார்த்தார். சீடனையும் பார்த்தார். பிறகு மெல்லிய குரலில் சொல்லலானார்.

தண்ணீர் சுத்தமாவதற்கு என்ன செய்தாய்..?

நான் ஒன்றும் செய்யவில்லை சுவாமி! அதை அப்படியே விட்டுவிட்டு வந்தேன். அது தானாகவே சுத்தமாயிற்று!

நீ அதை அதன் போக்கிலேயே விட்டாய்.

அது தானாகவே சுத்தமாயிற்று.

அத்துடன் உனக்கு தெளிந்த நீரும் கிடைத்தது இல்லையா?

ஆமாம் சுவாமி!

நம் மனமும் அப்படிப்பட்டதுதான்..

மனம் குழப்பத்தில் இருக்கும்போது நாம் ஒன்றும் செய்ய வேண்டாம்.

அதை அப்படியே விட்டு விட வேண்டும். சிறிது கால அவகாசம் கொடுக்க வேண்டும். அது தனக்குத்தானே சரியாகிவிடும்.

நாம் எந்தவித முயற்சியும் செய்ய வேண்டாம்.

மனதை சமாதானப் படுத்தும் விதத்தைப் பற்றி சிந்திக்கவும் வேண்டாம்.,

அது அமைதியாகிவிடும் .

அது தன்னிச்சையாக நடக்கும்.

அத்துடன் நம்முடைய முயற்சியின்றி அது நடக்கும்.

மன அமைதி என்பது இயலாத செயல் அல்ல!

இயலும் செயலே!

அதற்கு நம் பங்கு எதுவும் தேவை இல்லை! குறைவாகக் காண்க

## முதுகு வலி நிவாரணத்திற்கான உடற்பயிற்சிகள்

முதுகு வலி என்பது இன்றைக்கு ஏறக்குறைய அனைவரையும் பாதிப்படையச் செய்கிறது. முதுகு வலிக்கான காரணங்கள் வருமாறு:

முதுகுத்தசை அல்லது தசைநார்களில் ஏற்படும் பிடிப்புகள், அதிக எடை தூக்குதல் அல்லது மேடு பள்ளமான படுக்கைகளில் படுப்பது, முதுகுத் தண்டுவட வட்டுகளில் ஏற்படும் வீக்கம், அல்லது வட்டுகள் விலகுதல் காரணமாக வட்டுக்குள் இருக்கும் மென்மையான பொருள் வீங்கி அல்லது உடைந்து தண்டுவட நரம்பில் அழுத்தும்போது முதுகு வலி ஏற்படும்.

கீல்வாத நோய்களிலும் முதுகு வலி ஏற்படும். முதுகுத்தண்டுவட வட்டுகள், எலும்புகள் சுருங்குவது (முதுகெலும்பு ஸ்டெனோசிஸ்), எலும்புகளின் வலிமை இழப்பு (ஆஸ்டியோபோரோசிஸ்), முதுகெலும்பில் ஏற்படும் அழற்சி நோய் (அன்கிலோசிங் ஸ்பான்டைலைடிஸ்)






## நாளைய விடியல் நமக்கானது என்று வாழ்வோம்

நாம் இறந்த அடுத்த நொடியே நம்முடைய உயிர் ஆத்மாவாக மாறி

வெளியே நின்றபடி நம்மை வேடிக்கை பார்க்க ஆரம்பித்துவிடும்.

கொஞ்ச நேரத்தில் எப்படியாவது நாம் இறந்த செய்தி நம் வீட்டுக்கு போய்விடும்,

எல்லோரும் கதறியழுது காத்திருப்பார்கள்,

நம்மை வேடிக்கை பார்க்க ஊரே திரண்டு நிற்கும்,

உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் உடனே தகவல் சென்றுவிடும்,

இவ்வளவு நாள் நேராக வீட்டுக்குள் சென்ற நம்மை இன்று வாசலிலேயே வைத்துவிடுவார்கள்,

இத்தனைக்கும் அந்த வீட்டை நாம்தான் பார்த்து பார்த்து கட்டியிருப்போம்,

எல்லாம் நேரம்!

ஆளுக்கொரு பக்கம் மார்பிலும் தலையிலும் அடித்துக்கொண்டு அழுவார்கள், வருகின்ற நண்பர்களையும் உறவினர்களையும்கூட கட்டிக்கொண்டு அழுவார்கள், நமக்கு ஒன்றுமே புரியாது,

அவர்கள் அழுவதை பார்த்து கஷ்டமாக இருந்தாலும் உள்ளுக்குள் சந்தோஷமாக இருக்கும் நம்மீது இவ்வளவு பாசம் வைத்திருக்கிறார்களே என்று!

உங்களைவிட்டு எங்கும் போகமாட்டேன் எப்போதும் உங்களுடன் இருப்பேன் என்று ஆறுதல் சொல்லி கண்ணீரை துடைக்கவேண்டும் என்று துடியாய் துடிப்போம்.

ஆனால் எதுவுமே முடியாது. அதுதான் மரணத்தின் மிகமோசமான துயரம்!

பாவம் எல்லோரும் tired ஆகி tired ஆகி அழுதுகொண்டே இருக்கிறார்கள் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கிறது!

இதோ நாம் எதிர்பார்த்த அந்த freez-er box வந்துவிட்டது, கோடைவெயிலுக்கு சும்மா குளுகுளு என்று இருக்கும்.


ஆனால் நம்மால் தான் உணரமுடியாது, ஒருவழியாக உள்ளே தள்ளி அடைத்துவிட்டார்கள், இருட்டிக்கொண்டதால் வெளியே campfire ம் போட்டுவிட்டார்கள்.

விடியவிடிய விழித்திருந்து உறங்கலாம் என்று நினைக்கும்போது தாரைதப்பட்டையுடன் ஒரு குரூப் வந்துவிட்டது,

சொந்தபந்தங்கள் எல்லாம் வரத்தொடங்கிவிட்டன பாவிமக்கள் இந்த பாசத்தையெல்லாம் எங்கு வைத்திருந்தார்களோ தெரியவில்லை

அழுதுகொண்டே ஓடிவருகிறார்கள், இவ்வளவு நேரத்திற்கு பிறகு தமிழில் நமக்கு பிடிக்காத அந்த வார்த்தையை ஒருவன் சொன்னான்,

'பொணத்தை ' கொஞ்சம்



தள்ளிவைங்க பந்தல்போடனும்,

நம்ம அப்பா எவ்வளவு அழகா பெயர் வச்சிருந்தாலும் செத்தபின்னாடி பத்துகாசுக்கு தேறாது!

கூட்டம் அதிகமாகிக்கொண்டே இருக்கிறது, நம் பகையாளிகள் கூட நம்மை ரொம்ப நல்லவன் என்று certificate தருகிறார்கள்,

ஒருபக்கம் தாரை தப்பட்டை

இன்னொரு பக்கம்

மக்கள் வெள்ளத்தில் மாலை மரியாதைகள் இன்னொரு பக்கம் பட்டாசுசத்தம், எல்லாம் இருந்தும் என்ன பிரயோஜனம்!?

அத்தனைபேரு முன்னாடி அரைகுறை dress சோட நம்மை குளிக்கவச்சி மானத்தை வாங்கிட்டாங்களே!!

என்ன பண்றது பொணமா பொறந்தாலே இப்படிதான்!

ஒருவழியாக எரிப்பதற்கோ புதைப்பதற்கோ எடுத்துசெல்கிறார்கள்

இவ்வளவு நாள் நாம் போட்ட ஆட்டத்தையெல்லாம் சேர்த்து நாலுபேர் ஆடிக்கொண்டு இருக்கிறார்கள்!

கடைசியில் நம்மை எரித்தேவிட்டார்கள்!

இனி எங்காவது நாய் ஊளையிட்டால் கூட நாம்தான் வந்திருக்கிறோம் என்று புலுக ஆரம்பித்துவிடுவார்கள்!

அடுத்த நாள் வீட்டுக்கு சென்று பார்த்தால்

அழுகை குறைந்து விசும்பலாகிவிட்டிருக்கும்

அதற்கு அடுத்த நாள் விசும்பலும் குறைந்திருக்கும்.

இப்படி நாளாக நாளாக நம்மை கொஞ்சம் கொஞ்சமாய் மறந்து இயல்பு வாழ்க்கைக்கு திரும்பிவிடுவார்கள்!

இதில் இன்னொரு சிறப்பு செய்தி என்னன்னா

நாம் இறந்ததை யாரோ Facebook ல் போட மொத்தம் 4000 likes(விருப்பங்கள்)

அடப்பாவிகளா,

அப்போ அத்தனைபேரும் எப்போ போவான்னு wait பண்ணிட்டே இருந்தீங்களா?!

ஒவ்வொரு இறப்பின் போதும் எத்தனையோ கனவுகளும் ஆசைகளும்

சேர்ந்தே புதைந்து போகின்றன!

இப்படி ஒவ்வொரு நாளும் சராசரியா உலகம் முழுவதும் 70,000 பேர் உயிர்துறக்கிறார்கள்!

நாளைய விடியல் நமக்கானது என்கின்ற

எந்த உத்திரவாதமும் இல்லாதபோது

நாம் ஏன் பொய்யோடும், பொறாமையோடும், பகையோடும், பாவத்தோடும் நம் வாழ்க்கையை வாழவேண்டும்?

அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ்வோம்

## நம்பெருமாள் தங்கக்குதிரையில் எழுந்தருளி பக்தர்களுக்கு சேவை



ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயில் மகர சங்கராந்தி திருநாளையொட்டி கனு புறப்பாடாக நம்பெருமாள் தங்கக்குதிரையில் எழுந்தருளி பக்தர்களுக்கு சேவை சாதித்தார்.

## பிரதோஷ வழிபாடு



கடலூர் மாவட்டம் திருக்கண்டேஸ்வர் விருத்த கிரிஸ்வரர் திருக்கோயிலின் பிரதோஷ வழிபாடு

## பறை இசைத்த முதல்வர் ஸ்டாலின்



சென்னை சங்கமத்தில் பறை இசைத்த முதல்வர் ஸ்டாலின்.



சென்னை மூன்றாவது கடற்கரைச் சாலையில் நகர்ப்புற நலவாழ்வு மையத்தில் முதலாமவர் ஸ்டாலின் பொங்கல் விழாவைக் கொண்டாடினார்.




## சிறப்பு அலங்காரத்தில் மீனாட்சி அம்மனும் சுந்தரேசுவரரும்



மதுரை மீனாட்சி அம்மனும், பிரியாவிடை, சுந்தரேசுவரரும் சிறப்பு அலங்காரத்தில் நேற்று அருள்பாலித்தனர்.

## உத்திராயண புண்ணியகாலம் தீர்த்தவாரி,10 -ஆம் நாள் உற்சவம்



திருவண்ணாமலை உத்திராயண புண்ணியகாலம் தீர்த்தவாரி நடைபெற்றது. உத்திராயண புண்ணிய காலம் 10-ஆம் நாள் காலை உற்சவம் வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, தங்க ஆபரணங்களுடன் மாட வீதி உலா நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் மாடவீதி உலாவில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## பெரிய நந்தி கேச பெருமானுக்கு மகாதீபாரதனை



**திருவண்ணாமலை, ஜன.17:** திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் ஆலயத்தில் பெரிய நந்தி கேச பெருமானுக்கு மாட்டுப் பொங்கலை முன்னிட்டு, தை மாத பிரதோஷத்தை முன்னிட்டு பெரிய நந்திகேச பெருமானுக்கு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து வடை மாலைகளுடன், காய்கனிகளுடன், பழங்கள் மாலைகளுடன், வில்வத்தினால் அர்ச்சனை செய்து, சங்குகள் முழுங்க,வேத மந்திரங்கள் ஒலிக்க மகாதீபாரதனையும் நடைபெற்றது. லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார்கள். நந்திகேச பெருமானையும் வேண்டி அருள் பெற்றனர்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## எ. வ. வேலு அவர்கள் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை







திருவண்ணாமலை திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு மாண்புமிகு பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ. வ. வேலு அவர்கள் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் க. தர்ப்பகராஜ் இ.ஆ. ப. அவர்கள், கழகத் தோழர்கள் அனைவரும் திருவள்ளுவர் சிலைக்கு சிலைக்கு மாலை அணிந்து மரியாதை செலுத்தினார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## அண்ணாமலையார் ஆலயத்தில் திருவூடல் உற்சவம்



திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் ஆலயத்தில் திருவூடல் உற்சவம் வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, தங்க ஆபரணங்களுடன் திருவூடல் தெருவில் திருவூடல் நிகழ்வு நடைபெற்றது . லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## சூர்ய பொங்கல்



திருவண்ணாமலை அருணை விருந்தினர் மாளிகையில் பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலை துறை மாண்புமிகு அமைச்சர் எ. வ.வேலு அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், கழகத் தோழர்கள் அனைவரும் இணைந்து சூர்ய பொங்கல் வைத்து கொண்டாடினார்கள்.**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## வெள்ளியில் தயாரித்த கரும்பு, பொங்கல் பானை.



தேவகோட்டையில் பொற்கொல்லர் முருகானந்தம் 12 கிராம் வெள்ளியில் தயாரித்த கரும்பு, பொங்கல் பானை.

## கருங்கல் பேருந்து நிலையத்தில் பொங்கல் விழா



குமரி கருங்கல் பேருந்து நிலையத்தில் ராஜேஷ் குமார் எம்எல்ஏ தலலமையில் பொங்கல் விழா நடந்தது.

## 1008 பால் குட விழாவில் பக்தர்கள்



திருப்போரூரில் கந்தசுவாமி கோவிலில் பொங்கலை ஒட்டி 1008 பால் குட விழாவில் பக்தர்கள் பங்கேற்றனர்.

## திருவள்ளுவர் சிலைக்கு மாலை



உலகத் திருக்குறள் பேரவை மதுரையின் சார்பில் மதிப்புறு தலைவர் கார்த்திகேயன் மணிமொழியன் தலைமையில் திருவள்ளுவர் சிலைக்கு மாலையிட்டு மரியாதை உடன் அசோக்ராஜ், மார்சல் முருகன், தமிழ்ச்செம்மல் இரா.இரவி, முனைவர் ஞா.சந்திரன் உள்ளிட்ட பொறுப்பாளர்கள்.

## தமிழக அரசின் விருதுகளை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்




திருவள்ளுவர் தினமான நேற்று தமிழக அரசின் விருதுகளை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்.

## பொதுமக்களின் பொங்கல்



கோவை குனியமுத்தூரில் பொதுமக்களின் பொங்கல் கொண்டாடிய அதிமுக முன்னாள் அமைச்சர் வேலுமணி.

## கோலப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு



ஆலந்தூர் தொகுதி முகலிவாக்கத்தில் நடந்த திராவிட பொங்கல் விழாவில் கோலப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் 5,000 பொதுமக்களுக்கு பொங்கல் பரிசை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார்.

## சமத்துவ பொங்கல்



கோவை மாநகராட்சி அலுவலகத்தில் சமத்துவ பொங்கல் விழாவை ஆணையாளர் சிவகுரு பிரபாகரன் முன்னிலையில், மேயர் ரங்கநாயகி துவக்கி வைத்தார்.

## அவனியாபுரத்தில் சீறிய காளைகள்



மதுரை அவனியாபுரத்தில் நடந்த ஜல்லிக்கட்டு போட்டியில் சீறிய காளைகள்.

## திராவிட பொங்கல் விழா



மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதியில் நடந்த திராவிட பொங்கல் விழாவில், அமைச்சர் பிடிஆர் பழனிவேல் தியாகராஜன், பொதுமக்களுக்குப் புத்தாடைகளை வழங்கினார்.

## சமத்துவ பொங்கல்



பிள்ளையார்பட்டி ஊராட்சியில் நடந்த சமத்துவ பொங்கல் விழாவில் தஞ்சை கலெக்டர் பிரியங்காபங்கஜம் பங்கேற்றார்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### ரயில்வேயில் வேலை

தென் கிழக்கு ரயில்வேயில் விளையாட்டு வீரர்களுக்கான வேலைவாய்ப்பு வந்திருக்கிறது. 54 காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிக்கை வெளியாகியுள்ளது.

17 வகையான விளையாட்டுப் பிரிவுகளில் தகுதி மற்றும் சாதனைகளைச் செய்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். ஏப்ரல் 1, 2024 ஆம் தேதிக்குப் பிறகு மேற்கொள்ளப்பட்ட சாதனைகள்தான் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். ஜனவரி 1, 2026 அன்று 18 வயது முதல் 25 வயதுக்குள் இருக்க வேண்டும்.

தகுதிமற்றும் சாதனைகளின் அடிப்படையில் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். இது குறித்த முழு விவரங்களுக்கு www.rrcser.co.in என்ற இணையதளத்தைப் பார்வையிடலாம். விண்ணப்பிப்பதற்கு கடைசித் தேதி : பிப்ரவரி 9, 2026.

### மருத்துவப் பணிகள்



முன்னாள் ராணுவவீரர்களுக்கானமருத்துவமனைகளில் மருத்துவர் மற்றும் துணை மருத்துவ ஊழியர்களுக்கான காலிப் பணியிடங்கள் நிரப்பப்படவுள்ளன. மொத்தம் 175 இடங்களை நிரப்பப் போகும் இந்தத் தேர்வுக்கான அறிவிக்கை வெளியாகியுள்ளது.

20 வகையான பணிகள் இதில் உள்ளன. ஒவ்வொரு பணிக்கும் தனித்தனியான கல்வித் தகுதிகள், அனுபவம் ஆகியவை குறிப்பிடப் பட்டுள்ளன. நேர்முகத் தேர்வு மூலமாகவே தகுதியானவர்கள் தேர்வுசெய்யப்படுவார்கள். இந்தத் தேர்வுக்கான விவரங்கள் மற்றும் விண்ணப்பம் www.echs.gov.in என்ற இணையதளத்தில் உள்ளது. விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து நிரப்பி, தேவையான சான்றிதழ்களோடு OIC, ECHS, Stn HQ (ECHS Cell), Delhi என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பிப்பதற்கான கடைசித் தேதி : ஜனவரி 28, 2026. கூடுதல் விவரங்களுக்கு 8448198118 என்ற அலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## சுற்றுலா: கோத்தகிரியில் பார்க்க வேண்டிய 6 இடங்கள்!

கோத்தகிரி என்பது கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு மேற்கே உள்ள மேட்டுப்பாளையத்தில் இருந்து சரியாக 35 கிலோமீட்டர் தொலைவில் உள்ள மலை நகரமாகும். இந்தியாவில் தமிழ்நாடு மாநிலத்தின் அமைந்துள்ள நீலகிரி மாவட்டத்தில் கோத்தகிரி வட்டம் ஊராட்சிய ஒன்றியமாகும்.

கோடை விடுமுறையில் இங்கு பார்க்க வேண்டிய இடங்கள்.

1. உயிலட்டி நீர் வீழ்ச்சி.

இனிமையான தாவரங்களுக்கு மத்தியில் அமைந்திருக்கும் உயிலட்டி நீர்வீழ்ச்சி ஆச்சரியமாகும். படிகளால் ஆன கற்பாறைகள் வழியாக நீர் கீழே விழுந்து அமைதியான மற்றும் அழகிய காட்சியை நம் கண் முன்னே உருவாக்குகிறது. நிதானமான சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குகிறது. மற்றும் அருவி நீரின் சத்தம் நம் வருகையின்போது ஒரு இயற்கையான அழகான தினத்தை பார்க்கும்போது கண்களுக்கு இக் காட்சியை வழங்குகிறது. திறந்திருக்கும் நேரம் -சூரிய உதயம் முதல் சூரிய ஹஸ்தமனம் வரை. நுழைவு கட்டணம் இல்லை.

2.குயின் நீர்வீழ்ச்சி.

கோத்தகிரி தாலுகாவில் மறைந்திருக்கும் இந்த குயின் நீர்வீழ்ச்சி ஒரு மயக்கும் நீர் வீழ்ச்சி. பாறைகளின் பிளவுகள் வழியாக நீர் கீழே விழுவது அழகாகக் காட்டுகிறது. பகல் நேரத்தில் சுற்றுலாவிற்கு பிரபலமான இடம் இது. கோத்தகிரியில் இருந்து 7 கி.மீ தொலைவிலும், கோத்தகிரி பேருந்து நிலையத்தில் இருந்து ஐந்து கிலோமீட்டர் தொலைவிலும் இது அமைந்துள்ளது. இங்கு பார்வையிட சிறந்த வசதியான இடங்களில் ஒன்றாகும்.

திறந்திருக்கும் நேரம் சூரிய உதயம் முதல் சூரிய அஸ்தமனம் வரை. நுழைவு கட்டணம் இல்லை.

3. கோடநாடு காட்சி முனை.

கோடநாடு வியூ பாயிண்ட் நீலகிரி மலைகளின் முச்சு அடைக்ககூடிய



பரந்த காட்சிகளை அள்ளி வழங்குகிறது. இது மிகவும் அழகிய பாதைகளில் ஒன்றாக புகழ்பெற்றது. இது இயற்கை ஆர்வலர்கள் கட்டாயம் பார்க்க வேண்டிய கோடைவிடுமுறை தலமாக அமைகிறது. உருளும் மலைகள் மூடுபனி மூடிய பள்ளத்தாக்குகள், தேயிலைத் தோட்டங்கள், ஆறுகளின் அழகிய பார்வையை அள்ளி வழங்குகிறது.

நேரம் - திங்கள் டு வெள்ளி காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை

சனி ஞாயிறு - காலை ஒன்பது முதல் மாலை ஆறு மணி வரை. நுழைவுக்கட்டணம் இங்கு இல்லை.

4.கேத்தரின் நீர்வீழ்ச்சி.

கோத்தகிரி சுற்றுலாத் தலங்களில் ஒன்றான கேத்தரின் நீர்வீழ்ச்சி மைசூர் மாவட்ட ஆட்சியர் ஜி.டி காக்பர்னின் துணைவியாரின் பெயர் இடப்பட்டது. இது கோத்தகிரியில் அமைந்துள்ள ஒரு கண்கவர் நீர் வீழ்ச்சியாகும். 250 அடிக்கும் மேல் உயரத்தில் இருந்து வரும் இந்த அழகான நீர்வீழ்ச்சி, நீலகிரி மலைகளின் பசுமையான பசுமைக்கு மத்தியில் ஒரு மயக்கும் அழகிய காட்சியை வழங்குகிறது. இங்கு பல்வேறு கோணங்களில் இருந்தும் பார்வையாளர்கள் அருவிகளின் தொடர்ந்த காட்சிகளை ரசிக்கலாம். மலை ஏறுபவர்கள், பறவையைப் பார்க்கும் ஆர்வலர்கள் தாங்கள் விரும்பும் அனைத்தையும் இங்கு காணலாம்.

காலை ஆறுமணி முதல் நாலு ஆறு மணி வரை பார்க்கலாம். நுழைவுக் கட்டணம் இல்லை.



5. லாங் வுட் ஷோலா காடு

லாங் வுட் ஷோலா என்பது ஒரு அழகிய பசுமையான காடு. இது தீண்டப்படாத அழகின் மத்தியில் அமைதியின் பின்னழகை வாரி வழங்குகிறது. இந்த அடர்ந்த வனப்பகுதி பல்வேறு வகையான தாவரங்கள் விலங்கினங்களுக்கும், உள்ளூர் தாவர இனங்களுக்கும், நரி, காட்டெருமை போன்ற விலங்குகளுக்கும், தாயகமாகவும் அமைதியான சூழ்நிலையில் அழகை ரசிக்கலாம். இங்கு பறவை ஆர்வலர்கள், இயற்கை ஆர்வலர்கள் புகைப்பட கலைஞர்களுக்கு இது ஒரு சொர்க்கம் ஆகும்.

காலை ஒன்பது மணி முதல் மாலை 6 மணி வரை பார்க்கலாம். நுழைவு கட்டணம் - ஒரு நபருக்கு ரூபாய் 100.

6. கில் -கோத்தகிரி

கோத்தகிரியில் இருந்து மேல் வடகிழக்கில் அமைந்துள்ள வினோதமான கோட்டையில் ஒரு வினோதமான கிராமம். தினசரி கூட்ட நெரிசல் இருந்து அமைதியான ஓய்வு அளிக்கிறது. இங்கு தேயிலை தோட்டங்கள், தேயிலைகளை வாடுதல், உருட்டுதல், நொதித்தல், உலர்த்துதல் போன்ற தொலைந்துபோன நடை முறைகளை கண்டு கழிக்கலாம்.

ஊட்டியில் இருந்து கோத்தகிரிக்கு 28 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. மலைத்தொடர்கள் வழியாக வளைந்து சென்றால் வரும். கோயம்புத்தூரில் இருந்து பயணம் செய்தாலும் சரி, குன்னூருக்கு செல்வது எளிது. அங்கிருந்து உங்கள் இலக்கை அடைய இருபது கிலோமீட்டர் பயணம் மட்டுமே.

விமானம் மூலம் - கோயம்புத்தூர் விமான நிலையத்தில் இருந்து கோத்தகிரிக்கும் செல்லலாம்.

கோத்தகிரி பயணத்திற்கு அக்டோபர் முதல் மே மாதம் வரை பார்க்கலாம். கோடை விடுமுறையில் கோத்தகிரி சென்று இயற்கை, ரம்யமான காட்சிகளையும் சென்று ரசித்து வாருங்கள்.

## செப்டம்பர் மாதத்துக்குள் தமிழகத்தில் 30 ஆதார் சேவை மையங்கள் திறக்கப்படும்

சென்னை, ஜன.17:

இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (யுஐடிஏஐ) சார்பில் சென்னை, கோயம்பேட்டில் ஆதார் சேவை மையம் செயல்பட்டு வந்தது. இடப்பற்றாகுறை காரணமாக தற்போது, அண்ணாநகர் கிழக்கு, 3-வது அவென்யூவில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் அமைப்பு செயல்படும் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டு உள்ளது. முறைப்படி ஆதார் சேவை மைய திறப்பு விழா நேற்று நடந்தது. தமிழக அரசின் இ-சேவை தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் இயக்குனர் டாக்டர் ஆல்பி ஜான் வர்க்கீஸ் குத்துவிளக்கு ஏற்றி திறந்து வைத்தார். விழாவில் சிறப்பு அதிகாரி அபூர்வா சவுதரி முன்னிலை வகித்தார்.



விழாவில் கலந்து கொண்ட இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் துணை இயக்குனர் ஆனிஜாய்ஸ் கூறும்போது, 'தமிழகத்தில் ஆணையம் சார்பில் 30 நகரங்களில் வருகிற செப்டம்பர் மாதத்திற்குள் இதுபோன்று புதிதாக ஆதார் சேவை மையம் தொடங்கப்பட உள்ளது. அதில் முதல் கட்டமாக வருகிற மார்ச் மாதத்திற்கு முன்பாக 8 நகரங்களில் ஆதார் சேவை மையம் திறக்கப்படும்' என்றார். இந்த மையம் தினசரி காலை 9 மணிக்கு திறக்கப்பட்டு மாலை 5.30 மணி வரை செயல்படும். தினசரி நேரில் மற்றும் ஆன்-லைன் மூலம் தலா 500 டோக்கன்கள் வழங்கப்படுகிறது. சேவைக்காக 20 கவுண்ட்டர்கள் செயல்படும் என்று மாநில தலைமை அதிகாரி தினகரன் கூறினார்.

## தெரு நாய்கள் கடித்து உயிரிழப்பதற்கு மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்காதது தான் காரணம்: சுப்ரீம் கோர்ட் குற்றச்சாட்டு

புதுடெல்லி, ஜன.17:

நாடு முழுவதும் தெருநாய்கள் பிரச்சினை பெரும் பிரச்சினையாக இருப்பதால் தெருநாய்களை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி சுப்ரீம் கோர்ட்டில் பொதுநல வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த சுப்ரீம் கோர்ட், தெருநாய்களை கட்டுப்படுத்த வழிகாட்டுதல்களை உருவாக்கி அதனை மாநில அரசுகள் செயல்படுத்த வேண்டும் என உத்தரவு பிறப்பித்தது.

இந்த வழிகாட்டுதல்களை மாற்றி அமைக்க வேண்டும் என விலங்குகள் நல ஆர்வலர்கள் தனியாக மனுக்கள் தாக்கல் செய்தனர். இந்த மனுக்கள் மீதான விசாரணை சுப்ரீம் கோர்ட்டில் நடைபெற்று வருகிறது.

அப்போது, தெருநாய்களை கட்டுப்படுத்த சுப்ரீம் கோர்ட் விதித்துள்ள வழிகாட்டுதல்களை பின்பற்ற மாநில அரசுகள் தீவிரம் காட்ட வேண்டும் என கண்டிப்பான உத்தரவை நீதிபதிகள் பிறப்பித்தனர்.

இந்தநிலையில் மீண்டும் அந்த வழக்குகள் நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா மற்றும் என்.வி.அஞ்சாரியா ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள், தெருநாய்களை கட்டுப்படுத்து வதற்கான வழிகாட்டுதல்களை பல மாநிலங்கள் செயல்படுத்தாமல் இருப்பதற்கு கவலை தெரிவித்த தோடு தெருநாய்கள் கடியால் பாதிக்கப்படு வோருக்கு யார் நிவாரணம் அளிப்பது? என்ற கேள்வியையும் எழுப்பினர்.

பின்னர் நீதிபதிகள், 'தெருநாய்க்கடி பிரச்சினைக்கு 75 ஆண்டுகளாக மாநில அரசுகள் எதுவும் செய்ய வில்லை. தெருநாய்க்கடிக்கு மாநில அரசுகள் தான் பொறுப்பேற்க வேண்டும். நாய்க்கடியால் பாதிக்கப்படு பவர்களுக்கு மாநில அரசுகள் அதிகளவு இழப்பீடு வழங்க வேண்டியது வரும்.

இதுதொடர்பாக மாநில அரசுகளின் கருத்துகளை கேட்க உள்ளோம். தெருநாய் களுக்கு உணவளிக்கும் அக்கறை கொள்பவர்களுக்கும், விலங்குகள் நல ஆர்வலர்களுக்கும், தெருநாய் கடிகளுக்கு உணவளித்து ஆதரவு தெரிவிப்பவர்களுக்கும் இதில் பொறுப்பு உள்ளது.

தெருநாய்கள் கடித்து குழந்தைகள், முதியவர்கள் உயிரிழப்பதற்கு மாநில அரசுகள் முறையான நடவடிக்கை எடுக்காதது தான் காரணம். விலங்குகளை மிகவும் நேசிப்பவர்கள் என்றால், அவற்றை ஏன் உங்களது வீட்டிற்கு அழைத்துச் செல்லக்கூடாது?' என்ற கேள்வியையும் முன்வைக்க விரும்புகிறோம்.

எங்களை பொறுத்தமட்டில் சட்டப்பூர்வ விதியை செயல்படுத்த விரும்புகிறோம்' என தெரிவித்து விசாரணையை தள்ளிவைத்தனர்.

## தனியார் மருத்துவமனைகளில் இலவச தடுப்பூசி திட்டம்: 100% இலக்கை எட்ட சுகாதாரத் துறை நடவடிக்கை

சென்னை, ஜன.17:

தமிழகத்தில் தேசிய தடுப்பூசி அட்டவணையின் கீழ் மொத்தம் 11 வகையான தடுப்பூசிகள் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றன. அதன் படி, காசநோய், கல்லீரல் தொற்று மற்றும் புற்றுநோய், இளம்பிள்ளை வாதம், கக்குவான் இருமல், ரண ஜன்னி, தொண்டை அடைப்பான், இன்ஃப்ளுயன்சா தொற்று, நிமோனியா, வயிற்றுப்போக்கு, தட்டம்மை மற்றும் ரூபெல்லா நோய், ஜப்பானிய மூளைக் காய்ச்சல், வைட்டமின் ஏ குறைபாடு உள்ளிட்ட பாதிப்புகளுக்காக தடுப்பூசிகள் போடப்படுகின்றன.

இந்த திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 9.40 லட்சம் குழந்தைகளுக்கு தடுப்பூசிகள் வழங்கப்படுகின்றன. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், வட்டார மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் உட்பட 11 ஆயிரம் இடங்களில் அந்த தடுப்பூசிகள் அளிக்கப்படுகின்றன. முதல் தவணை தடுப்பூசிக்கு பிறகு அடுத்த தவணையை சில குழந்தைகளுக்கு உரிய நேரத்தில் பெற்றோர் செலுத்துவதில்லை. இதனால் 100 சதவீத தடுப்பூசி இலக்கு அனைத்து இடங்களிலும் எட்டப்படுவதில்லை. எந்த சுகாதார மாவட்டம் தடுப்பூசி செயல்பாட்டில் பின்தங்கியுள்ளது என்பதை கண்டறிந்து, அதனை சரிசெய்வதற்கான நடவடிக்கைகளை சுகாதாரத் துறை மேற்கொண்டு வருகிறது. அதேநேரம் தனியார் மருத்துவமனைகளிலும் இலவச தடுப்பூசி செயல் திட்டத்தை மேம்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## பொங்கல் பண்டிகையையொட்டி பொருநை அருங்காட்சியகத்தில் அலைமோதிய மக்கள் கூட்டம்

திருநெல்வேலி ஜன.17:

உலகின் மூத்த முன்னோடி தமிழர்கள்தான் என்பது தமிழகத்தில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகள் மூலம் நிரூபணமாகி உள்ளது. சிவகளை, ஆதிச்சநல்லூர், கொற்கை ஆகிய பகுதிகளில் அகழ்வாராய்ச்சி மூலம் கிடைக்கப்பெற்ற அரிய பொருட்களை நெல்லை பொருநை அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தி உள்ளனர்.

கடந்த டிசம்பர் மாதம் 20-ந்தேதி தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்த பொருநை அருங்காட்சியகத்தை திறந்து வைத்தார். இதைத்தொடர்ந்து தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் இந்த அருங்காட்சியகத்தை பார்வையிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று பொங்கல் பண்டிகை விடுமுறையையொட்டி



ஆயிரக்கணக்கான மக்கள் பொருநை அருங்காட்சியகத்தை பார்வையிடுவதற்கு குவிந்தனர். நேற்று முன்தினம் வரை பொருநை அருங்காட்சியகத்தை 1 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பார்வையிட்டு இருந்தனர். நேற்று ஒரே நாளில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பார்வையிட்டனர்.

சென்னை சங்கமம் நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக பொருநை அருங்காட்சியகத்திலும் மாலையில் 100 கலைஞர்கள் பங்கேற்ற பாரம்பரிய கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

## ரெயின்ட்ராப்ஸ் 'கிராமிய கலை விழா 2026': பாரம்பரிய கிராமிய கலை சாதனையாளருக்கு விருது

சென்னை, ஜன.17:

ரெயின்ட்ராப்ஸ் சமூக அமைப்பு சார்பில், வேலம்மாள் நெக்சஸ் மற்றும் விஜிபி ஹெரிடேஜ் கோல்டன் பீச் ரிசார்ட் ஆகியோருடன் இணைந்து, ரெயின்ட்ராப்ஸ் கிராமிய கலை விழா நிகழ்ச்சி, விஜிபி ஹெரிடேஜ் கோல்டன் பீச் ரிசார்ட்டில் உள்ள வள்ளுவர் கார்டன் வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

கலைவிழாவில், கிராமிய கலை நிகழ்ச்சிகள், நாட்டுப்புற இசை, நடனம் மற்றும் பாரம்பரிய கலை வடிவங்கள் இடம் பெற்றன. தமிழ்நாட்டின் கிராமிய பண்பாட்டின் வீரியோட்டத்தையும் செழுமையையும் பிரதிபலிக்கும் இந்நிகழ்ச்சிகளுடன், சமூகப் பொங்கல் கொண்டாட்டமும் இணைந்து, ஒற்றுமை, நன்றியுணர்வு மற்றும் பண்பாட்டு பெருமையை வெளிப்படுத்தியது.

இவ்விழா, பாரம்பரிய கிராமிய கலைகள், சமூக உள்ளடக்கம்



மற்றும் ஒற்றுமையை கொண்டாடும் வகையில் அமைந்தது. இவ்விழாவின் முக்கிய அம்சமாக, "மண்ணின் குரல் விருதுகள்" வழங்கப்பட்டன. கிராமிய கலை, கலைகள் பண்பாடு மற்றும் பாரம்பரிய கலை வடிவங்களை பாதுகாத்து, வளர்த்து, அடுத்த தலைமுறைக்கு கொண்டு சென்றதில் முக்கிய பங்காற்றியவர்களை கௌரவிக்கும் நோக்கில், ரெயின்ட்ராப்ஸ் சமூக அமைப்பு இந்த விருதுகளை நிறுவியுள்ளது. மண்ணின் குரல் விருதுகள் 2026 வழங்கும் நிகழ்வின் ஒரு பகுதியாக, மூத்த நாட்டுப்புறக் கலைஞர்கள் டாக்டர் புஷ்பவனம் குப்புசாமி, டாக்டர் அனிதா குப்புசாமி ஆகியோருக்கு, கிராமிய மற்றும் நாட்டுப்புறக் கலைகளுக்கான அவர்களின் அபாரமான பங்களிப்பையும், பாரம்பரிய கலைவடிவங்களுடன் அவர்களின் நீண்டகால பங்களிப்பையும் கௌரவிக்கும் வகையில் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

'சவுண்ட்' மணி, சுற்றுச்சூழல் ஆர்வலர் நிமல் ராகவன், இயற்கை விவசாயி பிரபாகரன் ஆகியோர், தத்தமது துறைகளில் செய்த சிறப்பான பங்களிப்புகளுக்காக "மண்ணின் குரல்" விருதுகளால் கௌரவிக்கப்பட்டனர்.

## 4,184 போலீசாருக்கு முதல்வரின் பொங்கல் பதக்கங்கள் அறிவிப்பு

சென்னை, ஜன.17:

பொங்கல் தினத்தையொட்டி தமிழக காவல்துறைச் சேர்ந்த 4,184 பேருக்கு முதல்வரின் பொங்கல் பதக்கம் வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக உள்துறைசெயலர் தீரஜ்குமார் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணி, தொழில்நுட்ப மற்றும் சிறப்புப் பணி சேவைகள் ஆகிய துறைகளில் பணியாற்றும் பணியாளர்கள், தமது பணியில் வெளிப்படுத்தும் நிகரற்ற செயல்பாட்டினை அங்கீகரித்து அவர்களை ஊக்குவிக்கும் வகையில், ஆண்டுதோறும் பொங்கல் தினத்தன்று, தமிழக முதல்வரின் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு, காவல் துறையில் (ஆண்/ பெண்) காவலர் நிலை-2, காவலர் நிலை-1, தலைமைக் காவலர் மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் நிலைகளில் 4 ஆயிரம் பணியாளர்களுக்கு 'தமிழக முதல்வரின் காவல் பதக்கங்கள்' வழங்க முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். மேலும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் முன்னணி தீயணைப்போர் உள்ளிட்ட நிலைகளில் 120 அலுவலர்களுக்கு பதக்கம் வழங்கப்படவுள்ளது. மேலும் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் முதல் நிலை வார்டர்கள் உள்ளிட்ட நிலைகளில் 58 அலுவலர்களுக்கும் 'முதல்வரின் சிறப்பு பணிப்பதக்கங்கள்' வழங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்தப் பதக்கங்கள் பெறுபவர்களுக்கு நிலைவேறுபாடின்றி மாதாந்திர பதக்கப்படி 2026 பிப்ரவரி 1-ம் தேதி முதல் வழங்கப்படும். மார் தெரிவித்துள்ளார்.

# பத்மநாபசுவாமி கோயிலில் 6 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் லட்ச தீபம் திருவிழா கோலாகலம்!



**திருவனந்தபுரம், ஜன.17:**

ஸ்ரீபத்மநாபசுவாமி கோயிலில் 6 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏற்றப்படும் லட்ச தீபம் திருவிழா இன்று(ஜன. 14) மாலை கோலாகலமாக நடைபெற்றது.

திருவிதாங்கூர் மன்னர் ஆனிழம் திருநாள் மார்த்தாண்ட வர்மா ஆட்சியில் கடந்த 1750-இல் முதல்முறையாகத் தொடங்கப்பட்ட லட்ச தீபம் விழாவானது, ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறை கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த நிலையில், இந்த ஆண்டின் விழா கடந்த நவ. 20 தொடங்கியது.

'முராஜாபம்' விழா நிறைவடையும் ஜன. 14-ஆம் தேதியன்று லட்ச தீபமேற்றுதல் நடைபெறுவது வழக்கம். இந்த நிலையில், சபரிமலையில் மகர ஜோதி தரிசன நாளான இன்றைய நாளில் திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோயிலில் லட்சம் தீபங்கள் ஏற்றப்பட்டன.

இதையொட்டி, கோயில் வளாகத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. லட்ச தீப அனுமதிச்சீட்டு பெற்ற பக்தர்கள் மட்டுமே வளாகப் பகுதிக்குள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். மாலை 6.30 மணிக்கு கோயில் பிரதான நுழைவாயிலில் நிலவிளக்கு ஏற்றப்பட்டு லட்ச தீப விழா தொடங்கியது. இரவு 8.30 மணிக்கு தங்கக் கருட வாகனத்தில் சுவாமி உலா நடைபெறுகிறது. திருவிதாங்கூர் மன்னர் பரம்பரை குடும்பத்தினர் இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர். ஜன. 15 மற்றும் 16 ஆகிய இரு நாள்களும் பக்தர்கள் பார்வைக்காக லட்ச தீபமேற்றப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## க்ரைம் கார்னர்

### சபரிமலையில் தங்கம் மோசடி வழக்கு: முன்னாள் தேவஸ்தான உறுப்பினர் சங்கரதாஸ் கைது

**சபரிமலை, ஜன.17:**

சபரிமலை அய்யப்பன் கோவிலில் தங்கம் மோசடி தொடர்பான வழக்கை சிறப்பு புலனாய்வு குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர். இந்த வழக்கில் முதன்மை தந்திரி, முன்னாள் எம்.எல்.ஏ., திருவிதாங்கூர் தேவஸ்தான முன்னாள் தலைவர்கள் உள்பட 11 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இதில் முன்னாள் தேவஸ்தான உறுப்பினரான சங்கரதாசும் சேர்க்கப்பட்டிருந்தார்.

இதற்கிடையே பக்கவாத த்தால் பாதிக்கப்பட்ட அவர் திருவனந்தபுரத்தில் உள்ள ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுசிகிச்சைபெற்றுவந்தார். இந்தநிலையில் சங்கரதாஸ் கைது செய்யப்படாத சம்பவத்திற்கு கேரள ஐகோர்ட்டு கண்டனம் தெரிவித்து விமர்சனங்களை முன் வைத்தது. மேலும் சங்கரதாசின் மகன் காவல் துறையில் உயர் பதவியில் இருப்பதால் அவரது கைதை தாமதம் செய்து வருவதாக அதிருப்தியையும் வெளிப்படுத்தியது.

இதனை தொடர்ந்து சிறப்பு புலனாய்வு குழுவினர் எஸ்.பி. சசிதரன் தலைமையில் ஆஸ்பத்திரிக்கு சென்று அவரை கைது செய்தனர். அதே சமயத்தில் அவரது உடல் நலம் கருதி மருத்துவர்கள் அறிவுரைப்படி அவர் மருத்துவமனையிலேயே தீவிர கண்காணிப்பில் உள்ளார். தங்கம் மோசடி வழக்கில் கைது செய்யப்படும் 12-வது நபர் சங்கரதாஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

### சத்தீஷ்காரில் மேலும் 29 நக்சலைட்டுகள் சரண்

**சுக்மா, ஜன.17:**

சத்தீஷ்காரில் நக்சலைட்டு களுக்கு எதிராக மத்திய-மாநில அரசுகள் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றன. குறிப்பாக வருகிற மார்ச் மாதத்துக்குள் நக்சலைட்டுகளை ஒழிக்க மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா சபதம் ஏற்றுள்ளார். அதேநேரம் சரணடையும் நக்சலைட்டுகளுக்காக மறுவாழ்வு நடவடிக்கைகளும் மாநில அரசு மேற்கொண்டு வருகிறது. இதை பயன்படுத்தி ஏராளமான நக்சலைட்டுகள் சரணடைந்து வருகின்றனர்.

அந்தவகையில் சுக்மா மாவட்டத்தில் நக்சலைட்டு அமைப்பில் முன்னணியில் செயல்பட்டு வந்த 29 நக்சலைட்டுகள் போலீசாரிடம் தங்கள் ஆயுதங்களை ஒப்படைத்து சரணடைந்தனர். இதில் தலைக்கு ரூ.2 லட்சம் பரிசு அறிவிக்கப்பட்டு இருந்த போடியம் புத்ரா என்பவர் முக்கியமானவர் ஆவார். கோகுண்டா பகுதியில் இயங்கி வந்த இவர் பல்வேறு தாக்குதல் சம்பவங்களில் தொடர்புடையவர் ஆவார். முன்னதாக கடந்த 7-ந்தேதியும் இந்த மாவட்டத்தில் 26 நக்சலைட்டுகள் சரணடைந்தது குறிப்பிடத்தக்கது.

### இந்திய கடல் எல்லையில் பாக். மீனவர்கள் 9 பேர் கைது

**புதுடெல்லி, ஜன.17:**

இந்திய கடல் எல்லையில் சட்டவிரோதமாக நுழைந்த பாகிஸ்தான் மீனவர்கள் 9 பேரை இந்திய கடலோரக் காவற்படை கைது செய்தது.

அரபிக்கடலில் இந்திய கடலோரக் காவற்படை, ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்தபோது, சர்வதேச கடல்சார் எல்லைக் கோடு அருகே இந்திய கடல் எல்லைக்குள் பாகிஸ்தானின் மீன்பிடிக் கப்பலான அல்-மதீனா இருப்பது கண்டறியப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இந்திய கடலோரக் காவற்படையிடம் இருந்து பாகிஸ்தான் மீனவர்கள் தப்ப முயன்றபோதிலும், அவர்களை இந்திய கடலோரக் காவற்படை இடைமறித்தது. மேலும், படகில் இருந்த 9 பேரையும் கைது செய்யப்பட்டு, விசாரணைக்காக படகையும் போர்பந்தருக்கு கொண்டுசெல்லப்பட்டது.

## விளையாட்டு செய்திகள்

### சிஎஸ்கேதிருவள்ளூர் டிசிர கிரிக்கெட் போட்டி: வேலம்மாள் பள்ளிகள் அபாரம்

**திருவள்ளூர், ஜன.17:**

சிஎஸ்கேதிருவள்ளூர் டிசிர இடையிலான பள்ளி கிரிக்கெட் தொடர் 202526 போட்டிகளில் வேலம்மாள் குழுமப் பள்ளிகள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தின.

குரூப் ஐ போட்டியில், எஸ்பிஒஏ மற்றும் ஜூனியர் கல்லூரி 27.2 ஓவர்களில் 70 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. கே.பி.தஸ்வின் குமார் 37 ரன்கள் எடுத்தார். வேலம்மாள் ஸ்போர்ட்ஸ் அகாடமி தரப்பில் ஹ்ருத்திக்யா 3/17 என அபாரமாக பந்து வீசினார். தொடர்ந்து ஆடிய வேலம்மாள் ஸ்போர்ட்ஸ் அகாடமி 10.1 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 71 ரன்கள் எடுத்து எளிதான வெற்றியை பதிவு செய்தது. ஜி.வி. கமலேஷ் 33 ரன்களுடன் அவுட் ஆகாமல் இருந்தார்.

மற்றொரு ஆட்டத்தில், வேலம்மாள் வித்யாலயா (மேல் அயனம்பாக்கம்) 30 ஓவர்களில் 153/9 ரன்கள் சேர்த்தது. ஆர்.ஆர். அக்சய பிரணவ் 42, எஸ். தர்ஷன் 50 ரன்கள் எடுத்தனர். அதைத் தொடர்ந்து களமிறங்கிய எபினேசர் மார்க்கஸ் (புதூர்) 26.5 ஓவர்களில் 102 ரன்களுக்கு சுருண்டது. குரூப் ஜெ போட்டியில், வேலம்மாள் வித்யாஷ்ரம் (அம்பத்தூர்) 30 ஓவர்களில் 182/9 ரன்கள் குவித்தது. பி.சாய் பிரதீப் 63 ரன்களுடன் அணியின் முன்னணி ஆட்டக்காரராக திகழ்ந்தார். அதைத் தொடர்ந்து களம் இறங்கிய ஒலிவ் ட்ரீ குளோபல் 26.5 ஓவர்களில் 101 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. மற்றொரு ஆட்டத்தில், எபினேசர் (கொரட்டூர்) 30 ஓவர்களில் 229/8 ரன்கள் குவித்து. எஸ். யாஷ்ராஜ் 93 ரன்களுடன் அவுட் ஆகாமல் விளையாடினார். அடுத்து களம் இறங்கிய ஜெய ஜெய சங்கரா அணி 30 ஓவர்களில் 85/6 ரன்களையே எடுத்து தோல்வி கண்டது. இந்தப் போட்டிகள் மூலம் பல அணிகள் அரையிறுதி சுற்றுக்கான நம்பிக்கையை வலுப்படுத்தின.

### அல்கராஸ், அரினா சபலென்காவுக்கு ஆஸி. ஓபன் தரவரிசையில் முதலிடம்

**மெல்பர்ன், ஜன.17:**

ஆண்டின் முதல் கிராண்ட் ஸ்லாம் போட்டியான ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் வரும் 18-ம் தேதி ஆஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் தொடங்குகிறது.

இந்நிலையில் இந்த போட்டிக்கான வீரர், வீராங்கனைகளின் தரவரிசை நேற்று அறிவிக்கப்பட்டது. ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸுக்கு முதலிடம் வழங்கப்பட்டுள்ளது. 2 முறை சாம்பியனான இத்தாலியின் ஜன்னிக் சின்னருக்கு 2-வது இடமும் ஜெர்மனியின் அலெக்ஸாண்டர் ஜிவேரேவுக்கு 3-வது இடமும், 10 முறை சாம்பியனான செர்பியாவின் நோவக் ஜோகோவிச்சுக்கு 4-வது இடமும் கொடுக்கப்பட்டுள்ளது. இத்தாலியின் லோரென்சோ முசெட்டி, ஆஸ்திரேலியாவின் அலெக்ஸ் டி மினார், கனடாவின் பெலிக்ஸ் ஆகர்-அலியாசிம், அமெரிக்காவின் பென் ஷெல்டன், டெய்லர் ஃபிரிட்ஸ், கஜகஸ்தானின் அலெக்சாண்டர் பப்ளிக் ஆகியோர் முறையே 5 முதல் 10-வது இடங்களில் உள்ளனர். மகளிர் ஒற்றையர் பிரிவில் பெலாரஸின் அரினா சபலென்கா, போலந்தின் இகா ஸ்வியாடெக், அமெரிக்காவின் கோகோ காஃப் ஆகியோருக்கு முறையே முதல் 3 இடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. நடப்பு சாம்பியனான அமெரிக்காவின் மேடிசன் கீஸுக்கு 9-வது இடம் வழங்கப்பட்டுள்ளது.

# சபரிமலை பொன்னம்பலமேட்டில் மகரஜோதி தெரிந்தது: லட்சக்கணக்கானோர் தரிசனம்

**சபரிமலை, ஜன.17:**

சபரிமலை பொன்னம்பலமேட்டில் தெரிந்த மகரஜோதியை லட்சக்கணக்கானோர் தரிசனம் செய்தனர்.





சபரிமலை ஐயப்பன் கோயிலில் ஆண்டுதோறும் மகரவிளக்கு பூஜையின்போது பொன்னம்பலமேட்டில் தோன்றும் மகரஜோதி மிகவும் பிரசித்தி பெற்றதாகும். அதன்படி, இந்தாண்டுக்கான மகரஜோதி நிகழ்வு புதன்கிழமை நடைபெற்றது. இதையொட்டி, பந்தளத்தி லிருந்து ஊர்வலமாக எடுத்துவரப்பட்ட திருவாபரணங்கள் அடங்கிய பெட்டிகள் சபரிமலை சந்நிதானத்தை புதன்கிழமை மாலை வந்தடைந்தது. சந்நிதானத்தில் அவை முறைப்படி வரவேற்கப்பட்ட சுவாமி ஐயப்பனுக்கு அணிவிக்கப்பட்டு சிறப்பு பூஜை நடைபெற்றது.

திருவாபரணங்கள் அணிவிக்கப்பட்ட சுவாமி ஐயப்பனுக்கு சிறப்பு தீபாராதனை காட்டப்பட, அப்போது வானில் மகர நட்சத்திரம் தென்பட்டது.

இதையடுத்து பொன்னம்பலமேட்டில் 14ம் தேதி மாலை 6.45 மணியளவில் மகரஜோதியாக சுவாமி ஐயப்பன் காட்சியளித்தார்.

மகரஜோதியை சந்நிதானத்திலிருந்தும் சபரிமலையின் பல்வேறு பகுதிகளிலும் திரண்டிருந்த லட்சக்கணக்கான பக்தர்கள் தரிசனம் செய்தனர். அப்போது ஐயப்ப பக்தர்கள் எழுப்பிய சரண கோஷங்களால் சபரிமலையே பக்தி அலையில் மூழ்கியது. மகரஜோதி நிகழ்வையொட்டி, சபரிமலை, பம்பை உள்ளிட்ட இடங்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

# நீதி ஆயோகின் ஏற்றுமதி தயார்நிலைக் குறியீடு: 2-ஆவது இடத்தில் தமிழகம்

**புதுடெல்லி, ஜன.17:**



நீதி ஆயோகின் 4-ஆவது ஏற்றுமதி தயார்நிலைக் குறியீடு (இபிஐ) 2024 தரவரிசைப் பட்டியலில் மகாராஷ்டிரம், தமிழகம், குஜராத் மாநிலங்கள் முறையே முதல் மூன்று இடங்களை வகிக்கின்றன.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றுமதி மிக முக்கிய உந்துசக்தியாக திகழ்கிறது. நாடுகள், உலகளாவிய மதிப்புச் சங்கிலிகளில் தங்களின் நிலையை வலுப்படுத்தவும், அந்நியச் செலாவணியை ஈட்டவும், உலகளாவிய போட்டித் தன்மையை அதிகரிக்கவும் ஏற்றுமதி முக்கியப் பங்கு வகிக்கிறது. அந்த வகையில், மாநிலங்களிடையே ஏற்றுமதியை ஊக்குவிக்கும் நோக்கில், அவற்றின் ஏற்றுமதி தயார்நிலை குறித்த ஆய்வை நீதி ஆயோக் மேற்கொண்டு அறிக்கை வெளியிட்டு வருகிறது. மாநிலங்களின் ஏற்றுமதி கொள்கைகள், வாத்தகத்துக்கான சூழல், தரம் மற்றும் உள்கட்டமைப்புகள், ஏற்றுமதி விளைவுகள் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையில் இந்த தரவரிசை வெளியிடப்படுகிறது. 2024-ஆம் ஆண்டுக்கான 4-ஆவது ஆய்வறிக்கையை நீதி ஆயோக் புதன்கிழமை வெளியிட்டது.

அதில் மகாராஷ்டிர மாநிலம் முதல் இடத்தில் உள்ளது. தமிழகம் இரண்டாம் இடமும், குஜராத் மாநிலம் மூன்றாம் இடமும் பிடித்துள்ளன. உத்தர பிரதேசம், ஆந்திர பிரதேசம், கர்நாடகம், பஞ்சாப் ஆகியவை அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன.

சிறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைப் பொருத்தவரை உத்தரகண்ட் முதலிடம் பிடித்துள்ளது. ஜம்மு-காஷ்மீர், நாகாலாந்து, தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி, டாமன் டையூ, கோவா, திரிபுரா ஆகியவை அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன.

இதுகுறித்து, தில்லியில் அந்த தரவரிசை குறியீடு அறிக்கையை வெளியிட்ட நீதி ஆயோக் தலைமைச் செயல் அதிகாரி பி.வி.ஆர். சுப்பிரமணியன் கூறியதாவது:

கடந்த சில ஆண்டுகளாக, சிறப்பான கொள்கைகள், உள்கட்டமைப்பு வசதிகள் மூலம் ஏற்றுமதியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் மாநிலங்கள் தீவிரம் காட்டி வருகின்றன. இதை மேலும் ஊக்குவிக்கும் வகையிலும், உலகளாவிய தரம் மற்றும் மாவட்டங்கள் முழுவதும் ஏற்றுமதிக்கான போட்டித் தன்மையை உருவாக்கக் கூடிய சூழலை ஏற்படுத்தித் தருவதை ஊக்குவிக்கும் வகையிலும் மத்திய, மாநில அரசுகளின் தரவுகளின் அடிப்படையில் இந்த ஏற்றுமதி தயார்நிலைக் குறியீடு வெளியிடப்படுகிறது என்றார்.

## வணிகச் செய்திகள்

### தங்கம் விலை பவுனுக்கு ரூ.480 குறைந்தது

**சென்னை, ஜன.17:**

சர்வதேச பொருளாதார சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. கடந்த சில மாதங்களாகவே தங்கம் விலை அதிகரித்து வருகிறது. சில நேரங்களில் தங்கம் விலை குறைந்து, மீண்டும உயர்கிறது. இந்நிலையில், 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று (ஜன.15) பவுனுக்கு ரூ.80 என உயர்ந்து, ஒரு பவுன் ரூ.1,06,320 என்ற புதிய உச்சத்தை எட்டி விற்பனையானது. இந்நிலையில், சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை ஜன.16ம் தேதி பவுனுக்கு ரூ.480 குறைந்து, ரூ.1,05,840-க்கு விற்பனை ஆகிறது. ஒரு கிராம் தங்கம் ரூ.60 குறைந்து, ரூ.13,230-க்கு விற்பனை ஆகிறது. 24 காரட் சுத்த தங்கம் பவுன் ரூ.1,15,464-க்கும் விற்பனை ஆகிறது. 18 காரட் தங்கம் பவுன் ரூ.88,400-க்கும் விற்பனை ஆகிறது. அதே நேரத்தில், வெள்ளி கிராமுக்கு ரூ.4 குறைந்து, ரூ.306-க்கும், கட்டி வெள்ளி கிலோவுக்கு ரூ.4,000 குறைந்து ரூ.3,06,000-க்கும் சந்தையில் விற்பனை ஆகிறது.

### உலக அளவில் யுபிஐ வசதி

**புதுடெல்லி, ஜன.17:**

இந்தியாவில் யுனிபைட் பேமெண்ட் இன்டர்பேஸ் (யுபிஐ) எனும் டிஜிட்டல் பணப் பரிவர்த்தனை அறிமுகம் செய்யப்பட்டது. அதன் பின்னர், நாடு முழுவதும் குக்கிராமங்களில் கூட யுபிஐ பணப் பரிவர்த்தனை சென்று சேர்ந்தது. தற்போது இந்தியாவின் யுபிஐ மூலம் பூடான், சிங்கப்பூர், கத்தார், மொரீசியஸ், நேபாளம், ஐக்கிய அரபு எமிரேட், இலங்கை மற்றும் பிரான்ஸ் ஆகிய 8 நாடுகளில் பணப் பரிவர்த்தனை செய்யலாம். இந்நிலையில், உலகளாவிய ஒன்றிணைந்த நிதி மாநாடு டெல்லியில் நேற்று நடைபெற்றது. இதில் பங்கேற்ற மத்திய நிதித்துறை செயலர் எம்.நாகராஜு பேசும்போது, "இந்தியாவில் 50% அளவுக்கு யுபிஐ மூலமே பணப் பரிவர்த்தனை நடைபெறுகிறது. இந்த வசதியை உலகளவில் கொண்டு செல்ல முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன" என்றார்.

# திருமலையில் லக்கேஜ் கவுண்டர்கள்: க்யூஆர் குறியீடு அடிப்படையில் நவீனமுறை அமல்

**திருமலை, ஜன.17:**



திருமலையில் க்யூஆர் குறியீடு அடிப்படையிலான காலணி மற்றும் லக்கேஜ் மேலாண்மை கவுண்டர்கள் அமைக்கப்பட்டுள்ளதாக தேவஸ்தான கூடுதல் செயல் அதிகாரி வெங்கய்யா சவுத்ரி தெரிவித்தார்.

தரிகொண்டா வெங்கமாம்பா அன்ன பிரசாத மையத்தில் புதிதாக அமைக்கப்பட்ட க்யூஆர் குறியீடு அடிப்படையிலான காலணி பாதுகாக்கும் கவுன்ட்டரை அவர் திறந்து வைத்தார்.

நிகழ்வில் அவர் மேலும் கூறியதாவது: திருமலை பக்தர்கள் எதிர்கொள்ளும் காலணி பாதுகாப்பு மேலாண்மை சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வாக க்யூஆர் குறியீடு அடிப்படையிலான நவீன மேலாண்மை முறையை திருமலை திருப்பதி தேவஸ்தானம் வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது. வைகுண்டம் காத்திருப்பு வளாகம்-2 இல் ஒரு முன்னோடி திட்டமாக தொடங்கப்பட்ட இது பலனைத் தந்துள்ளது. எனவே, திருமலையின் பல்வேறு பகுதிகளில் இதுபோன்று எட்டு கவுன்ட்டர்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த முறையில், பக்தர்கள் தங்கள் காலணி கவுண்டரில் ஒப்படைத்தவுடன் க்யூ ஆர் குறியீடு கொண்ட ஒரு சீட்டு வழங்கப்படும். அந்த சீட்டில் காலணிகளின் எண்ணிக்கை, அளவு, ரேக் எண், பெட்டி எண் மற்றும் சேமிப்பு இடம் போன்ற முழுமையான விவரங்கள் இருக்கும்.

பக்தர்கள் திரும்பி வந்து அந்த சீட்டை ஸ்கேன் செய்யும்போது, காலணிகளின் சரியான இடம் காட்டப்படும். இதனால் காலணிகள் பக்தர்களுக்கு மிகக் குறுகிய காலத்தில் திருப்பித் தரப்படும். இந்த முறை செயல்படுத்தப்பட்டதன் மூலம், சுமார் 99 சதவீத பக்தர்கள் இப்போது தங்கள் காலணிகளை திரும்பப் பெறுகின்றனர்.

முன்னதாக, சுமார் 70-80 சதவீத பக்தர்கள் குவியல் குவியலாக தங்கள் காலணிகளை விட்டுச் செல்வது வழக்கம். ஆனால் இப்போது அந்த சிக்கல் முற்றிலுமாக நீக்கப்பட்டுள்ளது.

இந்த புதுமையான திட்டத்தை கோரமண்டல் இன்டர்நேஷனல் லிமிடெட் அதன் சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் ஒரு பகுதியாக முழுமையாக செயல்படுத்தி வருகிறது.

பக்தர்களின் வசதி மற்றும் திருமலையின் தூய்மையைப் பொறுத்தவரை இது நாட்டின் கோயில் நிர்வாகத்தில் சிறந்த அமைப்புகளில் ஒன்றாக இருக்கும்.

பக்தர்கள் தங்கள் காலணிகளை சுற்றி வளைத்து விடுவதற்குப் பதிலாக நியமிக்கப்பட்ட கவுன்ட்டர்களில் வைக்குமாறு கேட்டுக்கொள்ளபடுகின்றனர். இது திருமலையின் தூய்மையை மேலும் மேம்படுத்தும்", என்று அவர் கூறினார்.

கோரமண்டல் இன்டர்நேஷனல் லிமிடெட்டின் மூத்த துணைத் தலைவர் டாக்டர் கே. சத்ய நாராயணா மற்றும் டிடிடி அதிகாரிகள் பங்கேற்றனர்.

# கவுகாத்தி-கொல்கத்தா வழித்தடத்தில் வந்தே பாரத் 'ஸ்லீப்பர்' ரயில் : பிரதமர் மோடி இன்று கொடியசைத்து தொடங்கி வைக்கிறார்



புதுடெல்லி, ஜன.17:

கவுகாத்தி-கொல்கத்தா வழித்தடத்தில் வந்தே பாரத் 'ஸ்லீப்பர்' ரயிலை பிரதமர் மோடி இன்று கொடியசைத்து தொடங்கி வைக்கிறார்..

தற்போது, நாடு முழுவதும் இயக்கப்பட்டு வரும் 'வந்தே பாரத்' ரெயில்கள், உட்கார்ந்து பயணம் செய்யும்வகையில் இருக்கை வசதியுடன் மட்டும் இருக்கின்றன.

தூங்கும் வசதி கொண்ட 'ஸ்லீப்பர்' பெட்டிகளுடன் கூடிய வந்தே பாரத் ரெயில்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அத்தகைய முதலாவது ரெயிலை பிரதமர் மோடி 17-ந் தேதி கொடியசைத்து தொடங்கி வைக்கிறார். கவுகாத்தி-கொல்கத்தா வழித்தடத்தில் இந்த ரெயில் இயக்கப்படுகிறது.

இந்த ரெயிலின் தற்காலிக கட்டண விவரத்தை ரெயில்வே மந்திரி அஸ்வினி வைஷ்ணவ் ஏற்கனவே கூறியிருந்தார்.

இந்நிலையில், விரிவான கட்டண விவரங்களுடன் ரெயில்வே வாரியம் ஒரு சுற்றறிக்கை வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டு இருப்பதாவது:-

வந்தே பாரத் 'ஸ்லீப்பர்' ரெயிலில் முதல் வகுப்பு ஏ.சி., இரண்டாம் வகுப்பு ஏ.சி., மூன்றாம் வகுப்பு ஏ.சி. என 3 வகுப்புகள் மட்டுமே இருக்கும். கட்டணம் வசூலிக்கும் குறைந்தபட்ச தூரம் 400 கி.மீ. ஆகும். அதாவது, 400 கி.மீ.க்குள் எவ்வளவு தூரம் பயணம் செய்தாலும், 400 கி.மீ.க்கான கட்டணத்தை செலுத்த வேண்டும். 400 கி.மீ. வரை முதல் வகுப்பு ஏ.சி. பெட்டிக்கு ரூ.1,520, இரண்டாம் வகுப்பு ஏ.சி. பெட்டிக்கு ரூ.1,240, மூன்றாம் வகுப்பு ஏ.சி. பெட்டிக்கு ரூ.960 என்று கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

400 கி.மீ.க்கு மேற்பட்ட பயணத்துக்கு கி.மீ. ஒன்றுக்கு முதல் வகுப்புக்கு ரூ.3.20 என்றும், இரண்டாம் வகுப்புக்கு ரூ.3.10 என்றும், மூன்றாம் வகுப்புக்கு ரூ.2.40 என்றும் கட்டணம் வசூலிக்கப்படும். இதுதவிர, ஜி.எஸ்.டி.யும் விதிக்கப்படும்.

இந்த ரெயில்களில் உறுதி செய்யப்பட்ட டிக்கெட் மட்டுமே வழங்கப்படும். ஆர்.ஏ.சி. மற்றும் காத்திருப்பு பட்டியல் டிக்கெட்டுகள் வழங்கப்படாது.

பெண்கள், மாற்றுத்திறனாளிகள், மூத்த குடிமக்கள், ரெயில்வே ஊழியர்கள் பணிநிமித்த ஒதுக்கீடு ஆகிய ஒதுக்கீட்டு இடங்கள் மட்டும் இருக்கும். இந்த ரெயில்களில், மின்னணு முறையில் மட்டுமே கட்டணம்ஏற்றுக்கொள்ளப்படும். அப்போதுதான் டிக்கெட் ரத்து செய்யப்பட்ட 24 மணி நேரத்தில் 'ரீபண்ட்' வழங்க முடியும்.

டிக்கெட் கவுண்ட்டர் மூலம் எடுக்கப்படும் டிக்கெட்டுக்கும் மின்னணு கட்டணம்தான் விருப்பமான முறையாக பின்பற்றப்படும். ஒருவேளை பயணியால் மின்னணு கட்டணம் செலுத்த முடியாவிட்டால், ரத்து செய்யும்பட்சத்தில், வழக்கமான விதிமுறைகளின்படி அவர்களுக்கு 'ரீபண்ட்' வழங்கப்படும்.

தனி இருக்கை தேவைப்படாத குழந்தையுடன் பயணம் செய்பவர்களுக்கும், 60 வயதை தாண்டிய ஆண்களுக்கும், 45 வயதை கடந்த பெண்களுக்கும் இருப்பு அடிப்படையில் தானாகவே கீழ்படுக்கை ஒதுக்க முயற்சிக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஊழல் வழக்கில் இருந்து ஆந்திர முதல்-மந்திரி சந்திரபாபு நாயுடு விடுவிப்பு



அமராவதி, ஜன.17:

ஆந்திர முதல்-மந்திரியாக ஜெகன்மோகன் ரெட்டி இருந்த போது, சந்திரபாபு நாயுடு மீது ஆந்திர திறன் மேம்பாட்டு நிறுவன நிதி ரூ.300 கோடியை மோசடி செய்து அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியதாக குற்றம்சாட்டப்பட்டது. இந்த வழக்கில் 2023-ம் ஆண்டு சந்திரபாபு நாயுடு கைது செய்யப்பட்ட நிலையில் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். இந்தநிலையில் 2024-ம் ஆண்டு நடந்த தேர்தலில் சந்திரபாபு நாயுடு மீண்டும் முதல்-மந்திரி ஆனார். இதைத்தொடர்ந்து, இந்த வழக்கை விசாரித்து வந்த ஆந்திர போலீசார், சந்திரபாபு நாயுடு மீது குற்றம் எதுவும் இல்லை என கோர்ட்டில் அறிக்கை தாக்கல் செய்தனர். இதை ஏற்றுக்கொண்ட கோர்ட்டு, ஊழல் வழக்கில் இருந்து சந்திரபாபு நாயுடுவை விடுவித்து உத்தரவிட்டது.

# அனுமன் சிலையை 4 மணிநேரம் சுற்றிவந்து வழிபட்ட நாய்!



புதுடெல்லி, ஜன.17:

உத்தரப் பிரதேசத்தில் உள்ள பழமை வாய்ந்த கோயிலில் அனுமன் சிலையை, நாய் ஒன்று சுமார் 4 மணிநேரத்துக்கும் மேலாக சுற்றியவாறு வழிபாடு செய்துள்ள நிகழ்வு பலரிடையே வியப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த விடியோ இணையத்தில் பலரால் பகிரப்பட்டு வருகிறது.

உத்தரப் பிரதேச மாநிலம் பிஜ்னோர் பகுதியிலுள்ள பழமை வாய்ந்த அனுமன் கோயில் அமைந்துள்ளது. பண்டிகை நாள்களையொட்டி இக்கோயிலுக்கு அதிகாலை முதலே மக்கள் கூட்டம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

இந்நிலையில், கோயில் வளாகத்திலுள்ள அனுமன் சிலையை அப்பகுதியிலுள்ள நாய் ஒன்று அனுமன் சிலையை சுற்றிவந்து வழிபாடு செய்தது. கோயிலுக்கு வந்திருந்த பக்தர்கள் அனைவரும் இதனை வியப்புடன் கண்டுரசித்தனர். சுமார் 4 மணிநேரமாகத் தொடர்ந்து அனுமன் சிலையை சுற்றி வந்து நாய் வழிபட்டது, பக்தர்களை வியப்பில் ஆழ்த்தியது. இதனை கோயிலுக்கு வந்திருந்த பக்தர் ஒருவர் விடியோ எடுத்துப் பதிவிட்டுள்ளார். இந்த விடியோ இணையத்தில் பலரால் பகிரப்பட்டு வருகிறது.

# 600 தெரு நாய்கள் படுகொலை: தெலங்கானாவில் வழக்கு

ஹைதராபாத், ஜன.17:

தெலங்கானா மாநிலத்தில் ஊராட்சி மன்ற தேர்தல் நடைபெற்றபோது, தாங்கள் வெற்றி பெற்றால் தெரு நாய்களை ஒழிப்பதாக வேட்பாளர்கள் சிலர் வாக்குறுதி கொடுத்திருந்தனர். இந்நிலையில், காமாரெட்டி, ஹனுமகொண்டா உள்ளிட்ட மாவட்டங்களில், ஷாயம்பேட், ஆரேபல்லி, பால்வஞ்சா உள்ளிட்ட 7 பஞ்சாயத்துக்களில் கடந்த 15 நாட்களில் 600-க்கும் மேற்பட்ட தெரு நாய்களுக்கு சிலர் விஷ ஊசி செலுத்தியும், சாப்பாட்டில் விஷம் வைத்தும் படுகொலை செய்து, குழி தோண்டி புதைத்து விட்டதாகக் கூறப்படுகிறது. சில நாட்களில் இந்த விஷயம் தெரியவந்ததைத் தொடர்ந்து, புளூ கிராஸ் அமைப்பினர் மற்றும் நாய் பிரியர்கள் அந்தந்த போலீஸ் நிலையங்களில் புகார் அளித்துள்ளனர். இந்த புகாரின் அடிப்படையில் போலீஸார் வழக்கு பதிவு செய்து, புதைக்கப்பட்ட தெரு நாய்களின் உடல்களை மீட்டு அவற்றுக்கு பிரேதப் பரிசோதனை செய்தனர். இது தொடர்பான விசாரணையில், ஜகத்தியால் மாவட்டம், தர்மபுரி நகராட்சிக்கு உட்பட ஒரு இடத்தில் ஒருவர் பகிரங்கமாக தெரு நாய்களுக்கு விஷ ஊசி செலுத்துவதை கண்காணிப்பு கேமரா மூலம் கண்டறிந்துள்ளனர்.

# ஆந்திரா, தெலங்கானா மாநிலங்களில் களைகட்டிய 'சங்கராந்தி' விழா



அமராவதி, ஜன.17:

ஆந்திரா மற்றும் தெலங்கானாவில் பொங்கல் பண்டிகை, சங்கராந்தி பண்டிகையாக 4 நாட்கள் கொண்டாடப்படுகிறது.

அதன்படி போகிப்பண்டிகை உற்சாகமாக கொண்டாடப்பட்டது. பலர் தங்களின் வீடுகளின் முன் அதிகாலையே எழுந்து பழைய பொருட்களை தீயிட்டு கொளுத்தி கொண்டாடினர்.

திருமலையிலும் திருப்பதி தேவஸ்தானத்தினர் ஏழுமலையான் கோயில் முன் விறகு, உள்ளிட்ட பொருட்களைக் கொண்டு போகிப்பண்டிகை கொண்டாடினர். அப்போது அங்கிருந்த பக்தர்கள் கோவிந்தா, கோவிந்தா என கோஷமிட்டு வழிபட்டனர். பல இடங்களில் எம்பி, எம்.எல்.ஏக்கள், அமைச்சர்கள் பொது மக்களுடன் இணைந்து போகிப்பண்டிகையை கொண்டாடினர். ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, அவரது சொந்த ஊரான நாராவாரிபல்லியில் போகிப்பண்டிகையை தனது குடும்பத்தாருடன் கொண்டாடினார். பொங்கல் பண்டிகையையொட்டி, ஆந்திராவில் சித்தூர், திருப்பதி மாவட்டங்களில் மஞ்சு விரட்டு நிகழ்ச்சிக்கு தடபுடலாக ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

மாட்டுப் பொங்கலை முன்னிட்டு குப்பம், திருப்பதி அடுத்துள்ள ரங்கம்பேட்டை உள்ளிட்ட பல ஊர்களில் காளைகளை அலங்கரித்து, அவற்றின் கொம்புகளில் பரிசு பொருட்களை கட்டி, வரிசையாக விரட்டி விடுவர். இதேபோன்று ஆந்திராவில் கோதாவரி மாவட்டங்களில் சேவல் பந்தயம் வெகு பிரபலம். குறிப்பாக இந்த சங்கராந்தி பண்டிகைக்கு பல கிராமங்களில் கூடாரங்கள் அமைத்து, அதில் சேவல் சண்டை 24 மணி நேரமும் நடைபெறுமாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இங்கு அரசியல், சினிமா பிரபலங்கள், தொழிலதிபர்கள் என பலர் 2 அல்லது 3 நாட்கள் வரை தங்கி இருந்து சேவல் சண்டையில் பெருமளவில் பந்தயங்கள் கட்டி வருகின்றனர். இந்த 4 நாட்களில் பந்தயத் தொகை பல கோடிகளை தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# திருப்பதி ஏழுமலையான் கோவிலில் ஒருநாள் உண்டியல் காணிக்கை ரூ.3 கோடி

திருப்பதி, ஜன.17:

உலகப் புகழ்பெற்ற திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு உலகெங்கிலும் இருந்து ஏராளமான பக்தர்கள் வருகை தந்து பகவானை தரிசனம் செய்கின்றனர். இதன்படி திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நேற்று முன்தினம் 76 ஆயிரத்து 289 பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். 27 ஆயிரத்து 586 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர் அன்று ஒருநாள் உண்டியல் காணிக்கையாக ரூ.3 கோடியே 84 லட்சம் கிடைத்தது. வைகுண்டம் கியூ காம்ப்ளக்சில் 11 கம்பார்ட்மெண்டு களில் பக்தர்கள் நிரம்பினர். தேதி, நேரம் (டைம் ஸ்லாட்) குறிப்பிடப்பட்ட டோக்கன்கள் இல்லாமல் இலவச தரிசனத்தில் சென்ற பக்தர்களுக்கு 16 மணிநேரம் ஆனதாக கோவில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மேற்கு வங்காளத்தில் நிபா வைரசின் பரவல் அதிகரிப்பு; வீட்டில் தனிமைப்படுத்தப்பட்ட 120 பேர்

கொல்கத்தா, ஜன.17:

மேற்கு வங்காளத்தில் கடந்த சில நாட்களாக நிபா வைரசின் பரவல் அதிகரித்து காணப்படுகிறது. இதனால், தொற்று உறுதியான 2 நர்சுகள் கடந்த திங்கட்கிழமை சிகிச்சைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

எனினும், அதில் பலனில்லை. இதனால் அவர்கள் 2 பேரும் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களில் ஆண் நர்ஸ் ஒருவர், புர்பா மேதினிப்பூர் மாவட்டத்தில் வசித்து வருபவர். பெண் நர்ஸ் புர்பா பர்தமான் மாவட்டத்தில் வசித்து வருகிறார். இவர்கள் தவிர, டாக்டர், நர்ஸ் மற்றும் சுகாதார ஊழியர் என 3 பேருக்கும் தொற்று இன்று உறுதியாகி உள்ளது. இதனால், மொத்தம் 5 பேருக்கு பாதிப்பு ஏற்பட்டு உள்ளது. இந்த நிலையில், 120 பேருக்கும் மேற்பட்டோரை தனிமைப்படுத்தி கொள்ளும்படி கூறி மேற்கு வங்காள அரசு வீட்டுக்கு அனுப்பி வைத்துள்ளது.

# திருப்பாவை சொற்பொழிவு நிறைவு.. திருப்பதியில் ஆண்டாள் திருக்கல்யாணம்



திருமலை, ஜன.17:

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் ஆழ்வார் திவ்ய பிரபந்த திட்டத்தின் கீழ் புனித மார்கழி மாதத்தை கொண்டாடும் வகையில், நாடு முழுவதும் திருப்பாவை சொற்பொழிவு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் புகழ்பெற்றசொற்பொழிவாளர்கள் கலந்துகொண்டு திருப்பாவை சொற்பொழிவு நிகழ்த்தினர்.

நாடு முழுவதும் 233 மையங்களில் திருப்பாவை சொற்பொழிவு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஆந்திராவில் 76 மையங்களிலும், தெலுங்கானாவில் 57 மையங்களிலும், தமிழ்நாட்டில் 73 மையங்களிலும், கர்நாடகாவில் 21 மையங்களிலும், பாண்டிச்சேரியில் 4 மையங்களிலும், புதுதில்லியில் 4 மையங்களிலும், ஒடிசாவில் தலா ஒரு மையத்திலும் திருப்பாவை சொற்பொழிவு நடத்தப்பட்டது. ஏழுமலையான் கோவிலில் மார்கழி மாதத்தில் சுப்ரபாதத்திற்கு மாற்றாக திருப்பாவை பாராயணம் செய்யப்பட்டது.

திருப்பதி கே.டி.சாலையில் உள்ள அன்னமாச்சார்யா காலமந்திரம் மற்றும் வரதராஜ சுவாமி கோவிலில் திருப்பாவை சொற்பொழிவு பாராயணம் நடைபெற்றது.

கடந்த மாதம் 16ம் தேதி தொடங்கிய இந்த நிகழ்ச்சிகள் மார்கழி கடைசி நாளில் நிறைவு பெற்றன.

மார்கழி மாத நிறைவு விழாவையொட்டி, திருப்பதி அன்னமாச்சார்யா கலாமந்திரத்தில் இன்று சுவாமி-ஆண்டாள் திருக்கல்யாண உற்சவம் நடைபெற்றது. இதையொட்டி ஆண்டாள் (கோதை) மற்றும் ரங்கநாத சுவாமி உற்சவர்கள் மேடையில் எழுந்தருளினர். பின்னர், வேத மந்திரங்கள் முழங்க, அன்னமாச்சார்யா திட்டக் கலைஞர்களின் குரல் இசைக்கு மத்தியில் திருக்கல்யாணம் நடைபெற்றது.

# காஷ்மீரில் வாட்டி எடுக்கும் குளிர்; ஸ்ரீநகரில் -5.2 டிகிரி வெப்பநிலை பதிவு

ஸ்ரீநகர், ஜன.17:

ஜம்மு காஷ்மீரில் கடந்த சில நாட்களாக கடும் குளிர் பொதுமக்களை வாட்டி எடுத்து வருகிறது. இதனால் பெரும்பாலான மக்கள் வீடுகளிலேயே முடங்கியுள்ளனர். அவர்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. காஷ்மீரின் தலைநகரான ஸ்ரீநகரில் வெப்பநிலை மிகவும் குறைந்து -5.2 செல்சியஸ் அளவாக பதிவானது. அதிகாலை நேரங்களில் அடர்த்தியான வெண்பனி காணப்பட்டது. பனியால் சூழப்பட்ட குல்மார்க் பகுதியில் வெப்பநிலை ஜம்முவை விட சுமார் 8 டிகிரி குறைந்துள்ளது. தால் ஏரி உள்ளிட்ட பல்வேறு நீர்நிலைகள் உறைந்து காணப்படுகின்றன. இந்நிலையில் அடுத்த வாரம் காஷ்மீரின் சமவெளிகளிலும், உயரமான பகுதிகளிலும் பனிப்பொழிவு இருக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. குளிரை சமாளிக்க பொதுமக்கள் தங்கள் வீடுகளிலும், பொது இடங்களிலும் நெருப்பை மூட்டி குளிர் காய்ந்து வருகின்றனர்.

# ஜனநாயகன் பட வழக்கு: மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்தது சுப்ரீம் கோர்ட்டு



புதுடெல்லி, ஜன.17:

நடிகர் விஜய், நடிகைகள் பூஜா ஹெக்டே, மமிதா பைஜூ உள்ளிட்டோர் நடித்துள்ள 'ஜனநாயகன்' படத்துக்கு தணிக்கை சான்றிதழ் வழங்க மறுத்து, அந்த படத்தை மறுஆய்வு குழுவுக்கு தணிக்கை வாரியம் கடந்த 5-ந்தேதி பரிந்துரை செய்தது.

இதை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில், அந்த படத்தை தயாரித்துள்ள கே.வி.என். புரோடக்ஷன் நிறுவனம் தொடர்ந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி, 'ஜனநாயகன்' படத்தை மறுஆய்வு குழுவுக்கு பரிந்துரை செய்த தணிக்கை வாரிய தலைவரின் உத்தரவை ரத்துசெய்கிறேன். இந்த படத்துக்கு தணிக்கை சான்றிதழை உடனடியாக வழங்க வேண்டும்' என உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை எதிர்த்து தணிக்கை வாரியம் உடனடியாக தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை விசாரித்த சென்னை ஐகோர்ட்டு டிவிஷன் பெஞ்ச், தனி நீதிபதி தீர்ப்புக்கு தடை விதித்தது.

இதனால் ஜனநாயகன் பட தயாரிப்பு நிறுவனம் சுப்ரீம் கோர்ட்டை நாடியது.

ஐகோர்ட்டு உத்தரவை நிறுத்திவைத்து ஜனநாயகன் படத்துக்கு தணிக்கை சான்றிதழ் வழங்க உத்தரவிட வேண்டும் என பட தயாரிப்பு நிறுவனம் தனது மனுவில் கூறியிருந்தது. இந்த மேல்முறையீட்டு மனு (வியாழக்கிழமை) விசாரணைக்கு வந்தது.

அப்போது இந்த மனுவை விசாரிக்க விருப்பம் இல்லை எனக்கூறிய நீதிபதிகள் ஐகோர்ட்டை அணுகுமாறு உத்தரவிட்டு மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

மேலும் ஜனவரி 20 ஆம் தேதிக்குள் ஐகோர்ட்டு வழக்கை விசாரித்து முடிவு எடுக்க வேண்டும் எனவும் சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால், ஜனநாயகன் படம் பொங்கலுக்கு ரிலீஸ் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விஜய் ரசிகர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

# கேரளாவில் களைகட்டிய பொங்கல் கொண்டாட்டம்

திருவனந்தபுரம், ஜன.17:

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகை தமிழர் உள்ள உலகின் அனைத்து பகுதிகளிலும் இன்று உற்சாகமாக கொண்டாடப்பட்டு வருகிறது. கேரளாவிலும் பொங்கல் பண்டிகை வழக்கமான குதூகலத்துடன் கொண்டாடப்பட்டது. கேரளாவில் பணிபுரியும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஐஏஎஸ், ஐபிஎஸ் உள்பட உயரதிகாரிகள் திருவனந்தபுரத்தில் பொங்கல் விழாவை சிறப்பாக கொண்டாடினர். கேரள வருவாய்த்துறை செயலாளர் ராஜமாணிக்கத்தின் இல்லத்தில் நடந்த இந்த சேரநாட்டு பொங்கல் விழாவில் ஐஏஎஸ் அதிகாரிகளான தமிழ்நாட்டைச் சேர்ந்த தர்மலஸ்ரீ, ரஞ்சித், ஸ்ரீ லட்சுமி, போலீஸ் ஐஜிக்களான நிஷாந்தினி, அஜீதா பேகம், சதீஷ் பினோ மற்றும் உயர் அதிகாரிகள் தங்கள் குடும்பத்தினருடன் பங்கேற்றனர்.

# அமெரிக்க அதிபர் ட்ரம்ப்புக்கு தனது ‘அமைதி’ நோபல் பரிசை வழங்கிய மச்சாடோ!

**வாஷிங்டன், ஜன.17:**

வாஷிங்டன்: வெனிசுலா நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் மரியா கொரினா மச்சாடோ, கடந்த ஆண்டு தான் பெற்ற அமைதிக்கான நோபல் பரிசுக்கான பதக்கத்தை அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப்புக்கு வழங்கியுள்ளார்.

கடந்த ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு வெனிசுலா நாட்டில் ஜனநாயகம் மலர போராடிய மரியா கொரினா மச்சாடோவுக்கு அறிவிக்கப்பட்டது. அப்போதே அந்தப் பரிசை ட்ரம்ப்புக்கு அர்ப்பணிப்பதாக அவர் தெரிவித்திருந்தார். இந்நிலையில், அதிபர் ட்ரம்ப்பை வெள்ளை மாளிகையில் அவர் சந்தித்து பேசினார். அப்போது தனது நோபல் பரிசை ட்ரம்ப்புக்கு அவர் வழங்கினார்.



“அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வசம் அமைதிக்கான நோபல் பரிசை நான் வழங்கினேன். இது எங்கள் தேசத்தின் சுதந்திரத்துக்காக அவரது தனித்துவ அர்ப்பணிப்பிற்கான அங்கீகாரம்” என மரியா கொரினா மச்சாடோ தெரிவித்தார். வெள்ளை மாளிகைக்கு வெளியே பத்திரிகையாளர்களை அவர் சந்தித்தார். அப்போது அவரது ஆதரவாளர்கள் அங்கு திரண்டது குறிப்பிடத்தக்கது.

நோபல் பரிசை தனக்கு வழங்கிய மச்சாடோவுக்கு சமூக வலைதள பதிவு மூலம் அதிபர் ட்ரம்ப் நன்றி சொல்லியுள்ளார். ‘நோபல் பரிசை பெற்றவர்கள் அதை அடுத்தவருக்கு பகிரவோ, மாற்றவோ முடியாது’ என இந்த விவகாரம் தொடர்பாக நோபல் கமிட்டி குழு தெரிவித்துள்ளது.

“எனது 2-வது ஆட்சி காலத்தில் 8 மாதத்தில் 8 போர்களை நிறுத்தியதால், நோபல் பரிசு பெற, வரலாற்றில் என்னைவிட தகுதியானவர் வேறு யாரும் இல்லை. ஒபாமாவுக்கு நோபல் பரிசு கிடைத்தது. அவருக்கு அதைபற்றி எதுவுமே தெரியாது. அவருக்கு எதற்காக நோபல் பரிசு வழங்கப் பட்டது? எதுவும் செய்யாமல் அமெரிக்க அதிபராக பதவியேற்றவுடனே, அவர் நோபல் பரிசு பெற்றார்” என்று அண்மையில் கூட நோபல் பரிசு குறித்து தனது விருப்பத்தை ட்ரம்ப் வெளிப்படுத்தி இருந்தார்.

இந்நிலையில், இப்போது அவர் வசமாகியுள்ளது நோபல் பரிசு. “மரியா கொரினா மச்சாடோ அற்புதமானவர். பல்வேறு சவால்களை கடந்து வந்துள்ளார். அவர் பெற்ற அமைதிக்கான நோபல் பரிசை நான் மேற்கொண்ட பணிக்காக எனக்கு வழங்கினார். இதுவொரு பரஸ்பர மரியாதையின் மீதான அற்புத செயலாகும். மரியாவுக்கு நன்றி” என சமூக வலைதள பதிவில் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

## ஈரானியர்களை படுகொலை செய்தவர் டிரம்ப்

**தெஹ்ரான், ஜன.17:**

ஈரான் அரசை கவிழ்க்க டிரம்ப் முயற்சித்து வருகிறார். இந்நிலையில் எங்கள் மக்களை படுகொலை செய்த வர் டிரம்ப் தான் என அவருக்கு கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளது ஈரான். அமெரிக்காவின் தடைகளால் ஈரானில் பொருளாதார நெருக்கடி மிகத் தீவிரமடைந்துள்ளது. வாழ்க் கைச் செலவுகளை எதிர்கொள்ள முடி யாமல் மக்களும் அரசுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந் நிலையில் அரசு நிறுவனங்களைக் கைப்பற்றுங்கள் என ஈரான் மக்க ளுக்கு அழைப்பு விடுத்த டிரம்ப், உங்க ளுக்கான உதவி வந்து கொண்டிருக்கி றது என்றும் ஆட்சிக் கவிழ்ப்புக்கு அழைப்பு விடுத்துள்ளார். இதனால் தற்போது எந்நேரமும் ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் தாக்குதல் நடத்தலாம் என்ற பதற்றம் உருவாகி யுள்ளது. இந்நிலையில் அந்நாட்டின் தேசிய பாதுகாப்புக் குழுச் செயலாளர் அலி லாரிஜானி, டிரம்ப்புக்கு கடும் எதிர்ப் பைத் தெரிவித்துள்ளார். ஈரான் மக்களை படுகொலை செய்ததில் முதன்மையான நபர் டிரம்ப், இரண்டாவது நேதன்யாகு என அவர் குறிப்பிட்டுள்ளார். தற்போது அந்நாட்டில் 2,500 க்கும் அதிகமான நபர்கள் பலியாகியுள்ள தாகவும், 18,000 த்துக்கும் அதிக மான நபர்கள் கைது செய்யப்பட்டுள்ள தாகவும் அமெக்க ஆதரவு மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

## வங்கதேசத்தில் தேர்தல் பிரச்சாரம்

**டாக்கா,ஜன.17:**

ஜனவரி 22 முதல் வங்கதேசத்தில் நாடாளு மன்றத் தேர்தல் பிரச்சாரம் துவங்க உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2024 ஆகஸ்ட் மாதம் மாணவர் போராட்டத்தின் காரணமாக ஷேக் ஹசீனா தலை மையிலான அவாமி லீக் அரசு பதவி விலகியது. அதன் பிறகு அமைக்கப்பட்ட முகமது யூனுஸ் தலைமையிலான வங்கதேச இடைக்கால அரசு தேர்தலை நடத்தாமல் தாமதித்து வந்தது. இச்சூழலில் அந்நாட்டின் மதவெறி சக்திகள் தொடர்ந்து சமூகப் பதற்றத்தையும் வன்முறைகளை யும் தூண்டி நாட்டின் அமைதியை குலைத்து வந்தன. தற்போது பிப்ரவரி 12-ஆம் தேதி பொதுத் தேர்தல் நடைபெற உள்ளது.

## லண்டனில் கடத்தப்பட்ட பெண்ணை பாகிஸ்தான் கும்பலிடம் இருந்து போராடி மீட்ட சீக்கியர்கள்

**லண்டன், ஜன.17:**

இங்கிலாந்தின் மேற்கு லண்டனில் உள்ளது ஹவுன்ஸ்லோ பகுதி. இங்கு 20 பள்ளிகள் உள்ளன. பாகிஸ்தானைச் சேர்ந்த சிலர் இந்தப் பள்ளிகளில் பயிலும் டீன் ஏஜ் பெண்களை குறிவைத்து காதல் வலையில் சிக்க வைக்கின்றனர். பின்னர் இவர்களை தங்கள் குழுவினரின் பாலியல் தேவைகளுக்கு பயன்படுத்துகின்றனர். இந்த இளம் பெண்களை ஐஎஸ் தீவிரவாத இயக்கத்தில் சேர்க்கும் முயற்சிகளும் நடைபெறுகின்றன.

இந்தக் கும்பல் இங்கிலாந்து பெண்களை மட்டும் அல்லாமல் லண்டனில் உள்ள சீக்கிய பெண்களையும் தங்கள் வலையில் சிக்க வைக்க முயற்சிக்கின்றனர். லண்டன் ஹவுன்ஸ்லோ பகுதியைச் சேர்ந்த சீக்கிய டீன் ஏஜ் பெண்ணுக்கு, சுமார் 35 வயதுக்கு மேற்பட்ட நபர் ஒருவர் வலை விரித்துள்ளார். அந்தப் பெண்ணுக்கு 13-வயது இருக்கும்போதே அவர் பழகியுள்ளார். அந்தப் பெண்ணுக்கு 16-வயது ஆனவுடன் அவரை வீட்டை விட்டு வெளியேறும்படி அவரை காதலித்த நபர் தூண்டியுள்ளார். இவரிடமிருந்து சீக்கிய இளம் பெண்ணை மீட்கும் முயற்சியில் ‘ஏகே மீடியா 47’ என்ற சீக்கிய குழுவைச் சேர்ந்த சுமார் 200 பேர் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து குற்றவாளியை போலீஸார் கைது செய்தனர். இதுபோன்ற சம்பவங்கள் லண்டனில் பல நடந்து வருகின்றன.

## “கிரீன்லாந்தை அமெரிக்காவுடன் இணைப்பதே சிறந்தது” - அதிபர் ட்ரம்ப் மீண்டும் அறிவிப்பு

**வாஷிங்டன், ஜன.17:**

பிரான்ஸ், ஜெர்மனி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளின் பரப்பளவுக்கு இணையாக ஆர்டிக் பகுதியில் அமைந்துள்ள உலகின் மிகப் பெரிய தீவாக கிரீன்லாந்து உள்ளது. இது டென்மார்க் நாட்டின் கீழ் தன்னாட்சி பிராந்தியமாக உள்ளது. கிரீன்லாந்தை சுற்றியுள்ள கடல் பகுதிகள் தற்போது ரஷ்யா, சீன கப்பல்களால் நிரம்பியுள்ளதாகவும் அதனால் பாதுகாப்பு காரணங்களுக்காக அமெரிக்காவுடன் கிரீன்லாந்து இணைக்கப்படும் என்றும் அதிபர் டொனால்டு ட்ரம்ப் அண்மையில் அறிவித்தார். இதற்கு டென்மார்க் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

இந்த விவகாரம் தொடர்பாக சமூக வலைதளத்தில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் நேற்று கூறும்போது, “அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் கிரீன்லாந்து இருப்பதைத் தவிர வேறு எதையும் ஏற்றுக்கொள்ள முடியாது. கிரீன்லாந்தை அமெரிக்காவுடன் இணைப்பதே சிறந்தது” என்றார்.

## ‘இந்தமுறை குண்டு இலக்கை தவறவிடாது’ ட்ரம்ப்புக்கு ஈரான் எச்சரிக்கை!

**தெஹ்ரான், ஜன.17:**

கடந்த 2024ம் ஆண்டு அமெரிக்காவில் நடந்த ஒரு துப்பாக்கிச் சூட்டில் டொனால்டு ட்ரம்ப் நூலிழையில் உயிர் தப்பிய படத்துடன், ‘இந்த முறை குண்டு இலக்கை தவறவிடாது’ என எழுதப்பட்ட வாசகத்துடன் ஈரானில் நடைபெற்ற ஊர்வலம் குறித்த செய்தியை ஈரான் அரசு தொலைக்காட்சி நேற்று ஒளிபரப்பியது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது, டொனால்டு ட்ரம்ப்பக்கான ஈரானின் நேரடி எச்சரிக்கையாகக் கருதப்படுகிறது.

ஈரான் ஆட்சியாளர்களுக்கு எதிராக அந்நாட்டில் கடந்த சில வாரங்களாக போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதில், போராட்டக்காரர்கள் தரப்பில் 2,500-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். பாதுகாப்புப் படையினர் தரப்பில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்ட பாதுகாப்புப் படையினரின் உடல்களின் இறுதி ஊர்வலம் தெஹ்ரானில் நடைபெற்றது. இதில், ஏராளமானோர் கலந்து கொண்டனர். ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களில் பலர் அந்த நாட்டின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனியின் புகைப்படங்களை ஏந்தியவாறு பங்கேற்றனர். மேலும் பலர், அமெரிக்காவுக்கு மரணம் என அச்சிடப்பட்ட பதாகைகளை ஏந்திச் சென்றனர்.

இதில் பங்கேற்ற ஒரு நபர், கடந்த 2024-ம் ஆண்டு அமெரிக்காவின் பென்சில்வேனியாவின் பட்லரில் நடந்த ஒரு பிரச்சாரக்கூட்டத்தில் டொனால்டு ட்ரம்ப் பேசிக்கொண்டிருக்கும்போது நிகழ்ந்த துப்பாக்கிச் சூடு குறித்த புகைப்படத்தை ஏந்தியவாறு பங்கேற்றார். அந்த புகைப்படத்தில், ‘இந்த முறை குண்டு இலக்கை தவறவிடாது’ என பாரசீக மொழியில் எழுதப்பட்ட வாசகம் எழுதப்பட்டிருந்தது.

இந்த வீடியோ, அரசு கட்டுப்பாட்டில் உள்ள தொலைக்காட்சியான இஸ்லாமிய குடியரசு ஈரான் செய்தி நெட்வொர்க் என்ற தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது. இது, டொனால்டு ட்ரம்ப்புக்கான ஈரானின் நேரடி எச்சரிக்கையாகப் பார்க்கப்படுகிறது. டொனால்டு ட்ரம்ப்புக்கு எதிராக கடந்த காலங்களில் நடந்த பல்வேறு சம்பவங்களின் பின்னணியில் ஈரான் அரசு இருந்ததாக குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

வெளிநாடுகளில் நிகழ்ந்த பல்வேறு கொலைச் சதித்திட்டங்களுடனும் ஈரான் அரசு இதற்கு முன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. அவை, பெரும்பாலும் ஈரானிய அதிருப்தியாளர்களை இலக்காகக் கொண்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈரானில் தொடர் பதற்றம்: இந்தியர்களை மீட்க மத்திய அரசு தீவிரம்

**தெஹ்ரான், ஜன.17:**



ஈரானில் நிலவும் உள்நாட்டுப் போராட்டங்கள் மற்றும் அங்கு நிலவும் பதற்றமான சூழலைக் கருத்தில் கொண்டு, இந்தியர்களைப் பாதுகாப்பாக தாயகம் அழைத்து வர மத்திய வெளியுறவு அமைச்சகம் தீவிர ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

ஈரானில் உள்ள இந்தியர்களைப் பாதுகாப்பாக மீட்பதற்குத் தேவையான அனைத்து வழிமுறைகளையும் கையாளுமாறு வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ஆகியோருக்குப் பிரதமர் நரேந்திர மோடி உத்தரவிட்டுள்ளார்.

முதற்கட்டமாக அங்குள்ள இந்தியர்கள் விமானங்கள் மூலம் வெளியேற அறிவுறுத்தப்பட்டுள்ளனர். நிலைமை மேலும் மோசமடைந்தால், அவர்களை மீட்க இந்திய விமானப்படை மற்றும் இந்தியக் கடற்படை கப்பல்கள் மற்றும் விமானங்கள் பயன்படுத்தப்படும் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஈரானில் உள்ள இந்தியர்கள் அங்கு கிடைக்கும் எந்தவொரு போக்குவரத்து வசதியைப் பயன்படுத்தியாவது உடனடியாக நாட்டைவிட்டு வெளியேறுமாறு தெஹ்ரானில் உள்ள இந்தியத் தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அங்குள்ள இந்தியர்களின் பாதுகாப்பு குறித்து ஆலோசித்துள்ளார்.

ஈரானில் மோசமடைந்து வரும் பொருளாதாரம் மற்றும் தற்போதைய ஆட்சிக்கு எதிராக நடைபெற்று வரும் போராட்டங்களில் ஏராளமானோர் உயிரிழந்துள்ளனர்.

இது ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே பதற்றத்தை அதிகரித்துள்ளது.

இந்தியக் குடிமக்கள் மறு உத்தரவு வரும் வரை ஈரானுக்குப் பயணம் செய்வதைத் தவிர்க்குமாறு மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

## 150 ஆண்டுக்குப் பிறகு ஸ்பெயினின் மகாராணியாகிறார் லியோனர்!

**மாட்ரிட், ஜன.17:**



ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் ஸ்பெயின், சுமார் 150 ஆண்டுகளுக்குப்பிறகு தனது முதல் மகா ராணியைக் காண இருக்கிறது. தற்போதைய மன்னர் ஆறாம் பிலிப் மற்றும் ராணி லெட்டிசியாவின் மூத்த மகளான 20 வயது இளவரசி லியோனர், ஸ்பெயினின் அடுத்த வாரிசாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இதன்மூலம் 1800-களில் ஆட்சி செய்த இரண்டாம் இசபெல் லாவுக்குப் பிறகு லியோனர் ஸ்பெயினின் மகாராணியாவார் என எதிர்பார்க்கப்படுகிறது. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து, ஸ்பெயினின் மகுடம் ‘ஹவுஸ் ஆஃப் போர்பன்’ (HOUSE OF BOURBON) வம்சத்தின் வசம் உள்ளது. பிரான்சிஸ்கோ பிராங்கோவின் சர்வாதிகார ஆட்சிக்குப் பிறகு, 1975-ல் முதலாம் ஜுவான் கார்லோஸ் தலைமையில் முடியாட்சி மீண்டும் நிலைநாட்டப்பட்டது. அவர் 2014-ல் தனது மகன் ஆறாம் பிலிப்புக்காக தனது பதவியைத் துறந்தார். மன்னர் பிலிப் 2004-ல் பத்திரிகையாளரான லெட்டிசியாவைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு லியோனர் உட்பட இரு மகள்கள் உள்ளனர்.

## ஈரானில் கைதானோருக்கு மரண தண்டனை: நீதித் துறை தலைவர் எச்சரிக்கை

**டெஹ்ரான், ஜன.17:**

ஈரான் மதத் தலைவர் அயத்துல்லா அலி காமேனிக்கு எதிராக கடந்த டிசம்பர் 28-ம் தேதி தலைநகர் டெஹ்ரானில் மிகப்பெரிய போராட்டம் வெடித்தது. மதத் தலைவர் காமேனி, அதிபர் மசூத் பெசேஸ்கியான் பதவி விலக வலியுறுத்தி நடைபெறும் இந்தப் போராட்டம், நாடு முழுவதும் பரவி உள்ளது. பல்வேறு அமைப்புகள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன. இதனிடையே போராட்டத்தை ஒடுக்க ராணுவ வீரர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தி வருகின்றனர். இதில் இதுவரை 2,572 பேர் உயிரிழந்துள்ளதாக அமெரிக்காவைச் சேர்ந்த மனித உரிமை அமைப்பின் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த எண்ணிக்கை கடந்த பல தசாப்தங்களில் இல்லாத அளவு அதிகம் என கூறப்படுகிறது. இதனிடையே, போராட்டத்தில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிரான வழக்குகள் விரைவாக விசாரிக்கப்பட்டு மரண தண்டனை வழங்கப்படும் என்று ஈரானின் நீதித்துறை தலைவர் கோலம்ஹொசைன் மோசேனி-எஜெய், சூசகமாக தெரிவித்துள்ளார். தண்டனைகளை தாமதப்படுத்துவது அதன் தாக்கத்தைக் குறைத்துவிடும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஈரானின் இந்த அறிவிப்பு குறித்து அமெரிக்க அதிபர் ட்ரம்ப் சமூக வலைதளத்தில், “ஈரான் அரசு போராட்டக்காரர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றினால், அமெரிக்கா மிக வலுவான நடவடிக்கையை எடுக்கும், உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், ஈரானுடன் இனி எந்த பேச்சுவார்த்தையும் இல்லை” என பதிவிட்டுள்ளார்.

## வரலாற்றில் முதன்முறையாக!! உடல்நலக் குறைவால் முன்கூட்டியே பூமி திரும்பிய விண்வெளி வீரர்கள்!

**வாஷிங்டன், ஜன.17:**

விண்வெளி வரலாற்றில் முதன்முறையாக திட்டமிடப்பட்ட நாள்களுக்கு முன்னதாகவே உடல்நலக் குறைவால் நாசா விண்வெளி வீரர்கள் பூமி வந்தடைந்தனர்.

நாசாவை சேர்ந்த மைக் பின்க், சேனா கார்ட்மேன், ஜப்பானை சேர்ந்த கிமியா யூயி, மற்றும் ரஷிய விண்வெளி வீரர் ஒலெக் ஆகிய நால்வரும் சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கி, ஆய்வுகள் மேற்கொள்வதற்காக 2025-ல் ஆகஸ்ட் முதல் தேதியில் ஸ்பேஸ் எக்ஸ் க்ரூ டிராகன் விண்கலம் மூலம் விண்வெளி நிலையம் சென்றடைந்தனர்.

ஆறு மாதங்கள் தங்கி, ஆய்வுகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த நிலையில், நால்வரில் ஒருவருக்கு ஜன. 7 ஆம் தேதியில் திடீர் உடல்நலக் குறைவு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. இதனையடுத்து, அன்றைய நாளில் மேற்கொள்ளவிருந்த நடைப்பயணம் ரத்து செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, நால்வரையும் பூமிக்கு திரும்புமாறு நாசா முடிவெடுத்து, நால்வரும் இன்று (ஜன. 15) காலை பத்திரமாக பூமி வந்தடைந்தனர். விண்வெளி வீரர்கள் முன்கூட்டிய வருகை, அவசர நிலை இல்லை; ஒரு முன்னெச்சரிக்கையான நடவடிக்கையே என்று விவரித்த நாசா, யாருக்கு உடல்நலக் குறைவு என்பதையும், எம்மாதிரியான பிரச்னை என்பதையும் தனியுரிமை காரணங்களால் வெளியிடவில்லை.

# பொருளாதார ஏற்றத்தாழ்வே இளைஞர்களின் அடிப்படைக் கவலை

**ஜெனீவா, ஜன.17:**



ஏழை, பணக்காரர்களுக்கு இடையே நிலவி வரும் மிகப்பெரிய பொருளாதார ஏற்றத்தாழ்வே உலகம் முழுவதும் உள்ள இளைஞர்களின் அடிப்படைக் கவலையாக உள்ளது என்ற உண்மை வெளியாகியுள்ளது. வேர்ல்டு எகனாமிக் ஃபோரம் யூத் பல்ஸ் 2026 அறிக்கை தற்போது வெளியாகியுள்ளது. இந்த அறிக்கை வேகமாக மாறிவரும் பொருளாதாரம், அரசியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் மாற்றங்களை தற்போதைய இளம் தலைமுறை எவ்வாறு எதிர் கொள்கிறது என்பதை ஆராய்ந்தது. 144 நாடுகளைச் சேர்ந்த 18-30 வயதுக்குட்பட்ட சுமார் 4,600 இளைஞர்களிடம் நடத்தப்பட்ட இந்த ஆய்வில், 48.2 சதவிகித இளைஞர்கள் ‘பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்து வருவதே’ தங்கள் எதிர்காலத்தை பெரு மளவு பாதிக்கும் முக்கிய பொருளாதாரப்பிரச்சனையாக உள்ளது என தெரிவித்துள்ளனர்.

57 சதவிகிதத்துக்கும் அதிகமான இளைஞர்கள் தங்களின்மனஅழுத்தம்அல்லது கவலைக்கு பொருளாதாரப் பிரச்சனைகளே முக்கியக் காரணம் என்று கூறியுள்ளனர். அதாவது பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையே அதிகரித்து வரும் இடைவெளியே இளைஞர்களின் முதன்மையான பொருளாதாரக் கவலையாக உள்ளது என தெரிய வந்துள்ளது. இன்றைய இளைஞர்கள் வெறும் விமர்சனம் செய்வதோடு நின்றுவிடாமல், தாங்களே தேர்தலில் போட்டியிட்டு அரசியலில் மாற்றத்தைக் கொண்டுவர விரும்புகிறார்கள். அதாவது இளைஞர்கள் அரசியலில் ஆர்வம் காட்டவில்லை என்ற எண்ணத்தை மாற்றும் வகையில், 36 சதவிகிதமானவர்கள் தாங்கள் தேர்தலில் போட்டியிட வாய்ப்புள்ளதாகத் தெரிவித்துள்ளனர். 56 சதவிகிதத்துக்கும் அதிகமான இளைஞர்கள் காலநிலை மாற்றம் உலகிற்கு உள்ள மிகப்பெரிய அச்சுறுத்தல் என அடையாளம் கண்டுள்ளனர். இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பை உருவாக்குதல் (57.2%), தரமான கல்வி (46.1%) மற்றும் மலிவுவிலை வீட்டுவசதி (32.2%) ஆகியவை தங்களுக்கு அதிகாரம் அளிக்கும் முக்கியக் காரணிகளாக இருக்கிறது என இளைஞர்கள் கருதுகின்றனர். செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பம் ஆரம்பக்கட்ட பணிநிலை வேலைவாய்ப்புகளைக் குறைக்கிறது என மூன்றில் இரண்டு பங்கு இளை ஞர்கள் தெரிவித்துள்ளனர்.

சுமார் 60 சதவிகித இளைஞர்கள் தங்கள் திறன்களை மேம்படுத்தத் தொடர்ந்து செயற்கை நுண்ணறிவுக் கருவி களைப் பயன்படுத்துகின்றனர். இந்த ஆய்வின் முடிவுகள் சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் ஜனவரி 19 முதல் 23 வரை நடைபெறவுள்ள உலகப் பொருளாதார மன்றத்தின் வருடாந்திரக்கூட்டத்தில்விரிவாக விவாதிக்கப்பட உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.